
Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර | பக்கம் 24 ரூபா 30.00
ஏப்ரல் 11 - 17, 2013


# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1009



## தடுமாறி தவிக்கும் இந்திய தேசம்!





## வெளுக்கிறது கூட்டமைப்பின் சாயம்!



## வடகொரியா போர்ப் பிரகடனம்!

## ஆடி செவ்வாய் விரதம்

ஆடி செவ்வாய்க்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து, மஞ்சள் பூசி குளித்து, விரதம் இருந்து அம்மனை வழிபட்டால் மாங்கல்ய பாக்கியம் கூடும் என்று பெண்கள் நம்புகின்றனர். ஆடிமாத செவ்வாயன்று பெண்கள் ஔவையார் விரதம் இருப்பர். அப்போது குறிப்பிட்ட நாளில் இரவு 10.30 மணிக்கு மேல் அனைவரும் தூங்கியபின் விரதம் இருக்கும் பெண்கள் ஒன்று கூடுவர். மூத்த சுமங்கலிகள் வழிகாட்ட, இளம் பெண்கள் விரதத்தை தொடங்குவர். பின்னர் பச்சரிசி மாவில் சர்க்கரை சேர்த்து ஒருவித வடிவம் கொண்ட கொளுக்கட்டை தயாரிப்பார்கள்.

அன்றைய தினம் நிவேதனங்கள் எதிலும் உப்பு சேர்க்க மாட்டார்கள். அனைத்தும் தயாரானதும் ஔவையார் அம்மனை நினைத்து விளக்கேற்றி பூஜைகள் செய்வர். அதைத் தொடர்ந்து ஔவையாரின் கதையை ஒருவர் சொல்ல அனைவரும் அதை கேட்பர். இறுதியாக விரத நிவேதனங்கள் அனைத்தையும் பெண்களே உண்பார்கள். இதில் ஆண் குழந்தைகள், ஆண்களையோ, கலந்துகொள்ளவோ, பார்வையிடவோ அனுமதிப்பதில்லை. பூசை முடிந்தபின் வழிபாடு நடந்த இடத்தை சுத்தம் செய்துவிடுவர்.

இதை கடைப்பிடித்தால் குடும்ப ஒற்றுமை நிலைக்கும், திருமணம் கைகூடும், குழந்தை பாக்கியம் கிடைக்கும் என நம்பப்படுகிறது.

## ஆன்மீகம்

## அன்பில் கடவுள் நிறைந்திருப்பார்

கடவுள் நம்மீது அன்பு கொண்டார் என்றால், நாமும் ஒருவர் மற்றவர்மீது அன்பு கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். கடவுளை எவரும் என்றுமே கண்டதில்லை. நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டுள்ளோம் என்றால் கடவுள் நம்மோடு இணைந்திருப்பார். அவரது அன்பு நம்மிடம் நிறைவு பெறும். அவர் தமது ஆவியை நமக்கு அருளியதால் நாம் அவரோடு இணைந்திருக்கிறோம் எனவும் அவர் நம்மிடம் இணைந்திருக்கிறார் எனவும் அறிந்துகொள்கிறோம்.

தந்தை தம் மகனை உலகிற்கு மீட்பராக அனுப்பினார் என்பதை நாங்களே கண்டறிந்தோம் சான்றும் பகர்கிறோம். இயேசுவே இறைமகன் என ஏற்று அறிக்கையிடுபவரோடு கடவுள் இணைந்திருக்கிறார் அவரும் கடவுளோடு இணைந்திருக்கிறார். கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை அறிந்துள்ளோம் அதை நம்புகிறோம். கடவுள் அன்பாய் இருக்கிறார்.

அன்பில் நிலைத்திருக்கிறவர் கடவுளோடு இணைந்திருக்கிறார். கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார். கடவுள் இருப்பதுபோல் நாமும் இவ்வுலகில் இருக்கிறோம்.

எனவே தீர்ப்பு நாளில் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்போம். இவ்வாறு நம்மிடையே உள்ள அன்பு நிறைவடைகிறது. அன்பில் அச்சத்திற்கு இடமில்லை. மாறாக நிறை அன்பு அச்சத்தை அகற்றிவிடும். ஏனெனில் அச்சத்தில் தண்டனை உணர்வு அடங்கியுள்ளது அச்சம் கொண்டுள்ளவரிடம் அன்பு முழு நிறைவு அடையாது.

## பிரார்த்தனைகள்

ஒரு மனிதன் தானே தன்க்குச் செய்துகொள்ளும் அநீதங்களை அறிவதில்லை. அதை அவன் பதிந்து வைத்திருப்பதுமில்லை. ஆனால் அவற்றை அல்லாஹ் அவனது பதிவேட்டில் பதிந்து நாளை மறுமையில் எடுத்துக்காட்டுகிறபோதுதான் மனிதன் கை சேதப்படுகிறான். இந்த கை சேதத்திற்கு அவன் ஆளாகிவிடாமல் இருப்பதற்குப் பின்வரும் பிரார்த்தனைகள் வழி செய்யும்.

யா அல்லாஹ்! எனது வாழ்க்கைக்கு அத்திபாரமும், உத்தரவாதமுமான என்னுடைய தீனை எனக்குச் சீராக்கி வைப்பாயாக. என்னுடைய வாழ்க்கை அமைந்திருக்கின்ற இந்த துன்யாவை எனக்கு நல்லதாக ஆக்கித்தருவாயாக. நான் திரும்பிச் செல்ல இருக்கின்ற மறுமையை எனக்கு உரித்தாக்கி வைப்பாயாக. உலகத்தில் நான் வாழ்கின்ற வாழ்க்கையை. நன்மையை அதிகப்படுத்திக்கொள்ளும் வாழ்க்கையாகவும். என்னுடைய மரணத்தை எல்லாவிதமான தீமைகளிலிருந்தும் ஓய்வுபெற்றுக் கொள்கின்ற மரணமாகவும் ஆக்கிவைப்பாயாக.

யா அல்லாஹ்! நாளை மறுமையில் நரக நெருப்பின் சோதனையில் இருந்தும், நரக நெருப்பின் வேதனையில் இருந்தும், நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். செல்வத்தின் தீங்குகளிலிருந்தும் வறுமையின் தீங்குகளிலிருந்தும் நான் பாதுகாப்பு தேடுகின்றேன்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல 1006



### பா ராட் டு க் கு ரி ய து

### கவசம்!

தலைக்கவசம் போட்டு
வண்டியோட்டும்
நண்பா - நீ
கற்றுத் தாராயோ இதை
மனிதர்களுக்கும்
கட்டாயத் தேவையென்று???

துஷாந்தினி நிரஞ்சன்
மட்டக்குளிய.

### அட்டகாசம்

முகக்கவசம் அணிந்து
இந்நாய் செய்வதோ
சாகசம்
முகக் கவசமின்றி
மனிதன் புரிவதோ
அட்டகாசம்.

அ.சந்தியாகோ.
கண்டி.




## கவிதைப் போட்டி இல 1009



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.04.2013

கவிதைப் போட்டி இல. 1009 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### என்ன விந்தையோ!

முன்பொரு
கால கட்டத்தில்
சந்திர மண்டலத்தை
தரிசித்துவிட்டு வந்த
லைக்கா எங்கள் இனம்
நவீன யுக்திகள் மிகுந்த
இக்கால கட்டத்தில்
லைவ்வை ஜாலியாய் களிக்க
எங்கள் இன வழியில்
நான் உந்துருளி ஓட்டுவதில்
என்ன விந்தை கண்டீர்!

க.கமால்தீன், ஏறாவூர்-03.

### இன்றைய உலகம்

புதுமைகள் நிறைந்த
இன்றைய உலகிலே
இந்த மிருகம்
வாகனமோட்டுவதென்ன...
எது வேண்டுமானாலும்
நடக்கலாம்
ஆச்சரியப்படுவதற்கில்லை.

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை

### பொருளாதாரம்

நவீன யுகத்தில்
நாய்கள் கூட
நாகரிகம் தேட
நாங்கள்? நடுத்தெருவில்.

எஸ்.பி.பாலமுருகன், பதுளை.

### நவீனம்

நவீனத்தின் உச்சம்
நாயில் தெரிகிறது
மனிதன் இன்னும்
மனப்பால் குடிக்கிறான்
ஐயறிவு ஜீவன்
ஆறறிவை மிஞ்சுகிறது
மனிதனிடம் இன்னும்
மனிதத்தின்
மனப்பான்மை வளரவில்லை!

A.பாரிஸ், மிகிந்தலை.

### கவன ஈர்ப்பு

பகுத்தறிவற்ற மிருகம்
'உந்துருளி' யில் உட்கார்ந்து
தலைக் கவசம்
அணிந்திருப்பது
பகுத்தறிவுள்ள மனிதனுக்கு
படிப்பினை ஊட்டும்
தலை சிறந்த
கவனயீர்ப்பு.

எம்.சி.கலீல், கல்முனை-05.

### விஞ்ஞானம்!

விஞ்ஞானத்தின் வளர்ச்சி
பல ஓகவைகள் தாண்டிட்ட
போதிலும் - ஐயறிவு ஜீவன்கள்
எங்களைக் கொண்டே
சோதனை போடும்...
உயிரை பணயம் வைத்து
அன்று விண்வெளியில்...
இன்றோ வீதியில்!

எம்.யூ.அல்சாத், ஓட்டமாவடி.

## உங்கள் பக்கம்

### இறங்குதுறை புனரமைக்கப்படுமா?

நயினாதீவு பிரதேசத்தில் மூன்று இறங்குதுறைகள் உள்ள போதிலும் ஒரு வழி இறங்குதுறைக்கான பாலம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நயினாதீவுக்கென நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கு முன்பாகவும், நாகவிகாரைக்கு முன்பாகவும், தெற்குப் பக்கமாக வங்களாவடி பகுதியிலும் இறங்குதுறை அமைந்துள்ள நிலையில் ஆலயத்திற்கு முன்பாகவும் நர்கவிகாரைக்கு முன்பாகவுள்ள இறங்குதுறைகளே தற்போது பயன்படுத்தப்படுகிறது.

வங்களாவடி இறங்குதுறை 30 வருடங்களாக எந்தவித புனரமைப்பும் இன்றி காணப்படுவதால் இவை பயன்படுத்தப்படுவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

நயினாதீவின் தெற்கு பக்கமாக அதிகளவு குடியிருப்புக்கள் அமைந்துள்ள நிலையில் இம்மக்கள் தாம் ஆலயப் பகுதிக்கு வருவதற்கு அதிக பணத்தை செலவழிக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

முன்னைய காலங்களில் இப்பகுதி இறங்குதுறையூடாக படகுச்சேவைகள் இடம்பெற்று வந்தது. இதனால் நயினாதீவு மக்கள் சிரமமின்றி போக்குவரத்தை மேற்கொண்டும் வந்ததாக தெரிவிக்கும் மக்கள் வங்களாவடி இறங்குதுறையும் புனரமைக்கப்படுமிடத்து இம்மக்கள் சீரான போக்குவரத்தினை பெற முடியும் எனவும், இதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் உங்கள் பக்கம் ஊடாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

நயினாதீவு வாழ். மக்கள்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


## வாசகர் சாலை



### ஒய்ந்திடா முரசே!

வாரந்தோறும் வாசக
நெஞ்சங்களை
தன்வசப்படுத்தி வைத்திருக்கும்
என் அபிமான முரசே!
நீ தினந்தோறும் வரமாட்டாயா!
வாசக நெஞ்சங்களின்
துடிப்பான ஆக்கங்களையும்,
மற்றும் நாட்டு நடப்புக்களையும்
மேலும் புதுப்புது
அம்சங்களையும் சுமந்து
வந்து உனக்கென ஒரு
தனியிடத்தினைத் தக்க
வைத்துக்கொண்டிருக்கும் நீ
என்றும் ஓயாமல் இருப்பாய் என
நம்புகின்றேன்.

சு.கவிந்தா- கண்டி.

### இனிய வாழ்த்துக்கள்!

பிரியமான முரசே!
நீ சுமந்துவரும் அத்தனை
ஆக்கங்களும் இனிமையானவை!
தித்திக்கும், சிறுகதை,
அரசியல், தேன்கிண்ணம்,
சினிமா, சிறுவர் பகுதி, லேடீஸ்
ஸ்பெஷல், இப்படி அடுக்கிக்
கொண்டே போகலாம். அவ்வளவு
விடயங்கள். அனைத்துமே
அற்புதமாக அமைந்துள்ளன.
தினமுரசே உன் சேவை
மென்மேலும் தொடர எனது
இனிய வாழ்த்துக்கள்.

ம.குமணன், வல்வெட்டித்துறை.

### முத்தான முரசு!

உலக சுவாசங்களை உன்னுள் ஈன்றெடுத்து நித்தம் வரும் வியாழனும் வெளிக்கொணர்ந்து தித்திக்கும் தினமுரசாய் பாரெங்கும் ஓங்கி ஒலித்து உனது அபிமான வாசகர்களுக்கு அறிவூட்டும் தேன்கிண்ணமாய் ஊற்றெடுத்து உனக்குள் நீயே ஒரு வசீகரத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் இளம் பிஞ்சுகளின் உள்ளத்தையும் உன்னுள் வசப்படுத்திய உன் முத்தான முரசுக்கு என் பொன்னான வாழத்துக்கள்!

எம்.கஜானி, வவுனியா.

### ஊற்று

எங்கள் உள்ளக் கிடங்கில் ஊற்றெடுத்து உறையாது ஓடும் உன் நற்சேவைகள் கங்கையாகப் பெருக்கெடுத்து உன் பாசக் கடலில் சங்கமமாகி ஆழிக் கடலைப் போல வலுப்பெற வேண்டுமென வேண்டி என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆர்.குந்தவை, சாவகச்சேரி.

சேற்றின் மத்தியில் மலர்ந்த செந்தாமரை போன்றும், முட்களின் நடுவே முளைத்த மோகன ரோஜா போன்று இன்று வாசக நெஞ்சங்களில் மலர்ந்திருக்கும் இனிய முரசே!

கடந்த வார முரசில் இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்? என்ற கட்டுரை அருமை. வேணுகிருஷ்ணாவுக்கு எனது பாராட்டுக்கள். தூர இருக்கும் எங்களுக்கு, நாட்டு நடப்புக்களை புடம்போட்டுக் காட்டுகின்றாய். உன்னை அன்புடன் அணைப்பதில் எமக்கோர் ஆனந்தம்.

தாய்நாட்டுச் செய்திகள் மற்றும் பயன்தரும் பல சுவையான ஆக்கங்களை நமக்கு அள்ளித் தருகின்றாய். அதற்கு எனது பாராட்டுக்கள்.

[illegible]

# அமைச்சர் டக்ளஸுக்கு உற்பத்தியாளர்கள் பாராட்டு



எதிர்காலத்தில் கைத்தொழில்துறையை மேலும் விரிவாக்கும் நோக்கில் திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் அதேவேளை கித்துள் உற்பத்தித்துறையில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு வருடாந்தம் கித்துள் வர்ணக் கண்காட்சியையும் விற்பனைச் சந்தையையும் சிறந்த முறையில் ஏற்பாடு செய்கின்ற பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு கித்துள் சார் உற்பத்தியாளர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட இவ்வருடத்திற்கான கண்காட்சியும் சந்தைப்படுத்தலும் அண்மையில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, கித்துள்சார் உணவு மற்றும் ஏனைய துறைசார்ந்த உற்பத்தியாளர்கள் அவர்களது உற்பத்திகளுக்கு ஏற்ற வகையில் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இக்கண்காட்சியின் இறுதிநாள் நிகழ்வின்போதே கித்துள்சார் உற்பத்தியாளர்களினால் அமைச்சருக்கு தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டதுடன் அவரது திட்டமிட்ட செயற்பாடுகளையும் வரவேற்றனர்.

### தேசத்தின் மகுடத்தில்

## சூருட்டியவர் விளக்கமறியலில்

தேசத்தின் மகுடம் கண்காட்சி நடைபெற்ற இடத்தில் 230 தற்காலிக கழிவறைகளை அமைக்கும்போது அரசாங்கத்தின் பணத்தை களவாக பெற்றுக் கொண்டதாக கூறப்படும் குற்றச்சாட்டில் ஒரு தனியார் கட்டுமான நிறுவனத்தின் உரிமையாளரை ஏப்ரல் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த கண்காட்சி தொடர்பான கட்டுமான ஒப்பந்தங்கள், கொள்முதல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அங்கீகாரமின்றி ஒரு தனியார் நிறுவனத்திற்கு பிரதம நிர்வாக அதிகாரியினால் வழங்கப்பட்டது என்றும், இதனால் இந்த உரிமையாளர் பல மில்லியன் பணத்தை தவறான வழியில் பெற்றுக் கோண்டார் எனவும் முறைப்பாட்டாளர் குற்றஞ்சாட்டினார்.

## விரைவில்...

### தூத்துக்குடி- கொழும்பு கப்பல் சேவை

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே சிறியரக பயணிகள் கப்பல் இயக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெளித்துறைமுகம் அமைக்கும் பணிகள் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகி 2019 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் முடிக்கப்படும் போது தூத்துக்குடியில் 9 கப்பல் தளங்களும் அமைக்கப்பட்ட பின் துறைமுகத்தின் சரக்கு கையாளும் திறன் மேலும் 42மில்லியன் டண் அதிகரிக்கும். அத்துடன், வெளித்துறை முகத்தில் கப்பல்களுக்கான எரிபொருள் நிரப்புவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்ட பயணிகள் கப்பல் போக்குவரத்து போதிய வருமானம் இல்லாத காரணத்தினால் நிறுத்தப்பட்டது. தற்போது, 150 முதல் 250 எண்ணிக்கையிலான பயணிகள் செல்லும் வகையில் சிறியரக கப்பல்களை இயக்குவது குறித்து திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டிற்குள் இதற்கான அனுமதி பெறப்பட்டு தூத்துக்குடி- கொழும்பு இடையே மீண்டும் பயணிகள் கப்பல் இயக்கப்படும் என்றார்.

### யானைகளை கட்டுப்படுத்த சணல் வேலி

இலங்கையில் யானைக்கும் மனிதனுக்குமிடையிலான மோதலை தடுக்க தற்போதுள்ள யானைகளுக்கான மின்சார வேலிகளுக்கு மேலதிகமாக சணல் செடியில் வேலிகள் அமைப்பதற்கு வன ஜீவராசிகள் அமைச்சு தீர்மானித்துள்ளது. தன்சானியா உட்பட உலகில் சில நாடுகளில் இந்த முறையினால் யானை - மனித மோதல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதற்கு சீனா உதவ முன்வந்துள்ளதாகவும் அமைச்சு கூறுகின்றது.

### வெள்ளவத்தையில்


# பதம் பார்க்கப்பட்டார் நிஷாந்தன்?

## விசாரணைக்கு உத்தரவிட்டார் அங்கஜன்

யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் நிசாந்தன் அண்மையில் கொழும்பு சென்றிருந்தபோது, வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் திரு. அங்கஜனின் தந்தையாரால் கடத்திச் செல்லப்பட்டு கோழிக்கடையில் வைத்துத் தாக்கப்பட்டதாகவும் பின்னர் சுவிசித்தராம மாவத்தையில் உள்ள அவர்களின் கட்டடத்திற்குக் கொண்டு சென்று சித்திரவதை செய்ததாகவும் நிஷாந்தனினால் கூறப்பட்டதாக ஊடகங்களில் வெளியாகிய செய்திகளை மறுத்துள்ளார் சுதந்திரக் கட்சியின் யாழ. மாவட்ட அமைப்பாளர் அங்கஜன்.

இது தொடர்பில் அங்கஜன் மேலும் தெரிவிக்கையில், இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்தி என்று கூறியதுடன் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகளைக் கண்டறியும் பொருட்டு பொலிசில் முறைப்பாடு செய்துள்ளதாகவும்,. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சாதாரண உறுப்பினராக இணைந்துகொண்ட நிசாந்தன் அந்தக் கட்சியின் உறுப்புரிமையை வைத்துக் கொண்டு வடக்கு மக்களிடம் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கி பெருந்தொகையான பணங்களைப் பெற்று வந்தார்.

இவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து ஒழுக்காற்று நடவடிக்கையின் மூலம் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார். இதனால் தன் மீது அவருக்கு ஏற்பட்ட அதிருப்தியின்



பிரகாரமே இவ்வாறு நடந்து கொள்வதாகவும் பொலிசாரின் அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதும் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. கட்சியினால் அரசியலுக்குள் கொண்டுவரப்பட்டு. யாழ். மாநகர சபை உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்ட நிசாந்தன் கட்சி ஒழுங்குவிதிகளை மீறிச் செயற்பட்டமையால் ஈ.பி.டி.பி. கட்சியினால் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்தே சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# அழகில் மயங்கியதால் ஒபாமாவுக்கு வந்தது வம்பு

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் அட்டர்னி ஜெனரலாக பணியாற்றுபவர் இந்திய வம்சாவளி பெண் கமலா ஹாரிஸ். இவரது தாய் சியாமளா கோபாலன். சென்னையை சேர்ந்த டாக்டரான இவர் 1960-ல் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தார். கடந்த 2004, 2008 அமெரிக்க தேர்தல் பிரசாரத்தின் போது வெளிப்படையாக ஒபாமாவுக்கு ஆதரவு தெரிவித்தவர்.

இந்நிலையில் வாஷிங்டனில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அமெரிக்க அதிபர் ஒபாமா கலந்துகொண்டார். இந்த விழாவிற்கு கமலா ஹாரிசும் வந்திருந்தார். விழா மேடைக்கு வரவழைத்து கமலா ஹாரிசை ஒபாமா புகழ்ந்தார். அமெரிக்க சட்டத்தை நிலை நாட்டுவதில் மனோதிடம்மிக்கவர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக மற்றவர்களைவிட அழகானவர் என்று புகழ்ந்து தள்ளினார். பெண்ணின் அழகை பொதுமேடையில் வர்ணிப்பது அமெரிக்க அதிபர் பதவிக்கு உரிய செயலல்ல என்று ஊடகங்கள் ஒபாமாவுக்கு கண்டனம் தெரிவித்தன. இதை தொடர்ந்து அமெரிக்க அதிபர் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்தார்.

# புதையல் எடுக்க; நரபலி கொடுக்க முயன்ற ஆசாமிக்கு விடுதலை!

நான்கு வயது சிறுமி ஒருவரை பலி கொடுத்து புதையல் பெற முயன்ற குற்றச்சாட்டின் பேரில் எப்பாவல பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்கள் தம்புத்தேகம நீதவானால் விடுதலை செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஒருவரின் மகள் உட்பட 12 பேர் உறவினர்களின் வீடுகளுக்கு போவதற்காக குழுவாக சென்றுகொண்டிருந்தனர். இதன்போது இவர்களின் நான்கு வயது சிறுமியை பலிகொடுத்து புதையல் பெற முயன்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் எப்பாவெல பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள், தம்மை கைது செய்தமை சட்டவிரோதமான நடவடிக்கை என விளக்கி பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தும்படி வடமத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஜகத் அபேசிரிவர்த்தனவிடம் முறைப்பாடு செய்தனர்.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலம், சந்தேகநபர்கள் புதையல் எடுக்கச் செல்லவில்லை எனவும் எப்பவெல பொலிஸார் இவர்களை தேவையில்லாமல் கைது செய்தனர் எனவும் தெரியவந்ததையடுத்து, நீதவான் சந்தேக நபர்களை விடுதலை செய்தார்.

## மட்டக்களப்பில் எலிக்காய்ச்சல் இருவர் பலி

எலிக்காய்ச்சல் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார். மட்டக்களப்பு சத்துருக்கொண்டானைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அமிர்தலிங்கம் சுதாகரன் (33வயது) என்பவரே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர்.கே.முருகானந்தம் தெரிவித்தார்.

கடுமையான காய்ச்சல் காரணமாக 5ஆம் திகதி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக இவர் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சைகளை மேற்கொண்ட வைத்தியர்கள் இவர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கண்டறிந்துள்ளனர். இந்நிலையில் இவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் இவரது சடலம் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## எங்கே போகிறது இந்தப் பாதை!!

கல்வியில் சிறந்த மாவட்டமாக, கலாசாரத்தில் தனித்துவமான மாவட்டமாக இருந்த யாழ். மாவட்டம் இப்போது தற்கொலைகள் அதிகமாக நடக்கும் மாவட்டமாக உருவெடுத்துள்ளது.

வறுமை, விரக்தி, கடன் எனப் பல காரணங்களால் யாழ்ப்பாணத்தில் அநேகமான தற்கொலைச் சம்பவங்கள் நடந்தேறுவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. மருத்துவமனை தகவல்களின்படி தனக்குத்தானே தீ மூட்டிக்கொள்ளும் சம்பவங்களும், சுருக்கிட்டு தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்களும், விஷம் அருந்தி தற்கொலைக்கு முயற்சிக்கும் சம்பவங்களும் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளதாக தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இவை தவிர பாலியல் பலாத்காரங்களும், களவுச் சம்பவங்களும், மோசடிகளும், கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்தே காணப்படுகின்ற மாவட்டங்களாக யாழ்ப்பாணமும், கிளிநொச்சியும், முல்லைத்தீவும் மாறியிருக்கின்றன. கடந்த ஒரு மாத காலப்பகுதியில் மட்டும் பத்துக்கு மேற்பட்ட தற்கொலை முயற்சி சம்பவங்களும், பல்வேறு குற்றங்களுடன் சம்மந்தப்பட்ட சுமார் 130 பேர் கைது செய்யப்பட்ட நிகழ்வும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கலாசாரம், பண்பாடு என இன்னும் பேசிக் கொண்டிருக்கும் யாழ். மாவட்டத்தின் சூழலில் தற்போது ஏற்பட்டிருக்கும் மாற்றத்திற்கு காரணம் என்ன? இவை யுத்தத்துக்குப் பின்னர் ஏற்பட்ட சாதாரண மாற்றமா? திட்டமிட்டு நிகழ்த்தப்படுகின்ற கலாசார சீரழிவா? அல்லது மூன்று தசாப்தங்களாக ஆயுத அடக்குமுறைக்குள் அடங்கிக் கிடந்த இனம், ஆயுத நிழல் அகன்ற சூழலில் எதிர்கொள்ளும் சவால்களா? எவருக்கும் விடைகாண முடியவில்லை.

யாழ்ப்பாணத்துக்கான தரை வழிப்பாதை திறக்கப்பட்டதால், பலரும் நுழைந்ததால் ஏற்பட்ட விளைவா? புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்த யாழ்ப்பாண மக்கள் அவர்கள் வாழும் நாடுகளில் பழக்கப்பட்ட நாகரிகத்தை யாழ்ப்பாணத்தில் கலப்புச் செய்ததால் ஏற்பட்ட கலாசார பிறழ்வா?

செல்போன், இணையத்தளம், கொழும்புடனான தொடர்பு என்பவற்றால் எதுவுமே தெரிந்திராத யாழ்ப்பாணம் கெட்டுப் போய்விட்டதா? இதையும் முடிந்த முடிவாக தெரிந்துகொள்ள முடியவில்லை.

ஆனால் மேலே குறிப்பிட்ட எல்லாமும்தான் தற்போதைய யாழ்ப்பாணத்தின் நிலைமைக்கு காரணம் என்பதே பலரின் அங்கலாய்ப்பாக இருக்கின்றது. இந்தப் பிரச்சினைகளை தனிமனித பிரச்சினைகளாக பார்ப்பதும், அதைக் கடந்துபோவதும் சமூகத்தின் கட்டமைப்பை சிதைக்கத் தொடங்கி இருக்கின்றது.

பொலிஸாரும், மருத்துவமனை நிர்வாகமும் பட்டியலிட்டு வெளிப்படுத்தும் வரை இவற்றை தனித்தனிச் சம்பவங்களாக பார்க்கும் மனோநிலை மாற்றமடைய வேண்டும்.

ஆளும் அரசியல், எதிர்ப்பு அரசியல் என்று அதிகார மையத்திலிருப்பவர்கள் மக்களைக் கடந்து வேறொரு திசையில் பயணிக்கின்றார்களோ என்ற கேள்விகள் சமூக ஆர்வலர்களிடையே எழுகின்றது. ஒரு இனம் தனது தனித்துவத்தோடும், கலாசார கட்டமைப்போடும் இருப்பதை முதலில் உறுதி செய்துகொள்வது அவசியமாகும். அதற்கு வேறுபாடுகளைக் கடந்து கலந்தாய்வு செய்யவேண்டும். அவ்வாறில்லாமல் எல்லாம் சிதைந்த பிறகு ஐ.நா சபை, அமெரிக்கா, இந்தியா என்று பெட்டிகளை தூக்கிக் கொண்டுபோய் அழுது வடிவதில் அர்த்தமில்லை.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

**இந்தியாவினுடைய விலாங்கு மீன் நிலைப்பாடுகள் இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்ற பிரச்சினைகளுக்கு எண்ணெய் ஊற்றுவது போலும், அவர்களுடைய கௌரவமான அரசியல் தீர்வு பற்றிய எதிர்பார்ப்பின் ஆயுளை அதிகரிப்பதாகவுமே அமையும்.**



# தடுமாறி தவிக்கும் இந்திய தேசம்

**இந்திய** நாடாளுமன்றக் குழுவினர் வடக்கே யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு சிவில் சமூப் பிரதிநிதிகளையும், அரசியல் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடிச் சென்றிருக்கின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சீனாவின் பிரதி வெளிவிவகாரச் செயலாளரின் வருகையை அடுத்து இந்தியக் குழுவினரின் இந்த விஜயம் அமைந்திருக்கின்றது.

சீனாவில் அபிவிருத்தி, உதவி என்ற போர்வையில் இலங்கையில் கால்பதித்துச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற சீனாவினுடைய செயற்பாடுகள் இந்தியாவிற்கு தொடர்ந்தும் தலைவலியையும் எச்சரிக்கை உணர்வையும் சதாகாலமும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பது ஒன்றும் இரகசியமல்ல. இது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பிற்கு இன்றியமையாததும் கூட. இந்நிலையிலேயே இந்தியாவினுடைய இலங்கை மீதான நிலைப்பாடு தளம்பல் போக்கில் காணப்படுவதற்கு அடிப்படையாக இருந்து வருகின்றது என்பதுதான் இலங்கைத் தமிழர்களுக்கு ஆழமான கரிசனையை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கின்றது. இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தங்களுடைய அரசியல் எதிர்காலம், இருப்பு, என்பவற்றின் காத்திரத்திற்கு இந்தியாவினுடைய இலங்கை மீதான நிலைப்பாடு தெளிவானதாகவும், வெளிப்படைத் தன்மை உடையதாகவும் இருக்கவேண்டும் என விரும்புகின்றனர்.

அதுவும் தமிழர்களின் கௌரவமான அரசியல் தீர்வு என்ற விடயத்தில் இந்தியா தமிழர் தரப்பிற்கு ஆதரவான நிலைப்பாட்டை உறுதியாக மேற்கொள்ள வேண்டும் என்பதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

ஆனால், இந்தியாவினுடைய செயற்பாடுகள் அவ்வாறான எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் இல்லை என்பதும் தமிழ் மக்களின் ஆதங்கமாக இருக்கின்றது.

பிரபல பத்தி எழுத்தாளர்கள் குர்தீப் நாயர் கூறுவது போன்று, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் பாக்கு நீரிணையால் மட்டும் பிரிக்கப்பட்டிருந்தாலும் ஒருபோதும் அந்நியோந்நியமாக நெருக்கங்களை பேணியது கிடையாது. இரண்டு கிட்டிய தூரத்தில் உள்ள அயலவர்களுக்கிடையிலான அவநம்பிக்கை, வரலாற்று ரீதியான எச்சரிக்கை அச்சங்கள் என்பவை இரண்டு தரப்பினரையும் தொடர்ந்தும் எச்சரிக்கை உணர்வுடன் பார்க்கின்ற சூழலையே ஏற்படுத்தியிருக்கின்றது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியா என்பது இலங்கையின் வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு ஆதரவான சக்தியாகவும் வரலாற்றுக் காலங்களில் இலங்கை மீது படையெடுத்து இலங்கையை ஆக்கிரமிக்க முயற்சித்த ஆக்கிரமிப்பாளர்களின் வழித்தோன்றல்களாகவுமே இந்தியாவைப் பார்க்கின்றது.

அதேபோன்று இந்தியாவும் இலங்கை மேற்குலகுடனும் தனது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கின்ற சக்திகளுடனும் உறவு பாராட்டுகின்ற நாடாகவே இலங்கையைப் பார்க்கின்றது.

இந்த வரலாற்றுச் சூழலிலேயே இலங்கையில் ஏற்பட்ட ஆயுதப் போராட்டத்திற்கு உதவிகளை வழங்கிய பாரத இந்தியா அதன் உச்சமாக 87களில் நேரடியாகத் தலையிட்டதன் விளைவாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் 13 ஆவது திருத்தச் சட்டமும் உருவாக்கப்பட்டது. 13ஆவது திருத்தச் சட்டத்தின் பலனாகத் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பிராந்திய சுயாட்சி சார்ந்த அதிகாரப் பகிர்வை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதற்கு பிரதான தடையாகப் புலிகளின் எதிர்ப்பே இந்தியாவால் பார்க்கப்பட்டது.

இந்நிலையிலேயே முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி புலிகளினால் கொல்லப்பட்டிருந்தார். இவை இலங்கை விவகாரத்தில் இந்தியாவிற்கு பாரிய குழப்பத்தை ஏற்படுத்தியது.

ஒருபுறம் புலிகள் – மறுபுறம் மேற்குலக சார்பு இலங்கை அரசு. எனவே, மௌனமாக இலங்கை நிலவரங்களை அவதானித்துக் கொண்டிருந்த இந்திய தேசம் அவ்வவ்போது சம்பிரதாயத்திற்காக இலங்கையுடன் கைகுலுக்கிக் கொண்டது.

இந்நிலையிலேயே 2005 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்தியாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்தியதுடன், இந்தியாவின் உதவியுடன் புலிகளை அழிப்பது என்ற திட்டத்தை வரைந்தது.

அதை நேரடியாக இலங்கை ஜனாதிபதியே இலங்கைப் பிரதமருக்குத் தெரிவித்தார். அத்துடன் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் கிடப்பில் போடப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒப்புதல் அழிக்கப்பட்டது.

அதுவரையில் 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத் தாது தமக்கான கௌரவக்குறைச்சலாக குமுறிக்கொண்டிருந்த இந்தியாவிற்கு இலங்கையின் புதிய திட்டம் உவப்பானதாகக் காணப்பட்டது –அதற்குத் தலையசைத்தது.

இந்தியாவின் ஒத்துழைப்புடன் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் காட்டப்பட்ட கால தாமதங்களும் இலங்கைத் தரப்பால் அது தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துக்களும் அதிருப்தியடையச் செய்திருந்தது.

எனினும் அந்த அதிருப்தியை வெளிக்காட்ட முடியாத, அழுத்தங்களை மேற்கொள்ள முடியாத சூழலே காணப்பட்டது. இந்தியா அழுத்திப் பிடிக்குமானால் சீனாவுடன் மேலும் நெருங்கிச் செல்லும். இராஜதந்திரத் தோற்றப்பாட்டை இலங்கை வெளிப்படுத்தியது.

இலங்கையில் வந்திருந்த சீனா தமக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதை விரும்பாத இந்தியா இலங்கை அரசுடன் கொள்கை ரீதியான நட்பை தொடரவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது.

இவ்வாறான சூழலிலேயே அமெரிக்கர்களுடனான மேற்குலக நாடுகளினால் இலங்கை மீது மனித உரிமைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, அது ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இது இலங்கைக்கு ஒரு இராஜதந்திர ரீதியில் அழுத்தங்களை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கியபோது இந்தியா தமக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும் என்பது இலங்கையின் எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால் இந்தியாவிற்கு நிலைமை தர்மசங்கடமானது. இரண்டு தரப்பையும் தஜா பண்ணவேண்டிய நிலை அதற்கு. ஏனெனில் ஜெனீவாவில் இலங்கை எதிர்த்தால் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் பலமடைந்துவிடும். ஆனால் இலங்கையின் செயற்பாடுகளினால் ஏற்பட்ட அதிருப்தியை வெளிப்படுத்தியும் ஆகவேண்டும்.

இந்நிலையிலேயே 2012 இல் ஜெனீவா தீர்மானத்தில் கனதியை குறைத்துவிட்டு அதற்கு ஆதரவு தெரிவித்த இந்தியா, 2013 இல் அதே தீர்மானத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை இடம்பெறச் செய்ததோடு அந்த தீர்மானத்தால் இலங்கைக்கு வரக்கூடிய உடனடிப் பாதுகாப்பில் இருந்து இலங்கையைப் பாதுகாத்து பிரேரணையை ஆதரித்திருக்கிறது. இது இந்தியாவின் இந்தத் தீர்மான நிலைப்பாடு இலங்கைக்குப் பூரண மகிழ்ச்சியை ஏற்படுத்தாத போதிலும், தீர்மானத்தின் கனதிகளைக் குறைப்பதும் ஆதிக்கம் செலுத்தியது என்ற வகையிலும் உள்ளூரத் திருப்திப்பட்டுக் கொள்கின்றோம்.

ஆனால், அதேவேளை தற்போது தமிழகத்தில் காணப்படுகின்ற இலங்கை விவகாரம் தொடர்பான நிலைப்பாடுகள் இந்தியாவிற்கு பெரும் தலைவலியாகவே இருக்கின்றது. மாணவர் போராட்டங்கள், அரசியல் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள் இவை எல்லாம் தொடரும் பட்சத்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இந்தியக் காங்கிரஸ் கட்சி பலத்த அடிவாங்கும் சூழல் உருவாகும். தமிழகப் போராட்டங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த விரும்பும் அ.தி.மு.க. அரசு, இலங்கை வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் வேண்டும் என்று தமிழகச் சட்ட சபையில் தீர்மானம் கொண்டுவந்திருக்கின்றது.

தமிழக அரசு கூறுகிறது என்பதற்காக இந்தியாவினுடைய வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவருவது என்பது இயலாத காரியம். இந்திய வெளியுறவுக் கொள்கை என்பது இந்திய மாநில மக்களின் விருப்பங்களையோ அல்லது மாநில அரசுகளின் தீர்மானங்களையோ அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்படுவதல்ல. அதன் வெளியுறவுக் கொள்கை, அதன் தேசிய பாதுகாப்பு, கேந்திர முக்கியத்துவம் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. தமிழகம் கேட்கின்றது என்பதற்காக இந்திய – இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்கள் செய்யப்படுமானால் எதிர்காலத்தில் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

அதாவது இந்தியாவைச் சூழவுள்ள எல்லைகளில் பல்வேறு நாடுகள் இருக்கின்றன. அந்த எல்லைகளுக்கு அண்மித்த மாநிலங்களில் குறித்த நாடுகளுடன் நெருக்கமான பின்னணிகளைக் கொண்ட மக்கள் வாழ்கின்றார்கள்.

எனவே, இப்போது தமிழகம் கேட்கின்றது என்பதற்காக இலங்கை மீதான வெளியுறவுக் கொள்கை மாற்றப்படுமானால் வடக்கு வங்காளம், பங்களாதேஷ் மீதான இந்தியக் கொள்கையில் மாற்றத்தைக் கொண்டுவரச் சொல்லி நிற்கும். ஜம்மு காஷ்மீர் போன்றவை பாகிஸ்தான் மீது வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் வேண்டும் எனக் கேட்கும். அவ்வாறே ஒவ்வொரு நாட்டின் மீதான வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டு இந்தியாவின் பாதுகாப்பே கேள்விக்குறியாக்கப்பட்டுவிடும்.

எனவே, தமிழகத்தின் கோரிக்கையை எந்தவகையிலும் ஏற்பதற்கு இந்திய அரசு தயாராக இல்லை. ஆனால், தமிழக மக்களின் வாக்குகள் அடுத்த இந்திய அரசாங்கம் அமைவதில் காத்திரமான பங்கு வகிக்கும் என்பதினால் அவர்களைத் தஜா பண்ணவேண்டிய அவசியம் இருக்கின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு தான் இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு காங்கிரஸ் புத்துணர்ச்சியுடன் செயற்படப் போகின்றது என்ற கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றது. இதுபோன்று இந்தியாவினால் அவ்வவ்போது வெளியிடப்படுகின்ற அறிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்ற இலங்கைக்கான விஜயங்களும் அமைகின்றன.

ஆக மொத்தத்தில் இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கை தமது பிடியில் இருந்து முற்றாக விலகிச் சென்று சீனாவிடம் தஞ்சமடைவதை தடுக்கவும் வேண்டும். தமிழகத்தில் காணப்படுகின்ற இலங்கைத் தமிழர் மீதான உணர்வுரீதியான நிலைப்பாடுகள் தங்கள் மீதான அதிருப்தியாக மாறிவிடவும் கூடாது என்பது தான் விருப்பமாக இருக்கின்றது.

ஆனால் இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கடந்த 30 வருடங்களாக ஆயுதப் போராட்டத்தில் களைத்துப்போய் இந்தியாவினால் தமக்கான கௌரவமான தீர்வை பெற்றுக்கொள்வதற்கு உதவமுடியும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றார்கள்.

இந்நிலையில் இந்தியாவினுடைய விலாங்கு மீன் நிலைப்பாடுகள் இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்ற பிரச்சினைகளுக்கு எண்ணெய் ஊற்றுவது போலும், அவர்களுடைய கௌரவமான அரசியல் தீர்வு பற்றிய எதிர்பார்ப்பின் ஆயுளை அதிகரிப்பதாகவுமே அமையும்.

எனவே இந்திய தேசம் தமது தேசிய நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளையில் இலங்கைத் தமிழர் தொடர்பில் காத்திரமான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

குறைந்தபட்சம் அவர்களால் முன் மொழியப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் என்ற அதிகாரப் பகிர்வை என்னும் அமுல்படுத்துவதற்குத் தேவையான, ஆரோக்கியமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.




- சிவன் -

# பொன்விழா காணும் ஒஸ்மானியாக் கல்லூரியின் மீள் எழுச்சி!

மனித சஞ்சாரமற்ற முஸ்லிம் வட்டாரச் சூழலில் அடர்ந்த பற்றைகளும், பாழடைந்த, இடிந்த கட்டடங்களின் இடையே விஷ ஜந்துக்கள் நிறைந்த சூழலில் தான் 22.09.2003 இல் அதிபர் முபாரக் மௌலவி ஒஸ்மானியாக் கல்லூரி அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றது எமக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

A9 பாதை திறந்து கிட்டத் தட்ட 25 குடும்பங்கள் முஸ்லிம் வட்டாரத்தில் மீளக்குடியேறியது. அப்போது 41 மாணவர்கள் அயல் பாடசாலைகளில் கல்வி கற்றார்கள். அதிபர் முபாரக்கின் முயற்சியால் ஒஸ்மானியாக் கல்லூரி மீள ஆரம்பிக்கப்பட்டு தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை 41 மாணவர்கள் கல்வி கற்க ஆரம்பித்தார்கள். மூத்த கல்விமான்கள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் நலன்விரும்பிகள் ஆகியோரின் ஆலோசனையின் மூலம்தான் ஆரம்பிக்கப்பட்டது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு சில வாரங்களின் பின்னரே தனி நபராக செயற்பட்டுக் கொண்டிருந்த முபாரக் அவர்களுடன் இரண்டு ஆசிரியர்களும், இரண்டு தொண்டர் ஆசிரியர்களும் இணைந்துகொண்டனர்.

2004 ஆம் ஆண்டு தரம் 06, தரம் 07 ஆகியன புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் 70 மாணவர்கள் மொத்தமாகக் கல்வி பயின்றனர். அந்த சொற்ப மாணவர்களின் மத்தியிலும்கூட அதிபர் முபாரக் வருடாந்த பாட-சாலை இல்ல விளையாட்டுப் போட்டியை நடத்தி வந்தார். யாழ். வலயக் கல்வி அதிகாரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும் 2004 இல் அஹதிய்யா (சன்மார்க்க போதனா பீடம்) ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதற்கும் அதிபராக முபாரக்கே பொறுப்பேற்றார்.




2005 ஆம் ஆண்டில் 115 மாணவர்களாக அதிகரித்துக் காணப்பட்டது. அந்த ஆண்டும் இல்ல விளையாட்டுப் போட்டியும், மீலாத் விழாவும் நடத்தப்பட்டது.

2006 ஆம் ஆண்டில் மாணவர் தொகை 180 ஆக அதிகரித்தது. இல்ல விளையாட்டுப் போட்டி, மீலாத் விழா நடைபெற்றது. இந்த ஆண்டு கல்விக் கண்காட்சி, கலை நிகழ்ச்சி வருடாந்த பரிசளிப்பு விழா என்பன அதிபர் முபாரக்கின் முயற்சியால் நடைபெற்றது. பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக முன்னாள் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் S.A.C இனநூன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

2006ஆம் ஆண்டு 08 ஆசிரியர்கள் கடமையில் இருந்தனர். 2007 ஆம் ஆண்டு மீண்டும் அசாதாரண சூழல் காரணமாக மாணவர் தொகையானது 120ஆகக் குறைந்து காணப்பட்டது. 2007 இல்தான் ஆண்டு 01 தொடக்கம் ஆண்டு 11 வரை மாணவர்கள் கல்வி பயிலத் தொடங்கினர்.

2008 ஆம் ஆண்டு அசாதாரண சூழல் காரணமாக மாணவர் தொகையானது 100 ஆகக் குறைந்து காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டு அசாதாரண சூழல் காரணமாக 80 மாணவர்களாகக் குறைந்தது.

2010 ஆம் ஆண்டு 180 ஆக மீண்டும் அதிகரித்தது. இல்ல விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, அஹதிய்யாப் பரீட்சைகள் நடைபெற்றன. 2010 ஆம் ஆண்டு 11 ஆசிரியர்கள் கடமையில் இருந்தனர்.

2011 ஆம் ஆண்டு 240 மாணவர்களும் 14 ஆசிரியர்களும் இருந்தனர். 2012 இல் 340 மாணவர்களும், 16ஆசிரியர்களும், 2013 ஆண்டு 465 மாணவர்களும் 24 ஆசிரியர்களும் கல்வி கற்று வருகின்றனர்.

2013 ஆம் ஆண்டு ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழா ஆண்டாகும். அதிபர் முபாரக் மௌலவி பொன்விழாவினை வெகு விமர்சையாகக் கொண்டாட முடிவெடுத்துள்ளார்கள். கல்விமான்கள், முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரினது ஆலோசனைகளை வழங்கும் படியும், உதவும்படியும் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

**முன்னாள் உயர்தர மாணவர் மன்றத் தலைவர்,**
**அல்ஹாஜ் M.F.M.இக்பால்**

# பிச்சைக்காரன் கட்டிய ஆலயம்!



**இத்தாலி** நாட்டில், சாரனோ என்னுமிடத்தில் தூசர்ச் ஆப் தி லேடி ஆப் மிராகிள்ஸ்ஸ் என்ற தேவாலயம் உள்ளது. அற்புதம் நிகழ்த்தும் அன்னையின் ஆலயமான இது எழுந்ததும் ஓர் அற்புதம்தான். இதனை கட்டியது பெட்டாட்டோ என்ற பிச்சைக்காரன்தான் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

ஒரு சமயம் இவன் நோய்வாய்ப்பட்ட போது, தன் நோய் குணமாகப் பிரார்த்தனை செய்துகொண்டான். நோயும் குணமாயிற்று. உடல் தேறியதும், தன் நன்றியைக் கோவில் எழுப்பிச் செலுத்த முடிவு செய்தான் 1460இல்.

அவனிடமோ செப்புக் காசு கிடையாது. அதனால் என்ன? மனம் தளரவில்லை. சாரனோ நெடுஞ்சாலையில் நின்று கொண்டு கையேந்தினான். முப்பதெட்டு ஆண்டுகள் பிச்சை எடுத்தான். ஆனால், அதில் கிடைத்த பொருளில் ஒரு பென்னியைக் கூட தனக்காகச் செலவு செய்து கொள்ளவில்லை. 1498இல், அவன் பிரார்த்தித்துக் கொண்டபடி, மாதா கோவில் எழுப்பப் பொருள் சேர்ந்துவிட்டது. பிரமாண்டமான சேர்ச் கட்ட வேலை ஆரம்பமாயிற்று. ஆனால், அது பூர்த்தியாகியதைக் கண்டு மகிழ, அந்தப் பிச்சைக்காரன் உயிருடன் இல்லை.



# புதனில் இரண்டுமுறை சூரியன் உதிக்குமாம்!

**ஒரு** நாளைக்கு இரண்டு முறை சூரியன் உதிக்கும் வாய்ப்பு புதன் கிரகத்தில் இருக்கிறது. புதன் கிரகம் சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகிறது. அதனால் ஒரு நேரம் புதன் கிரகம் சூரியனிலிருந்து 45 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. இன்னொரு நேரம் 67 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. புதன் கிரகம் சூரியனுக்கு மிக அருகில் இருக்கும்போது புதனின் வேகம் ஒரு லட்சத்து 87 ஆயிரம் கிலோமீற்றர். சூரிய மண்டலத்திலேயே அதி வேகத்தில் பயணிக்கிற கிரகம் புதன்தான். புதனின் சுற்றுப்பாதை இப்படி அமைந்துள்ளதால் புதன் கிரகத்தின் வானில் சூரியன் ஒரு நேரம் பெரிதாகவும் இன்னொரு நேரம் சிறியதாகவும் காணப்படும்.

சுற்றுப்பாதை வேகம் அதிகம் என்பதாலும் அச்சில் சுழலும் வேகம் மிகக் குறைவு என்பதாலும் புதனில் குறிப்பிட்ட சில இடங்களில் சூரியன் உதயமாகிய பிறகு அதே கிழக்கு திசையில் மறையும். பிறகு மறுபடி உதிக்கும். சூரிய மண்டலத்தில் இப்படி ஒரே நாளில் இரண்டு தடவை சூரியன் உதிக்கிற அதிசய கிரகம் புதன் மட்டுமே!

# பழநியின் வசூல்



**பழநி** பங்குனி உத்திர திருவிழா உண்டியல் வசூல், ஒரு கோடியே 57 இலட்ச ரூபாய் கிடைத்துள்ளது. பழநி மலைக்கோயில் கார்த்திகை மண்டபத்தில் உண்டியல் எண்ணிக்கை நடந்தது. ரொக்கமாக ஒரு கோடியே 56 இலட்சத்து 89 ஆயிரத்து 865 ரூபாயும். தங்கம் 558 கிராம். வெள்ளி 4 ஆயிரத்து 710 கிராம். வெளிநாட்டு கரன்சிகள் 815 கிடைத்துள்ளது. இது 16 நாட்களில் கிடைத்ததாகும்.

வேல், செயின், வளையல், முருகனின் உருவம் பொறிக்கப்பட்ட தகடு, மோதிரம், நாணயம், திருமாங்கல்யம், ஆள் ரூபம், வெள்ளியாலான காவடி, வேல், பாதம், கொலுசு, வீடு, குண்டு போன்றவையும் பக்தர்கள், காணிக்கையாக செலுத்தியிருந்தனர்.

# செம்மறி ஆட்டை காப்பாற்றிய பிரதமர்

**இங்கிலாந்து** பிரதமர் டேவிட் கேமரூன் கடந்த மாதம் ஒருவார இறுதியில் ஒக்ஸ்போர்டுஷிரில் உள்ள தனது வீட்டுக்கு காரில் சென்று இருந்தார். அப்போது மறைவிடத்தில் இருந்து ஒரு செம்மறி ஆட்டின் கதறல் சத்தம் கேட்டது. உடனே காரை நிறுத்தி விட்டு கீழே இறங்கி சென்று அங்கு சதுப்பு நிலத்து சேற்றில் ஒரு பெண் செம்மறி ஆடு சிக்கி மூழ்கி கொண்டிருந்தது.

அதன் அருகில் 2 குட்டிகளும் சத்தமிட்டு கொண்டிருந்தன. உடனே பிரதமர் கேமரூன் தனது பாதுகாப்பு அதிகாரிகள் 2 பேருடன் சென்று சேற்றில் இறங்கி அந்த செம்மறி ஆட்டை பத்திரமாக மீட்டார்.

இதனால் அவரது ஜீன்ஸ்பேண்ட் மற்றும் ஷூக்கள் அனைத்தும் சேறும் சகதியுமாகி விட்டது. அதற்குள் ஆட்டை தேடிக்கொண்டு விவசாயி வந்துவிட்டார். அவரிடம் அந்த ஆட்டையும், குட்டிகளையும் ஒப்படைத்து விட்டு பிரதமர் டேவிட் கேமரூன் லண்டன் திரும்பினார்.



இத்தகவலை ஆட்டின் உரிமையாளரும், விவசாயியுமான ஜூலியன் துவ்டியன் தெரிவித்துள்ளார். இந்த செய்தி ஏப்ரல் 1ஆம் திகதி வெளியான-தால் முட்டாள் தின ஜோக் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த செய்தி உண்மை என பிரதமர் அலுவலக செய்தி தொடர்பாளர் உறுதி செய்தார்.




**ஜெருசலேத்தை** மீட்பதென்றால், முதலில் இராணுவத்தையும் ஆட்சி முறையையும் ஒழுங்குபடுத்தியாக வேண்டும் என்பதை அறிந்தவராக, அந்தப் பணிகளில் கவனம் செலுத்தத் தொடங்கினார். ஊழல் அதிகாரிகளை ஒழித்துக் கட்டி, ஒவ்வொரு பிராந்தியத்திலும் உருப்படியான ஆட்சியாளர்களை நியமித்தார். இராணுவத்தில் ஏராளமாகக் களையெடுத்து, தேசமெங்கிலும் இருந்து, நாட்டுப் பற்றுமிக்க இளைஞர்களைத் தேடித்தேடிச் சேர்க்கத் தொடங்கினார்.

இவர் இத்தகைய சீர்திருத்த நடவடிக்கைகளை ஒருபுறம் மேற்கொண்டிருந்தபோது, இன்னொருபுறம் ஜெருசலேத்தைக் கைப்பற்றிய சிலுவைப் போர் வீரர்கள், வெற்றிக்களிப்பில் திரிபோலி, டைர்(Tyre), சிடான் போன்ற சில முக்கியமான இஸ்லாமியக் கோட்டைகளைத் தாக்கி வீழ்த்தியிருந்தார்கள்.

கிருத்தவ வீரர்கள் வரலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட இடங்களில் இருந்த முஸ்லிம்கள் எல்லோரும் பாதுகாப்பாக வேற நகரங்களுக்கு, மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்து போய்விட்டிருந்த நிலையில் கோட்டைகளை வெற்றி கொண்ட கிருத்தவர்களுக்கு அங்கே கொன்று களிக்க யூதர்களே கிடைத்தார்கள்.

பாதுகாப்பற்ற நிலையில் இருந்த யூதர்கள் ஒவ்வொரு இடத்திலும் இருந்த தங்கள் திருச்சபைகளிலும் தேவாலயங்களிலும் புகுந்து கதவை உள்ளுக்குள் பூட்டிக்கொண்டு உயிரைக் கையில் பிடித்தபடி தவித்துக் கொண்டிருந்தார்கள்.

யூதர்கள் அஞ்சிநடுங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிந்த மாத்திரத்திலேயே கிருத்தவர்களின் இரத்தவெறி அடக்கமாட்டாமல் மேலேறித் திமிறியது. யூதர்களின் அனைத்து தேவாலயங்களையும் உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்தவர்கள், அங்கிருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஒவ்வொருவரையும் துண்டுதுண்டாக வெட்டிக் குவித்தார்கள். அப்படியும் வெறி அடங்காமல், பிணங்களை அந்தத் தேவாலயங்களின் உள்ளே குவித்து வெளியே வந்து ஆலயங்களைத் தீவைத்துக் கொளுத்தினார்கள்.

இந்தப் பேயாட்டத்துக்குப் பிறகு அந்தந்தப் பகுதிகளில் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்த சிலுவைப் போர் வீரர்கள், கிருத்தவர்கள் அல்லாத அத்தனை மக்களும் கரங்கள் நிரந்தரமாகச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில்தான் வலம் வரவேண்டும் என்றொரு உத்தரவைப் பிறப்பித்தார்கள். அதாவது கிருத்தவர் அல்லாத அத்தனைபேருமே கைதிகள்தாம். சிறைக்கூடங்களுக்கு பதில் அவர்கள் நாட்டில் – வீட்டில்கூட வசிக்க முடியும்; ஆனால் சங்கிலியால் கரங்களும் கால்களும் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருக்கும். அப்படியே தான் உத்தியோகத்துக்கும் போக முடியும். சம்பாதிக்கலாம், செலவு செய்யலாம், ஊர் சுற்றலாம். ஆனால் சங்கிலியை மட்டும் கழற்றக்கூடாது.

நீதிமன்றங்கள் இழுத்துமூடப்பட்டன. மாறாக மரத்தடி கட்டைப் பஞ்சாயத்துக்கள் செல்வாக்குப் பெறலாயின.

ஒருவழியாக 1103 இல் தான்



சுல்தான் முஹம்மத், சிலுவைப்போர் வீரர்களை இனி தாக்கலாம் என்கிற முடிவுக்கு வந்தார். மரிதின், சஞ்சார், திமஷ்க், மோஸூல் ஆகிய நான்கு மாநிலங்களில் இருந்து இராணுவ வீரர்கள் வரவழைக்கப்பட்டு அணிவகுக்கச் செய்யப்பட்டன.

யுத்தத்தின் நோக்கம் இரு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. படை முதலில் நேராக பாலஸ்தீனை நோக்கி முன்னேறவேண்டும். அரை வட்ட வடிவில் வடக்கிலிருந்து தெற்காக முன்னேறத் தொடங்க வேண்டும். பாலஸ்தீன் நிலப்பரப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக கிருத்தவர்களின் கரங்களிலிருந்து விடுவிக்கவேண்டும். ஓரளவு இதில் வெற்றி கிடைத்ததும், இன்னொரு படை புறப்பட்டு நேரடியாக ஜெருசலேத்தை நோக்கிவரும். ஜெருசலேத்தை அந்தப் படை அடைந்ததும் வடக்கிலிருந்து (அதாவது சிரியாவிலிருந்து) முன்னேறிவரும் படையும் உடன்வந்த இணைந்து கொண்டு முழு வட்டமாக ஜெருசலேத்தை சுற்றி முற்றுகையிடவேண்டும். ஒரு முழு நீள யுத்தம் நடத்தி மீட்டுவிட வேண்டும்.

சுல்தான் முஹம்மதின் இந்தப் போர்த் திட்டம் துளியும் சிதறாமல் அப்படியே செயற்படுத்தப்பட்டது!

ஆக்ரோஷமுடன் பாலஸ்தீனை அடைந்த முதல் படை, அங்கிருந்த கிருத்தவப் படையினரை முதலில் டைபீரியாஸ் என்கிற இடத்தில் நடந்த யுத்தத்தில் ஓடஓட விரட்டித் தோற்கடித்தார்கள். ஆனால் அடுத்த படை ஜெருசலேத்தை வந்தடைவதற்குள் ஏராளமான தடைகள் உருவாகின. சிறுசிறு யுத்தங்களை அவர்கள் வழி எங்கும் செய்தாக வேண்டியிருந்தது. பல இடங்களில் மாதக்கணக்கில் முற்றுகையிட்டே முன்னேற வேண்டியிருந்தது.

ஆறு வருடங்களுக்குப் பிறகு தான் திட்டமிட்டபடி ஜெருசலேத்தை முஸ்லிம் படைகள் நெருங்க முடிந்தன. (கி.பி.1109 ஆம் ஆண்டு) பலாத் என்ற இடத்தில் இப்போது யுத்தம் நடந்தது.

முஸ்லிம்களும் கிருத்தவர்களும், மோதலும் சாதலும், கத்தியும், இரத்தமும் ஆனால், கொஞ்சநஞ்சமல்ல. யுத்த நெறி முறைகள் அனைத்தும் காற்றில் பறக்கவிடப்பட்டு ஒரு மாதிரி காட்டுமிராண்டி யுத்தத்தைத்தான் கிருத்தவ வீரர்கள் மேற்கொண்டார்கள் என்று பல கிருத்தவ சரித்திர ஆசிரியர்களே எழுதியிருக்கிறார்கள். மிகக் கோரமான யுத்தத்தின் முடிவில் கிருத்தவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்.

ஆனாலும் ஒருவழியாக ஜெருசலேத்தை மீட்டுவிட்டோம் என்று முஸ்லிம்கள் சந்தோஷப்பட முடியவில்லை.

காரணம், முன்பே பார்த்தது போல், சிலுவைப் போர்கள் என்பவை, ஒரு குறிப்பிட்ட படையினரால் மட்டும் மேற்கொள்ளப்பட்டவை அல்ல. மாறாக, ஒட்டுமொத்த ஐரோப்பாவும் அதை ஒரு நீண்டகாலத் திட்டமாகக் கருதி, தொடர்ந்து தேவைக்கேற்ப வீரர்களை அனுப்பிக் கொண்டே இருந்தது. கிருத்தவ வீரர்களின் எண்ணிக்கை குறையக்குறைய புதிய வீரர்கள் வந்துகொண்டே இருப்பார்கள். அவர்களுக்கான பண உதவிகள், உணவுப் பொருள் உதவிகள் யாவும் ஐரோப்பாவின் பல்வேறு தேசங்களிலிருந்தும் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். ஒரு தொடர் நடவடிக்கையாக சிலுவைப் போர்களைத்தான் ஐரோப்பிய தேசங்கள் நடத்தின.

ஆகவே, ஜெருசலேத்தை முஸ்லிம்கள் மீண்டும் ஜெயித்து விட்டார்கள் என்பது தெரிந்ததுமே ஐரோப்பாவிலிருந்து அலை அலையாக சிலுவைப் போர் வீரர்கள் புறப்பட்டுவர ஆரம்பித்து விட்டார்கள். இம்முறை அவர்கள் ஜெருசலேம் என்று மட்டும் பாராமல், வரும் வழியெங்கும் கையகப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார்கள்.

அதாவது கிருத்தவப்படை முன்னேறும் வழியெல்லாம் கிருத்தவர்களின் ஆளுகைக்கு உட்பட்டது என்பது போல. யாராவது தாக்குதலுக்குத் தயாராக நின்றால், அந்தக் கணம் எதிரே இருக்கும் படையினர் போரிட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். மாறாக, பின்னால் வரும் அடுத்த அணி சிலுவைப் போர் வீரர்களுக்கு அந்தப் பணியைக் கொடுத்துவிட்டு இவர்கள் வேறு வழியே வேகமாக முன்னேறத் தொடங்கிவிடுவார்கள்.

(தொடரும்...)

# பேஸ்புக்கை இணைய வலைத்தளத்திலிருந்து நீக்க...!

**இன்றைய** கணினி உலகில் மக்கள் ஏதாவது ஒரு சமூக இணைய வலைத்தளத்திலாவது தங்களுக்கென கணக்கு ஒன்றைக் கொண்டுள்ளனர். இதன் மூலம் தங்களை நண்பர்களுக்குத் தெரியப்படுத்தவும், நண்பர்களுடன் தொடர்பு கொள்ளவுமான பணிகளை மேற்கொள்கின்றனர்.

அந்தவகையில் பேஸ்புக் மற்றும் ட்விட்டர் சமூக இணையத் தளங்கள் முன்னணியில் உள்ளன. இவற்றை நாடி, தங்களுக்கென கணக்கு (எக்கவுண்ட்) ஒன்றை அமைப்பது மிக மிக எளிது.

ஆனால், அந்த கணக்கினை முடித்துக் கொள்வது அவ்வளவு எளிதான வழியாகக் காட்டப்படவில்லை. அவ்வாறு பதிவை ரத்து செய்து முடித்துக்கொள்ளும் எண்ணம் ஏற்பட்டாலும், நாம் ஏற்கனவே அவற்றில் அமைத்த பதிவுகளையும், நம் தொடர்புகளையும் பதிந்து எடுத்து வைத்துக் கொள்ள ஆசைப்படுவோம்.

நாம் மேற்கொண்ட தொடர்புகள் நமக்கு எந்த நாளும் நினைவில் இருப்பது உற்சாகம் தரும் என்பதற்காக, இந்த ஆவல் அனைவருக்கும் ஏற்படுவதுண்டு.

எனவே, நீங்கள் முதலில் உங்கள் பேஸ்புக் கணக்கில் உள்ள தொடர்பு தகவல்கள் அனைத்தையும் தேர்ந்தெடுத்து கொப்பி செய்து, ஒரு டெக்ஸ்ட் பைலில் பதிவு செய்து கொள்ளலாம். அடுத்து, கணக்கை நீக்கும் வழியை பார்க்கலாம்.

இன்றைய நிலையில், மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் சமூக இணையத்தளம் இதுவாகத்தான் இருக்கும். இதில் உள்ள பதிவினை முடிவிற்குக் கொண்டு வர எண்ணினால், உங்களுக்கு இரண்டு வழிகள் தரப்படுகின்றன.

இந்த சமூக வலைத்தளத்திலிருந்து விலகுவதால், நீங்கள் எவற்றை எல்லாம் இழக்கிறீர்கள் என்று தெரியாமல் இருந்தால், தற்போதைக்கு இதனை மூடிவிட்டு, பின் ஒரு நாளில், மீண்டும் இதனைப் புதுப்பிக்க நீங்கள் எண்ணலாம். அதற்கான வழி தரப்பட்டுள்ளது.

இதனை மேற்கொள்ள முதலில் deactivation பக்கத்திற்குச் செல்லவும். சென்றவுடன், நீங்கள் உங்கள் பேஸ்புக் நண்பர்களை இனித் தொடர்புகொள்ள முடியாது. இது உங்களுக்கு இசைவா? என்று ஒரு செய்தி தரப்படும்.

அதே நேரத்தில், நீங்கள் ஏன் பேஸ்புக் தளத்தினை விட்டு விலகுகிறீர்கள் எனக் கட்டாயமாகக் காரணத்தைப் பதிய வேண்டியதிருக்கும்.

இதனை முடித்த பின்னர், Confirm என்பதில் கிளிக் செய்தால், உங்கள் எக்கவுண்ட் பதிவு மறைந்துவிடும். இனி, மீண்டும் நீங்கள் பதிவினைப் புதுப்பித்தால் மட்டுமே, நண்பர்களுடன் நீங்களும், நீங்கள் உங்கள் நண்பர்களுடனும் பேஸ்புக் வழியாகத் தொடர்பு கொள்ள முடியும். புதுப்பிக்க வழக்கம் போல எக்கவுண்ட் லொக் இன் செய்தாலே போதும்.

இப்படி இல்லாமல், நமக்கு இந்த பேஸ்புக் தொடர்பே வேண்டாம் என்று முடிவு செய்தால், நீங்கள் account removal பக்கத்திற்குச் செல்ல வேண்டும். இங்கு Delete My Account என்ற பட்டனில் கிளிக் செய்திட வேண்டும்.

கிளிக் செய்தவுடன், மீண்டும் உங்கள் பாஸ்வேர்ட் கேட்டு உறுதி செய்யப்படும். பின்னர், அங்கு கிடைக்கும் கேப்சா சோதனையை மேற்கொள்ள வேண்டும்.

இதற்குப் பின்னரும், உங்கள் எக்கவுண்ட் இரு வாரங்களுக்கு இருக்கும். இந்தக் காலத்தில், அந்த எக்கவுண்ட்டைப் புதுப்பிக்க நீங்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், உங்கள் எக்கவுண்ட் காலாவதியாகி, நீக்கப்படும். நீக்கும் இணையத்தள முகவரி: http://www.accountkiller.com/en

# இரவில் படமெடுக்கும் கமெரா!



**இருள்** சூழ்ந்த நேரங்களில் அல்லது இரவு வேளைகளில் காட்சிகளை துல்லியமாக படம் பிடிக்கக்கூடிய மிகவும் சிறிய கமெரா ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

CHOBi Cam Pro 3 எனும் நாமத்தைக் கொண்ட இக் கமெராவானது 11 மெகாபிக்சல்களாக காணப்படுவதுடன் 1080P வீடியோ ரெக்கார்டிங் வசதியையும் உள்ளடக்கியுள்ளது. இதில் இணைக்கப்பட்டுள்ள பட்டரியானது தொடர்ச்சியாக 120 நிமிடங்கள் வரையான வீடியோக் ரெக்கார்டிங் செய்யும்வரை நீடித்து உழைக்கக்கூடியதாகக் காணப்படுகின்றது.

மேலும் இதன் சேமிப்பு வசதினை microSDHC கார்ட் மூலமாக 32 GB வரை அதிகரிக்கக்கூடிய வசதியும் தரப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கமெராவின் பெறுமதியானது 54 டொலர்களாக அமைந்துள்ளது.

# வெளுக்கின்றது கூட்டமைப்பின் சாயம்

**இலங்கையில்** தமிழ் மக்களின் தேசியம் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் கொள்ளை நிலைப்பாடுதான் என்று நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் தற்போது ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள்.

இலங்கையில் தமிழ் மக்கள் பல பிரிவுகளாக பிரிந்து கிடக்கின்றனர். யாழ்ப்பாணத்தவர்கள், வன்னி பெரு நிலப்பரப்பைச் சேர்ந்தவர்கள், கிழக்கு மாகாணத்தவர்கள், மலையக தமிழர்கள், கொழும்புத்தமிழர்கள் என்று தமாகவே பிரந்து தனித்தனியானஅரசியல் முன்னெடுப்புகளில் இருக்கின்றனர். இந்தப் பிரிவினருக்குள்ளே ஒற்றுமை இல்லை. அதை அரசியல் தலைமைகள் விரும்பவும் இல்லை.

இலங்கை தமிழ் மக்களின் இத்தகைய சிறப்பான பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களின் தலைமை அரசியல் கூட்டமைப்பாக இதுவரை காட்டிக் கொண்டுள்ளது. இதற்கு துணையாக இருந்தது ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் ஒற்றுமையாக ஒரு இலக்கு நோக்கி பயணிக்கின்றார்கள் என்ற மக்களின் நம்பிக்கைதான்.



கூட்டாக பயணிப்பதற்காக கூட்டுக்குள் இருக்கும் கட்சிகள் தமது நிலைப்பாடுகளிலிருந்து எதை விட்டுக் கொடுத்திருந்தார்கள், எதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். என்பதையோ, கூட்டு தற்காலிகமானதா? என்பதையோ தமிழ் மக்கள் ஆராயவில்லை.

அதிகாரம் மிக்க கூட்டாக அங்கீகாரம் பெறாத கூட்டாகவே இதுவரை உள்ளது. அதை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்து கொள்வதில் இன்னும் இழுபறிகள் தொடர்கின்றது. சம்மந்தர் தலைவர், சேனாதிராஜா செயலாளர், சுரேஸ் பிரேமச்சந்திரள் ஊடகப் பேச்சாளர். சுமந்திரன் சர்வதேச மற்றும் சுரேசுக்கு மேலதிகமான விஷேட பேச்சாளர், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பிரதித் தலைவர்கள்போல் இருக்கலாம் என்பதுதான் கூட்டமைப்பின் தற்போதைய அதிகாரம் மிகுந்த நிர்வாக மையமாக உள்ளது.

தமிழர் விடுதலை கூட்டணியின் உறுப்பினராக இருந்து கூட்டமைப்புக்குள் உள்ளீர்க்கப்பட்ட சம்மந்தன் இப்போது தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக தன்னை உயர்த்திக் கொண்டுள்ளார். தமிழர் அரசியலில் தந்தை செல்வநாயகம், பெருந்தலைவராக இருந்தபோது உயிர்ப்போடும் செல்வாக்கோடும் இருந்த தமிழரசுக்கட்சி பின்னர் சிதைந்து தொலைந்துபோனது.

புலிகளின் கைப்பொம்மையான கூட்டுக்குள் பிணத்துக்குச் சமமாக இருக்க முடியாது என்று ஆனந்த சங்கரி கூட்டை விட்டு வெளியில் வந்தபிறகு, செயற்பாட்டில் இல்லாமலிருந்த தமிரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தை கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாக எடுத்துக் கொள்ள புலிகள் விரும்பினர். வீட்டுச் சின்னத்திற்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதை தமது பிறவிக் கடமையாக ஏற்று இரத்தத் திலகட்டு புல்லரித்துக் கொண்டிருப்பதை புலிகள் திட்டமிட்டு முடிவு செய்தனர்.

புலிகள் அவ்வாறு பார்த்த கணக்கை புலிகள் இருக்கும் வரை பொத்திக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சியினர் புலிகள் அழிந்ததும் பாராளுமன்றத்தில் பயங்கர வாதத்தை அழித்த ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்ததோடு சவப்பெட்டிகளிலிருந்து வெளியில் வந்தார்கள்.

புலிகள் இல்லையென்ற துணிச்சலும் சம்மந்தருக்கும் சங்கரிக்குமிடையிலான அரசியல் போட்டிகளும் தமிழரசுக்கட்சியின் உயிரூட்டலுக்கு வாய்ப்பாக அமைந்தது. தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர்கள் கட்சியின் புனர் அமைப்பு, நிர்வாக கட்டமைப்பு மீண்டும் ஒழுங்கமைக்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தனர்.

அத்தகைய வற்புறுத்தல்களுக்கு அமைவாக தமிழரசுக்கட்சியின் அலுவலகங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் திறக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வீட்டுச் சின்னத்துக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதாலும், தமிழரசுக் கட்சியினரே கூட்டுக்குள்ளே கூடுதல் உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதால் கூட்டமைப்பின் பிரதான உரிமையாளர்களாக அல்லது பங்காளிகளாக தமிழரசுக்கட்சியினர் மாறினார்கள்.

கூட்டமைப்பில் இணைந்து கொண்டிருப்பவர்கள் என்ற தோரணையில் சுரேஸின ஈ.பி.ஆர்.எல்.எப், செல்வத்தின் ரெலோ, அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் இ.த.காவும் தற்போது கூட்டில் இருக்கின்றனர். அவர்கள் தவிர மட்டக்களப்பிலிருந்து அரியநேந்திரன், கிளிநொச்சியிலிருந்து சிறீதரன், யாழ்ப்பாணத் திலிருந்து சரவணபவான் போனறவர்கள் கட்சிப்பின்னணியிலிருந்து கூட்டுக்குள் வரவில்லை. ஆனாலும் அவர்கள் தற்போது தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர்களுக்கு சமமான உரிமையுடன் கூட்டமைப்புக்குள் இருக்கின்றனர். அவர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவாகும்வரை தமிழரசுக்கட்சியின் நிழலில் இருந்துவிட்டுப் போகட்டும் என்று தமிழரசுக் கட்சியினர் ஏற்றுக் கொண்டதற்கு காரணம் அவர்களையும் கொள்கைகளுக்கு அப்பால் தற்போது இணைத்துக் கொண்டால் கூட்டமைப்பில் ஏனைய கட்சிகளைவிட தமிழரசுக் கட்சியினரின் பலம் மேலோங்கி இருக்கும் என்ற சிறிய அரசியல் கணக்குத்தான்.

இவ்வாறான சூழலிலையே தமிழரசுக் கட்சியினர் கூட்டமைப்பை தனியான கட்சியாக பதிவு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஏனையவர்கள் கூட்டமைப்புக்கு சிறிய கட்சிகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இதற்காக பல கூட்டங்களை கூடி பேசியபோதும் இணக்காமான பதிலை தமிழரசுக்கட்சியினர் தெரிவிக்காது நழுவல் போக்கிலேயே இருக்கின்றனர். ஆனால் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது கூட்டமைப்பை பதிவு செய்து வலிமையுள்ளதாக்குவதற்கு எத்தகைய விட்டுக் கொடுப்புக்களையும் செய்யப்போவதாக சம்மந்தன் கூறுகின்றார்.



**கூட்டமைப்பை தனியாக பதிவு செய்தால் தமிழரசுக்கட்சி மீண்டும் செயலிழந்து போய்விடும். ஈ.பி.ஆர.எல்.எப்., ரெலோ, த.கா.புளொட், த.வி.கூ ஆகிய சிறிய கட்சிகள் எல்லோரும் சம அந்தஸ்த்து பெற்றுவிடும் என்பது மட்டுமில்லாமல் கூட்டமைப்பின் தலைமை வகிபாகம் தமிழரசுக்கட்சிக்குரியதாக இருப்பது ஆட்டம் கண்டுவிடும், ஏனைய அதிகாரங்களும் உத்தியோக பூர்வமாக பகிர்ந்தளிக் கப்பட வேண்டும். வீட்டுச் சின்னத்தின் உரிமையாளர்கள் என்ற நிலைமை மாற்றமடையும் என்பதையெல்லாம் தமிழரசுக் கட்சியினரால் நினைத்துப்பார்க்கவே நெஞ்சு வலியாக இருக்கின்றது.**

ஆனால் உண்மையில் கூட்டமைப்பை பதிவு செய்யும் விடயமானது சரியான திசை நோக்கி முன்னெடுக்கப்படவில்லை. என்பதேயாகும்.

கூட்டமைப்புக்குள்ளேயே கூடிப்பேசியும் சரிவரவில்லை. தமழசுக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் கூடி கூட்டமைப்பை பதிவு செய்வதாக அறிவித்தபோதும் அதற்கும் புத்திஜீவிகள் முட்டுக் கட்டை போடுகின்றார்கள். இந்த நிலையில் வடக்குக்கான மாகாணசபை தேர்தலும் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. என்பதால் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியினரின் ஆதிக்கத்துக்கு முடிவும் கட்டப்பட வேண்டும்.

கூட்டமைப்பை தனிக் கட்சியாக பதிவு செய்யும் விவகாரம் " சாம பேத தான தண்டம்" என்ற கட்டத்தின் இரண்டாம் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது. அதாவது கூட்டுக்குள்ளேயே பல தடவைகள் பேசப்பட்டது சமாதான பேச்சு "சாமம்" அது பலனலிக்கவில்லை.

இப்போது சமயத் தலைவர்கள் மற்றும் புத்தி ஜீவிகளிடம் உத்தியோகபூர்வமாக நிலைமையை விளக்கி கூட்டமைப்பை பதிவு செய்வதற்கு தமிழரசுக் கட்சியினர் முன்வர வேண்டும். அதற்கு நீங்கள் உதவவேண்டும் இல்லாவிட்டால் அடுத்த கட்டத்தை நாங்கள் நாடுகின்ற போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் எங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்

சிறுபான்மையினராக இருப்பதாலும், வீட்டுச் சின்னம் தமக்கே உரித்தானது என்பதாலும் அவர்கள் தமிழரசுக் கட்சியோடு இணங்கிச் செயற்படுவதே சரியாக இருக்கும் என்ற வாதமே தமிழரசுக் கட்சியினரிடம் மேலோங்கி இருக்கின்றது. இதற்கு காரணம் கூட்டமைப்பை தனியாக பதிவு செய்தால் தமிழரசுக்கட்சி மீண்டும் செயலிழந்து போய்விடும். ஈ.பி.ஆர.எல்.எப்., ரெலோ, த.கா.புளொட், த.வி.கூ ஆகிய சிறிய கட்சிகள் எல்லோரும் சம அந்தஸ்த்து பெற்றுவிடும் என்பது மட்டுமில்லாமல் கூட்டமைப்பின் தலைமை வகிபாகம் தமிழரசுக்கட்சிக்குரியதாக இருப்பது ஆட்டம் கண்டுவிடும், ஏனைய அதிகாரங்களும் உத்தியோக பூர்வமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். வீட்டுச் சின்னத்தின் உரிமையாளர்கள் என்ற நிலைமை மாற்றமடையும் என்பதையெல்லாம் தமிழரசுக் கட்சியினரால் நினைத்துப்பார்க்கவே நெஞ்சு வலியாக இருக்கின்றது.

பல விடயங்களில் கூட்டமைப்பில் இருக்கும் ஏனைய கட்சியினரை கணக்கில் எடுக்காமல் தமிழரசுக்கட்சியனர் முடிவுகளை எடுத்துச் செயலாற்றியபோதும், அவற்றுக்காக முடிந்த முடிவாக எதிர்க்கமுடியாமல் பொறுத்துக் கொண்ட போதும், சில விடயங்களை வெளியில் கூறி சிறிய கட்சிகள் தமது அதிருப்தியை வெளிக்காட்டியதையும் தமிழ் மக்கள் அறிவார்கள்.

அப்போதெல்லாம் புத்திஜீவிகள் என்போரும், சில சமய தலைவர்களும் இரு தரப்பையும் சமரசம் செய்தனர். அல்லது "நீங்கள் பிரிந்து நின்றால் தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்" இப்போது வைத்துக் கொண்டுள்ள அந்த மூலதனத்தை இழந்து விடுவீர்கள் பிறகு நீங்கள் ஒவ்வொருவரும் தனிநபர்களாகி விடுவீர்கள் என்று பயமுறுத்தினார்கள்.

யதார்த்தம் அதுவாக இருந்தாலும் தொடந்தும் கூட்டமைப்பு என்ற நிழலில் தொங்கு தசைகள் போல் இருக்கமுடியாது என்றும் அதிலும் தமிழரசுக் கட்சியினரின் தான்தோன்றித்தனமான முடிவுகளுக்கு "திருடனுக்கு தேள் கொற்றியது" போல் இருக்கமுடியாது என்பதால் கூட்டமைப்பை தனிக்கட்சியாக பதிவு செய்யவேண்டுமென என்று கோரிக்கை முன்வைத்துள்ளனர்.சுரேஷ் அணி கூட்டமைப்பினர். அதுவே கடந்த வாரம் நடந்தது. இது " பேதங்களை பேசி தீர்வுகாண முயற்சிக்கும் "பேதம்" இதுவும் வெற்றியளிக்காவிட்டால்

அடுத்து வெளிப்படையாக தமிழரசுக்கட்சி தனது நிலைப்பாட்டையும், தமக்கு கூட்டமைப்புக்கு என்ன பங்கு இருக்கவேண்டும் என்பதையும் பேசுவதும், சுரேஷ் அணியினரும் தமக்கு கூட்டமைப்பில் என்ன வேண்டும், தாம் எதை விட்டுக் கொடுக்க தயாராக இருக்கின்றனர் என்பதையும், தமிழரசுக் கட்சி எதை விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதையும் பேசுவது இடம்பெறும்.

இந்த முயற்சிக்கு இவர்கள் போவார்களானால் பின்னர் கூட்டமைப்பு ஏதோ ஒரு சமரசத்தில் பதிவு செய்யப்பட்டாலும் ஓலைப் பெட்டிக்குள் நண்டுகளை விட்டதைப் போல் தான் இருக்கும் என்பது வேறுவிடயம்.

இறுதிக் கட்டத்தை இவர்கள் அடைவார்களானால் அதாவது "தண்டம்" அதாவது இரு அணியினரும் பெருமைகளை பீற்றிக் கொண்டும், ஒருவரைப் பற்றி மற்றவர் சேறு பூசிக்கொண்டும் அரசியலில் எதிரிகளாகமாறி தமிழ் மக்களுக்கு துரும்பாது தலைவலியாக இருப்பவர்கள் தீராத தலைவலியாகிவிடுவார்கள்.

இதுதான் தமிழ் மக்களின் தேசியத்தின் பாதுகாவலர்களாக கூறிக்கொள்ளும் கூட்டமைப்பினரின் தற்போதைய கவலைக் குரிய நிலைமையாகும். தமிழ் மக்களின் தேசியம் இப்படி ஒவ்வொருவரின் பதவிச் சண்டையாகியுள்ளது.

இவர்களின் சண்டையை விளக்குப் பிடித்து தீர்த்து வைக்கவும் முடியாமல், புதிதாக ஒரு அரசியல் முகத்தையும் காட்ட முடியாமல் புத்திஜீவிகள் என்போரும், புலம் பெயர்ந்து வாழும் புலி ஆதரவாளர்களும் படுகின்ற பாடு சொல்லில் அடங்காது. கூட்டமைப்பை பதிவு செய்யும் விவகாரத்துக்கு இனியாவது நியாயமான தீர்வு காணப்படா விட்டால் எல்லோரையும் மீறி சில சர்ச்சைகள் அம்பலத்துக்கு வரும். ஆதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

இது நாள்வரை கூட்டமைப்பை பலமான அரசியல் கட்டமைப்பாக நினைத்து அதற்கு வாக்களித்து வந்த தமிழ் மக்கள்தாம் எத்தகைய முட்டாள் தனத்தை மீண்டும் செய்திருக்கின்றோம் என்று எண்ணி வருந்துவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவேண்டாம்.

தமிழ் மக்கள் கூச்சம் இல்லாமல் இன்னொரு பிரபாகரனைத் தேடுவார்கள் அல்லது யாராவது மீண்டும் தேசியம் பேசிக்கொண்டு அரசியல் களத்துக்கு வந்தால் அவர்களுக்குப் பின்னால் போவார்கள். தமிழ் மக்களை கையாளுவது அப்படி ஒன்றும் பெரிய காரிய மல்ல என்று நம்பும் புத்திஜீவிகளுக்கு நம் மத்தியில் குறைவே இல்லை. அது என்னது ஓ..வாழ்க தமிழ்! வாழ்க தமிழ் தேசியம்.

**அலசுவது மதியூகி**



# வடகொரியா போர்ப் பிரகடனம்

தொகுப்பு – வேணுகிருஷ்ணா

**தென்** கொரியாவுக்கு எதிராக வட கொரியா போர்ப் பிரகடனம் செய்துள்ளது. வட கொரியா நீண்ட தூர ஏவுகணைகளை அமெரிக்கா மற்றும் அண்டை நாடான தென் கொரியாவை தாக்கும் நோக்கத்தில் நிலை நிறுத்தி வருகிறது. வடகொரியாவின் இந்த நடவடிக்கைகளால், கொரிய தீபகற்பத்தில் போர் பதட்டம் ஏற்பட்டுள்ளது.

வட கொரியாவின் இந்த அதிரடி அறிவிப்புக்கு ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கி-மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது:-

அணு ஆயுத அச்சுறுத்தல்கள் என்பது விளையாட்டல்ல. வடகொரியாவின் தற்போதைய நிலைமை கட்டுப்பாட்டை இழந்து வெகு தூரம் சென்றுவிட்டது. இது மேலும் எல்லை மீறி செல்வதற்குள் அமைதி ஏற்பட வேண்டும். அணு ஆயுத ஒப்பந்தத்தை மீறியதற்காக வட கொரியா மீது தாக்குதல் நடத்த வேண்டும், என்ற நோக்கம் எந்த நாட்டிற்கும் ஏற்படவில்லை என நான் கருதுகிறேன்.

எனினும், வட கொரியாவின் நடவடிக்கைகளுக்கு மற்றவர்கள் பதிலடி கொடுத்துவிட்டால் அதன் பின்னர் உருவாகக் கூடிய பின் விளைவை எண்ணி நான் கவலையும், அச்சமும் அடைந்துள்ளேன் என தென் கொரியரான ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பான் கி-மூன் தெரிவித்தார்.

வட கொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையே ஏற்கனவே 1950 முதல் 1953 வரை போர் நடைபெற்றது. அப்போது தென் கொரியாவுக்கு அமெரிக்காவும், வட கொரியாவுக்கு சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளும் ஆதரவாக செயல்பட்டன. பின்னர் ஐநா தலையீட்டின் பேரில் போர் நிறுத் தப்பட்டது.

வட கொரியா நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளைத் தயா ரித்து சோதனை செய்தது. 3 முறை அணுகுண்டு சோதனையையும் நடத்தியது. இதனால் ஐநா பொருளாதாரத் தடை விதித்தது.

தென் கொரியாவும் அமெரிக்காவும் சேர்ந்து கூட்டு ராணுவப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் ஆத்திர மடைந்த வட கொரியா, "அமெரிக்காவின் ராணுவ நிலைகள் மீதும் தென் கொரியா மீதும் தாக்குதல் நடத்துவோம்" என்று எச்சரிக்கை விடுத்தது. அமெரிக்கா" தனது அணுகுண்டு வீச்சு விமானமான பி.2 போர் விமானத்தை தென் கொரிய பகுதியில் பறக்கச் செய்தும், போலியான குண்டுகளை ஆள்நடமாட்டம் இல்லாத பகுதிகளில் வீசியும் பயிற்சியில் ஈடுபட்டது. இதற்கு பதிலடி தரும் வகையில் ஏவுகணை-களை தயார் நிலையில் வைக்கும்படி ராணுவத்துக்கு, வட கொரிய அதிபரான கிம் ஜாங் உன் உத்தரவிட்டுள்ளார்.

வடகொரியாவின் இந்த மிரட்டலுக்கு பதிலடி கொடுக்க தென்கொரியாவும் தயாராகிவிட்டது. தென்கொரியா நாட்டு பெண் அதிபர் பார்க் ஜியூன் ஹை ராணுவ அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார். அப்போது வடகொரியாவின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க, இராணுவம் தயார் நிலையில் இருக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதனால் வடகொரியா தாக்கினால் அமெரிக்காவின் துணையுடன் வட கொரியா மீது தென்கொரியா எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே புதிய பாப்பரசர் பிரான் சிஸ் அண்மையில் தனது முதல் ஈஸ்டர் பிரார்த்தனை நடத்தினார். அப்போது கொரியா தீபகற்பத்தில் போர் பதற்றம் நீங்கி அமைதி ஏற்பட வேண்டும். சிரியாவில் அரசியல் ரீதியிலான தீர்வு ஏற்பட வேண்டும் என பிரார்த்தித்தார்.

## ரஸ்யா தூதரகத்தை மூட முயற்சி

தூதரகத்தை காலி செய்யும் முயற்சியை மறு பரிசீலனை செய்யும்படி, ரஷ்யாவிடம் வடகொரியா தெரிவித்துள்ளது. தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து போர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளன. அமெரிக்க போர் விமானங்களும், கடற்படை கப்பலும் கொரிய எல்லை பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளன. நாளுக்கு நாள் நிலைமை மோசமாவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வடகொரியாவின், பியொங்யாங் நகரில் உள்ள தூதரகத்தில் உள்ள ஊழியர்களை தங்கள் நாட்டுக்கு திரும்பும்படி, ரஷ்யா அறிவுறுத்தியுள்ளது. தூதரக ஊழியர்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

## போர் மையமாகும் குவாம் தீவு:

கொரிய தீபகற்ப பகுதியில் அமெரிக்காவுக்கு சொந்தமான குவாம் தீவு மீது வடகொரியா முதலில் தாக்குதல் நடத்தலாம் என்பதால் அமெரிக்கா தமது ஏவுகணைகளை முன்நகர்த்தியுள்ளது. தென்கொரியா, அமெரிக்கா மீது போர் தொடுப்போம் என்பது வடகொரியாவின் பிரகடனம். இந்நிலையில் அமெரிக்கா, தென்கொரியா மீது அணுகுண்டு தாக்குதல் நடத்துவதற்கான கடைசி உத்தரவை ராணுவத்துக்கு பிறப்பித்துவிட்டோம் என்றும் அந்நாடு அறிவித்துள்ளது. இதனால் வடகொரியா ராணுவம் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என்ற நிலை உருவாகி யுள்ளது. கொரிய தீபகற்ப பகுதியில் குவாம் என்ற தீவு அமெரிக்காவுக்கு சொந்தமாக உள்ளது. இத்தீவின் மீதுதான் வடகொரியா முதல் தாக்குதலை நடத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இத்தீவில் அனைத்து முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளையும் அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது.


வடகொரியா ஏவுகணை மூலம் அணுகுண்டு வீசினால் அதை நடுவானிலேயே வழிமறித்து அழிக்கும் ஏவுகணைகளை அமெரிக்கா தயாராக வைத்துள்ளது. டிரக் லோஞ்சர்களில் ஏவுகணைகள் பொருத்தப்பட்டு முன் நகர்த்தப்பட்டுள்ளன. அதேபோல எதிரி நாட்டு ஏவு-கணையை முன்கூட்டியே கண்டறிந்து தகவல் தெரிவிக்கும் ரேடார்களும் முன் நகர்த்தப்பட்டுள்ளன.

## தொழிலாளர்களை வர விடாமல் தடுத்த வடகொரியா

வடகொரியாவின் எல்லையில் உள்ள கேசோங் தொழிற்பேட்டைக்கு வேலைக்கு வந்த தென்கொரியா தொழிலாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். வடகொரியா.தென்கொரியா எல்லையில் கேசோங் தொழில் நகரம் உள்ளது. இது வடகொரியாவின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. எனினும், இங்குள்ள கேசோங் தொழிற்பேட்டையில் 250க்கும் மேற்பட்ட தென்கொரிய கம்பெனிகள் உள்ளன. இவற்றில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் பணிக்கு வந்த போது, வடகொரிய அதி-காரிகள் அவர்களை தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினர். வடகொரியாவின் இந்த நடவடிக்கையால், கொரிய தீபகற்ப பகுதியில் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

## அணுசக்தி வளாகத்தை மீண்டும் திறக்க முடிவு

இந்நிலையில் சர்வதேச அணு ஆயுத குறைப்பு ஒப்பந்தத்தை தொடர்ந்து, 2007ஆம் ஆண்டு மூடப்பட்ட யோங்பியோன் அணுசக்தி வளாகம் மீண்டும் திறக்கப்படும் என்று வட கொரியா அறிவித்துள்ளது.



"வடகொரிய அரசு சுய கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என வடகொரியாவின் நெடுநாள் நட்பு நாடான கியூபாவின் முன்னாள் அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ கருத்து தெரிவித்திருக்கிறார். கியூபா நாட்டின் பத்திரிகை ஒன்றில் வடகொரியாவில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை குறித்து அவர் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:- தங்களு டைய தொழில்நுட்ப முன்னேற்றம் அறிவியல் முன்னேற்றம் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக்காண்பித்திருக்கின்ற வட கொரியர்கள், இனி சற்று பொறுமை காக்க வேண்டும் . தற்போது கொரிய வளைகுடாவில் நிலவும் சூழ்நிலை நம்ப முடியாத தாகவும் அபத்தமானதாகவும் இருக்கிறது. வடகொரியா கியூபாவுடன் எப்போதும் நட்பாகவே இருந்துள்ளது. கியூபாவும் அதனுடன் நட்பை தொடரவே விரும்புகிறது. வடகொரியா அதன் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை உலகிற்கு காண்பித்துவிட்டது. இப்போது வடகொரியா தனது நட்பு நாடுகளுக்கு செய்ய வேண்டிய கடமை பற்றி அதற்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மேலும் இது போன்ற போர்கள் உலகின் 70 சதவீத மக்களை மிக மோசமாக பாதிக்கும் வாய்ப்புகள் உள்ளது என்பதை வடகொரியா மறந்து விடக்கூடாது."




# புலிகளின் வீழ்ச்சி! இறுதி நாட்கள்...

**டிக்சித்துக்கு** டில்லியில் இருந்து தகவல் போனது – "யாழ்ப்பாணத்திலுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை புதுடில்லிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவரை அழைத்து செல்ல இந்திய விமானப் படையின் ஹெலிகொப்டர் யாழ்ப்பாணத்தில் தரையிறங்க இலங்கை அரசின் அனுமதி வேண்டும்".

டில்லியாலேயே பெற முடிந்திராத அனுமதி இது. "நோ ப்ராப்ளம்" என்றார் டிக்சித். சில மணி நேரத்திலேயே கொழும்பின் அனுமதியை பெற்றுக் கொடுத்தார் டிக்சித்.

**இதை எப்படி அவர் சாதித்தார்?**

இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனேவின் இல்லத்துக்கு நேரில் சென்றார். அங்கே போய் கதையை லேசாக ஒரு ட்டுவிஸ்ட் கொடுத்து சொன்னார்.

"இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவது எப்போது என்று முடிவெடுக்கும் முன்னர், டில்லி ஒரு விஷயத்தை செய்ய விரும்புகிறது. எல்லா ஈழ விடுதலை இயக்க தலைவர்களையும் டெல்லிக்கு அழைத்து, சில விஷயங்களை 'கடுமையாக' கூற விரும்புகிறது.

பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார். அவரை, டில்லிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அவர்களை தொடர்பு கொள்வதை நாங்கள் (டில்லி) பார்த்துக் கொள்கிறோம். எங்கள் ஹெலிகொப்டர் யாழ்ப்பாணத்தில் இறங்க அனுமதி வேண்டும்"

இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனே, உடனே அனுமதி கொடுத்தார்.

அடுத்த கட்டமாக, யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

அப்போது கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் முதல் செயலாளராக (அரசியல் பிரிவு) இருந்தவர் ஹார்டிப் பூரி. அவரிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தார் டிக்சித்.

ஹார்டிப் பூரி, இந்திய தூதரகத்தில் இருந்த றோ அதிகாரி ஒருவர் உதவியுடன் யாழ்ப்பாணம் சென்றார். பிரபாகரனை சந்தித்தார்.

"இந்தியப் பிரதமர் உங்களை சந்திக்க விரும்புகிறார். இலங்கையில் வடக்கேயும் கிழக்கையும் இணைப்

## பிரபாவின் இந்தியப் பயணம்?

பதற்கு ஜே.ஆர். சம்மதித்திருக்கிறார். அத்துடன் தமிழ்மொழியை ஆட்சி மொழியாகச் சேர்த்துக் கொள்ளவும் சம்மதித்திருக்கிறார். இவற்றின் அடிப்படையில் நீங்கள் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவீர்களா"

இதற்கு பிரபாகரன், "இல்லை. இலங்கை அரசு எங்களது இரண்டு நிபந்தனைகளுக்கு சம்மதிக்க வேண்டும். முதலாவது, இலங்கை இராணுவம் தாங்கள் மே 26ஆம் திகதிக்கு முன்னர் நின்ற இடங்களுக்குப் பின்வாங்க வேண்டும். ('ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற இராணுவ நடவடிக்கையில், புலிகள் வைத்திருந்த சில பகுதிகளை



கைப்பற்றியிருந்தது இலங்கை இராணுவம்)

இரண்டாவது, தமிழ் அகதிகள் அவர்களது சொந்த ஊர்களில் குடியமர்த்தப்படவேண்டும். இந்த இரு நிபந்தனைகளுக்கும் இலங்கை அரசு சம்மதித்தால் பேசலாம்"

இந்த இடத்தில் ஒரு விஷயத்தைக் கவனியுங்கள். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே அறுதி செய்யப்பட்டு தயாராக இருக்கும் ஒப்பந்தம் பற்றி எந்தப் பிரஸ்தாபமும் இந்தச் சந்திப்பில் இல்லை.

கொழும்பு திரும்பிய பூரி, இந்த நிபந்தனைகள் பற்றி டிக்சித்திடம் கூற, அவர் ராஜீவ் காந்தியிடமும், ஜே.ஆர். ஜெயவர்த்தனேவிடமும் அது பற்றிக் கூறினார்.

இந்த நிபந்தனைகளையும் ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்வது என்று இருவரும் முடிவெடுத்தார்கள். மீண்டும் யாழ்ப்பாணம் சென்ற பூரி, பிரபாகரனை சந்தித்தார். இம்முறைதான் முதல் தடவை யாக ஒப்பந்தம் ஒன்றுபற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. "இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட சான்ஸ் இருக்கிறது" என்று லேசாகச் செல்லப்பட்டது.

மீண்டும் பூரி யாழ்ப்பாணம் சென்றது ஜூலை மாதம் 24ஆம் திகதி. அவருடன் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் சென்றிருந்தார். பாதுகாப்பு அதிகாரியின் பெயர், கப்டன் குப்தா. கப்டன் குப்தா யாழ்ப்பாணம் சென்ற காரணம், பிரபாகரனை டில்லிக்கு அழைத்துச் செல்வதற்கு! (தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

## வதை 56 — மணியம்

**நான்** அங்கிருந்த எல்லோருடனும் கதைத்திருக்காவிட்டாலும், அங்கிருந்தவர்களில் முக்கியமானவர்களில் சிலரைப்பற்றி படிப்படியாக அறிந்து கொண்டேன். அப்படி அறிந்த நேரத்தில்தான் 'புளொட்' இயக்கத்தில் இருந்து பிரிந்து 'தீப்பொறி' இயக்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவரும், சந்ததியாரின் மரணத்தின் பின்னர் அந்த இயக்கத்தை தலைமைதாங்கி நடாத்தியவருமான நோபேர்ட் (கேசவன், கோவிந்தன் என்பது அவரது ஏனைய பெயர்கள்) அங்கிருப்பதை அறிந்தேன். முதல்நாளே அவர் என்னைப் பார்த்து புன்னகைத்ததின் மர்மம் பின்னர்தான் தெரிந்தது.

நோபேர்ட்டை அதற்குமுன்னர் நான் ஒருபோதும் நேரடியாகச் சந்தித்திருக்கவில்லை. ஆனால் அவர் கண்டியிலிருந்து எமது தோழர்கள் சிலரால் சிறிது காலம் வெளியிடப்பட்ட 'தீர்த்தக்கரை' என்ற தரம் வாய்ந்த இலக்கிய சஞ்சிகைக் குழுவில் இருந்தபோது கேள்விப்பட்டிருந்தேன். அவர் திருகோணமலையில் அரச சேவையில் (கல்வி இலாகா என்று நினைவு) கடமையாற்றிய காலத்தில், அங்கு நீர்ப்பாசன இலாகாவில் கடமையாற்றிய எமது தோழர் ஒருவருடன் அவருக்கு நெருக்கமான தொடர்புகள் இருந்தது.

அந்த நெருக்கமான தொடர்புகள் காரணமாக அவர் என்னைப் பற்றிக் கேள்விப்பட்டு, என்னைச் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார். நான் ஒருமுறை அரசியல் கூட்டமொன்றுக்காக திருகோணமலை சென்றிருந்த சமயம் சந்திக்க முயன்றும் அவர் கொழும்பு சென்றிருந்தபடியால் சந்திக்க இயலாமல் போய்விட்டது. பின்னர் ஒருமுறை திருகோணமலையில் கடமையாற்றிய எமது தோழர் யாழ்ப்பாணம் வந்திருந்த நேரத்தில் நோபேர்ட்டும் அங்கு வந்திருந்தபடியால், யாழ்.கலட்டியிலிருந்த அந்தத் தோழரின் வீட்டில் நோபேர்ட்டை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காக நான் அந்தத் தோழரின் வீட்டிற்குச் சென்று நீண்ட நேரம் காத்திருந்தபோதும் அன்று அவர் வரவில்லை. ஏதோ சில வசதியீனங்களால் வரமுடியாமல் போய்விட்டதாகப் பின்னர் தகவல் அனுப்பியிருந்தார்.

எனவே இப்பொழுதுதான் எதிர்பாராத இடத்தில் நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கிறோம். சந்தித்தாலும் கண்களால் ஒருவரையொருவர் பார்த்தோமேயொழிய கதைக்கும் சூழல் இன்னமும் உருவாகி இருக்கவில்லை. நான் அவரை முதன்முதலில் கண்டபொழுது, அவரின் முதுகு முழுவதும் புலிகளால் நடாத்திய அடி காயங்களின் தழும்புகள் நிறைய இருந்ததைக் கண்டு அதிர்ந்து போனேன். அதேநேரத்தில் எனது முறையும் இனி வரத்தானே போகிறது என எண்ணிக் கவலை அடைந்தேன்.

இந்த தோழர் நோபேர்ட், கோவிந்தன் என்ற புனைபெயரில் எழுதிய 'புதியதோர் உலகம்' என்ற நாவல் அன்றைய காலகட்டத்தில் பலராலும் வாசிக்கப்பட்ட ஒன்றாகும். அந்த நாவல் புளொட் இயக்கத்தின் உள் முரண்பாடுகள் குறித்தும், இயக்கத்துக்குள் நிகழ்ந்த வேண்டத்தகாத பல்வேறு சம்பவங்கள் குறித்தும் பேசியதால், அந்த நாவலை புலிகள் உட்பட மற்றைய இயக்கத்தவர்கள் மட்டுமின்றி, புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் வாங்கி வாசித்தது எனக்குத் தெரியும். யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்னால் இருந்த எனது கடையில் மட்டும் நூற்றுக்கும் அதிகமான அந்த நாவலின் பிரதிகளை நான் விற்பனை செய்திருக்கிறேன். புளொட் இயக்கத்தினர் அந்த நாவலை விரும்பாத போதிலும், நான் அதை விற்பனை செய்ததைத் தடுக்க முற்படவில்லை. (இந்த நாவலின் இரண்டாவது பதிப்பு நோபேர்ட் புலிகளால் கொல்லப்பட்ட பின்பு இந்தியாவில் வெளிவந்துள்ளது)

நோபேர்ட் புலிகளால் கடத்தப்பட்டபொழுது நான் வெளியில் இருந்தேன். உண்மையில் அவரது கடத்தல், தமது பாதுகாப்பு சம்பந்தமாக அவர்கள் கொண்டிருந்த அசட்டையின் ஒரு விளைவு என்று அப்பொழுது கேள்விப்பட்டிருந்தேன். அவரது இயக்கத்தைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவனான கைதடியைச் சேர்ந்த தர்மலிங்கம், சுந்தரம் மருந்துக்கடை உரிமையாளரின் மகன் யோகசுந்தரம் (யோகன்) ஆகியோர் புலிகளால் பிடித்துச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட பின்னர், புலிகளின் பாதுகாப்பு கெடுபிடிகள் மிகவும் இறுக்கமாக இருந்த ஒரு சூழலில், மிகவும் பிரயத்தனம் எடுத்து தமது இயக்கத்தவர்களைச் சந்தித்து நிலைமையை ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த போதே நோபேர்ட் கடத்தப்பட்டார்.

நோபேர்ட் கொக்குவிலில் தங்கியிருந்த வீட்டினைச் சேர்ந்த ஒரு சிறுவன் புலிகளுக்குக் கொடுத்த தகவலின் பேரிலேயே நோபேர்ட் கடத்தப்பட்டார். அவர் தங்கியிருந்த வீட்டில் ஆட்களை அழைத்து சந்திப்புகள் நடாத்தியது அந்தச் சிறுவனுக்கு வித்தியாசமாக இருந்ததால், அவன் அதைப் புலிகளுக்குத் தெரியப்படுத்தியதால் இந்த விபரீதம் நடந்துள்ளது. அந்தச் சிறுவன் அதை திட்டமிட்டுச் செய்தானா அல்லது எதேச்சையாகச் செய்தானா என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால் புலிகள் சிறுவர்களை போராளிகளாகப் பயன்படுத்தியது மட்டுமின்றி, அவர்களை தமது உளவாளிகளாகவும் பல இடங்களில் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பதற்கு பல சம்பவங்கள் உதாரணங்களாக உள்ளன.

நோபேர்ட்டின் கடத்தல் எனக்கு சேகுவேராவின் கதையைத்தான் அந்த நேரத்தில் ஞாபகப்படுத்தியது. சேகியூபாவை விட்டு வெளியேறி பொலிவியப் புரட்சிவாதிகளுடன் இணைந்து அந்நாட்டில் புரட்சியை உண்டு பண்ணுவதற்காகத் தங்கியிருந்த போதுதான் கைதுசெய்யப்பட்டார். அவரையும் அங்கிருந்த சாதாரண மக்களில் ஒருவன்தான் பணத்துக்கு ஆசைப்பட்டு காட்டிக் கொடுத்ததாகச் சொல்லப்படுவதுண்டு.

நோபேர்ட்டுடன் அந்த நேரத்தில் கதைக்க முடியாவிட்டாலும், பின்னர் நாம் உரையாடக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. குறிப்பாக, நாம் வைக்கப்பட்டிருந்த அந்த ஆனைக்கோட்டைச் சிறையிலிருந்து பின்னர் நாவற்குழி பகுதியிலிருந்த கோவிலாக்கண்டியில் புலிகள் அமைத்திருந்த திறந்தவெளிச் சிறைச்சாலையில் இருந்த ஓராண்டு காலத்தில் நாம் மிக நெருக்கமாகப் பழகவும், பல்வேறு விடயங்களையிட்டுக் கலந்துரையாடவும் முடிந்தது. இறுதியில் அவருக்கு நடந்த சோக முடிவு குறித்து சந்தர்ப்பம் வரும் பொழுது எழுதுவேன்.

அந்தச் சிறைச்சாலையில் நான் கண்ட இன்னொருவர், ஒரு காலத்தில் எம்மால் மிகவும் வெறுக்கப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை ஆகும். பொலிஸ் சேவையில் இருந்து ஒய்வுபெறுவதற்கு முன்னர் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் அமைந்திருந்த பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய தமோதரம்பிள்ளை, முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பாவை புலிகள் பொன்னாலை வரதராஜப் பெருமாள். கோவிலில் வைத்து சுட்டுப்படுகொலை செய்தது சம்பந்தமாக தீவிர விசாரணைகளில் ஈடுபட்டவர்களில் ஒருவராவார். அந்தக் கொலைச் சம்பவத்தில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் பங்கு பற்றியிருந்தார். (பிரபாகரன் பங்கு பற்றியிருந்தாலும், அவர் சுடவில்லை என்றும், தனது கடையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சோடா பெட்டிகளின் மறைவில் நடுங்கும் கரங்களுடன் கையில் ஒரு பிஸ்டலுடன் அவர் நின்றிருந்தார் என்றும், அந்தக் கோவிலின் அருகே தேநீர்க்கடை வைத்திருந்த ஒருவர் சொன்னதாக பின்னர் தகவல்கள் வெளியாகி இருந்தன)

துரையப்பா கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கில் தங்கள் தலைவர் பிரபாகரனைக் கைதுசெய்வதற்கு தாமோதரம்பிள்ளை அதீத முயற்சி எடுத்தமையே அவர் புலிகளால் கடத்தப்பட்டமைக்கான காரணமாகும்.

(துன்பியல்கள் தொடரும்...)



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



பொறையுடைமை

**நிறையுடைமை நீங்காமை வேண்டின்**
**பொறையுடைமை போற்றி ஒழுகப்படும்.**

நிறை உடையவனாக இருக்கும் தன்மை தன்னைவிட்டு நீங்காமலிருக்க வேண்டினால், பொறுமையைப் போற்றி ஒழுகவேண்டும்.

குறள்:154

## நல்ல நண்பன்




நன்றியுள்ள நண்பன்
நம்மில் சிலருக்கு அண்ணன்
நல்ல பெயர் எடுப்பதில்
நமக்குதவும் வல்லவன்.

ஒற்றுமைக்கு ஒருவன்
ஒழுக்கத்தில் மன்னவன்
அன்பில் அமுதானவன்
உனக்கு மூச்சிவன்.

பசூர் சியாஸ், மன்னார்.

# கடவுளின் வரம்!



சிற்றெறும்புகள் எல்லாம் ஒன்று கூடின. தலைவர் எறும்பு பேசியது:

"அன்பு சிற்றெறும்புகளே! ஒரு விஷயத்தைப் பற்றி விவாதிக்கத்தான் நாம் இங்கு கூடியுள்ளோம். நம்மைப் படைத்ததும் அந்தக் கடவுள்தான். கொடிய விஷப் பாம்புகளைப் படைத்ததும் அந்த கடவுள்தான். ஆனால், கடவுள் படைப்பு விஷயத்தில், ஓரவஞ்சனை செய்துவிட்டார். பாம்பு கடித்தால் மனிதர்கள் செத்து விடுகின்றனர். நாம் கடித்தால் அவர்கள் சாவதில்லை!"

"ஆமாம்! தாங்கள் சொல்வது சரிதான். கடவுள் நம் விஷயத்தில் ஓரவஞ்சனைதான் செய்துவிட்டார்!" என்றன மற்ற சிற்றெறும்புகள்.

"இந்த விஷயத்தைக் கடவுளிடமே சொல்லி முறையிடுவோம். நாம் கடித்தாலும் மனிதர்கள் சாக வேண்டும் என்ற வரத்தைக் கேட்போம். அதன் பிறகு நம்மை நசுக்கிக் கொல்ல ஒரு மனிதனும் இந்த உலகில் இருக்கமாட்டான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்ற கேட்டது தலைவர் எறும்பு.

"தாங்கள் சொல்வதை அப்படியே ஆமோதிக்கிறோம்!" என்றன மற்ற. சிற்றெறும்புகள்.

உடனே, அவைகள் அனைத்தும், கடவுளை எண்ணி தவமிருக்கத் தொடங்கின.

சில நாட்களுக்குப் பின் அவைகள் முன்னே கடவுள் தோன்றினார்.

"சிற்றெறும்புகளே! உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார் கடவுள்.

மற்ற எறும்புகளின் சார்பாக, தலைவர் சிற்றெறும்பு தங்கள் கோரிக்கையைக் கடவுளின் முன்னே வைத்தது.

"நாங்களும் கடித்தால், சாகவேண்டும் கடவுளே!" "சரி! அப்படியே ஆகட்டும்!"

வரம் கொடுத்துவிட்டுக் கடவுள் மறைந்தார்.

சிற்றெறும்புகளுக்கு ஒரே ஆனந்தம். அந்த ஆனந்தத்தில் கண்ணில்பட்ட மனிதர்களையெல்லாம் கடித்தன. கோபம்கொண்ட மனிதர்கள் அவற்றை விரல்களுக்கு இடையே வைத்து நசுக்கிக் கொன்றனர்.

தப்பிப் பிழைத்த சிற்றெறும்புகள் திகிலோடு மீண்டும் ஒன்று கூடின.

"என்ன கொடுமை? மனிதர்கள் மீண்டும் நம் இனத்தைக் கொல்கின்றனரே. கடவுள் என்ன வரம் கொடுத்தார்?" என்று கூக்குரலிட்டன.

"தெரியவில்லை. எங்கோ தவறு நடந்திருக்கிறது. மீண்டும் தவமிருப்போம். கடவுள் வரட்டும். முறையிடுவோம்!" என்றது தலைவர் சிற்றெறும்பு.

மீண்டும் அவை கடவுளை வேண்டி தவமிருந்தன.

சில நாட்களில் கடவுள் தோன்றினார்.

"மீண்டும் உங்களுக்கு என்ன பிரச்சினை?" என்று கேட்டார் கடவுள்.

"நாங்கள் கடித்தால் சாகவேண்டும் என்று வரம் கேட்டோம். ஆனால், நாங்கள் செத்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் வரம் எங்களுக்கு எதிராக வேலை செய்வதை எங்களால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை!" என்றது தலைவர் சிற்றெறும்பு.

"நாங்கள் சாகவேண்டும் என்று நீங்கள்தானே வரம் கேட்டீர்கள். அதைத்தானே நானும் கொடுத்தேன். இப்போது என்னையே குறைசொல்கிறீர்களே. என்ன அநியாயம் இது!" என்று குறைப்பட்டுக் கொண்டார் கடவுள்.

சிற்றெறும்புகள் ஒன்றை, ஒன்று பார்த்துக் கொண்டன.

"அடக் கடவுளே! நாங்கள் கடித்தால் சாக வேண்டும் என்று குறிப்பிட்டது மனிதர்களை. விஷப் பாம்புகள் கடித்தால் மனிதர்கள் சாகிறார்களே... அதுபோன்ற மனிதர்களைக் கொல்லும் விஷத்தைத் தான் உங்களிடம் நாங்கள் கேட்டோம். எங்களை நாங்களே அழித்துக்கொள்ள வரம் கேட்போமா?" என்று சொல்லிவிட்டு அழுதன. கடவுள் கோபத்தோடு சிற்றெறும்புகளைப் பார்த்தார்.

"யார் சாகவேண்டும் என்று நீங்கள் தெளிவாகச் சொல்லவில்லை. தவிர உங்கள் ஆசை மிகவும் மோசமானது. கோடிக்கணக்கில் உற்பத்தியாகும் உங்களுக்குப் பாம்பின் விஷத்தைக் கொடுத்தால் மனித இனத்தையே அழித்துவிடுவீர்கள்.


நான் ஆக்க, நீங்கள் அழிப்பதா? அது ஒருபோதும் நடக்காது. நான் ஒருமுறை வரம் கொடுத்தது கொடுத்ததுதான். அதை மாற்ற முடியாது. கடித்தால் மனிதர்களால் நசுக்கப்பட்டு சாகவேண்டும் என்பதைத்தான் உங்கள் தலையில் எழுதியிருக்கிறேன்.

அதையும் என்னால் மாற்றமுடியாது. உடனடியாக இங்கே இருந்து போய்விடுங்கள்!" என்று எச்சரித்துவிட்டு மறைந்தார் கடவுள்.

சிற்றெறும்புகள் அவமானத்தால் குறுகி, சோகத்துடன் அந்த இடத்தைவிட்டு அகன்றன.

## விண்வெளி ஆய்வுக்கு வழிகோலிய அறிஞர்

விண்வெளிக்குச் செல்ல வழி சொன்னவர் ஒரு பள்ளிக்கூட ஆசிரியர். ரஷ்யாவைச் சேர்ந்தவர். விமான இயல் விண்வெளிப் பொறியியல் பற்றி ஆராய்ச்சி செய்வது அவரது பொழுதுபோக்கு. விமானம் கண்டுபிடிப்பதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னரே - அதாவது 1883 ஆம் ஆண்டே விண்வெளிப் பயணத்தை மனிதன் துவக்குவதற்கான சாதனங்களையும் கடைப்பிடிக்க வேண்டிய வழி-முறைகளைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருந்தார். அவரது ஆராய்ச்சியின் முடிவுதான் பொருண்மை விகிதம். இதற்குப் பொருண்மை விகிதக் கொள்கை என்று பெயர்.



90 மீற்றர் நீளமும் 20 நிலைகளையும் கொண்ட 2017 ஆம் ஆண்டளவில் பயன்படுத்தப்போகும் 'பயணிகள் உந்துகணை டிரெயின்' மாதிரி வடிவமைப்பையும் அப்போதே அவர் தயாரித்து வைத்திருந்தார். உந்துகணையை முன்னோக்கிச் செலுத்த திரவ வடிவ எரிபொருளே சிறந்தது என்பதை நடைமுறையில் காட்டியவர் அவரே.

பல நிலை உந்துகணைகளே விண்ணிற்குப் பாலம் அமைக்கும் என்று அவர்கூறிய. கண்ட கனவு இன்று நனவாகிவிட்டது. எனினும் அதைப் பார்க்க, கொன்ஸ்டாண்டின் எடுயார்டோவிச் ஷியாங்கோவிஷ் என்ற அந்த தீர்க்கதரிசி இன்று உயிருடன் இல்லை. 1857 ஆம் ஆண்டு ரஷ்யாவில் பிறந்த இவர் தான் கண்ட கனவு நினைவாக மாறிய 1935 ஆம் ஆண்டு காலமானார். விண்ணிற்கு அவர் காட்டிய வழியில் தான் ரஷ்யாவும், அமெரிக்காவும் இன்று நடைபோடுகின்றன.

கு.துவிஷா, கொழும்பு -06

## அக்பர் பீர்பால் கதை

# சுமை

ஒருநாள் அதிகாலை வேளையில் அக்பர் சக்கரவர்த்தியும் அவர் புத்திரனான இளவரசனும், பீர்பாலும் நடை பயணத்தில் ஈடுபட்டனர்.

அதிகாலை குளிர்ந்த மெல்லிய நறுமணம் கலந்த காற்றின் சுவாசத்தினால் உள்ளம் மிகுந்த களிப்புற்றனர். இதனால் மாளிகையை விட்டு வெகுதூரம் சென்றுள்ளார்கள்.

திரும்பி வரும்போது அக்பர் சக்கரவர்த்தி கோடை வெளில் உடலில்பட தனது தளர்ச்சியான மேலங்கியை பீர்பாலின் தோளில் போட்டார்.




இதைக் கண்ணுற்ற இளவரசனும் தனது மேலங்கியையும் பீர்பாலின் தோளில் போட்டார்.

சிறிதுதூரம் சென்றபின்னர், இப்போது ஒரு கழுதைச் சுமையைச் சுமந்திருக்கிராராக்கும்" என பீர்பாலை வேடிக்கை செய்யலானார் அக்பர் சக்கரவர்த்தி.

பீர்பால் உடனே பதிலளித்தான், சக்கரவர்த்தியே ஒன்றல்ல, இரண்டு கழுதைகளின் சுமைகள் இருக்கின்றன. இதனைக் கேட்க அக்பர் சக்கரவர்த்தி வெட்கித் தலைகுனிந்தார்.

எம்.எல்.லாயீர்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்




**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகத 23.04.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.987**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 985**

பரிசுக்குரியவர்:
H.திமோத்தி பெஞ்சமின்,
கவுடான வீதி, தெஹிவளை.

பாராட்டுக்குரியவர்கள்

01. யோ.சுபாஷினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
02. உ.அபர்ணா, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.
03. ஜீ.யதுளன், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
04. எம்.பிரியந்தி, மஹரகம.
05. எம்.எம்.ஷிபானா, பூநகரி, மட்டக்களப்பு.
07. கு.சபிந்தா, சாவற்காடு, மன்னார்.
08. வி.ஆரபி, மிகிந்தலை.

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

152

கொள்ளை ராணி

# பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு



**ஜகதீஷ்சிங்** அவன்தான் பூலானை பொலிஸ் நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்த அதிகாரி.

கோழிக்குஞ்சுபோல பூலான் ஒடுங்கி, ஒடுங்கிப் போக, அவள் இளமையைச் சாப்பிட்ட பருந்து தான் அந்த அதிகாரி.

சிறை அதிகாரியை பழிதீர்த்து விட்டாள். அவனைவிடக் கொடிய பொலிஸ் அதிகாரியை இதுவரை விட்டுவைத்திருந்தாள்.

அது எத்தனை பெரிய தப்பு என்பதை இப்போது உணர்ந்தாள் பூலான்.

"அவன் வீடு எங்கேயடா இருக்கிறது?" பூலான் கேட்ட கேள்வியில் மிரண்டுபோன உளவாளி, சகல விபரங்களையும் ஒப்புவித்துவிட்டான்.

அவனை என்னசெய்வது என்பது போல பூலானின் கண்கள் பளபளத்துக்கொண்டிருந்தன.

அவள் எதுவும் கூறவில்லை. மான்சிங் தன் முடிவை நிறைவேற்றினான்.

'டுமீல்'

உளவாளியின் தலையை துப்பாக்கி ரவை துளைத்தது.

குபுக்கென்று இரத்தம் பீறிட, குப்புறக் கவிழ்ந்து, கடைசியாக மண்ணை முத்தமிட்டான்.

அன்றிரவே பொலிஸ் அதிகாரியின் வீட்டுக்குள் பூலானின் குழுவினர் புகுந்தனர்.

காவலுக்கு நின்ற பொலிஸ்காரன் ஒருத்தனை மான்சிங் மடக்கி கழுத்தை முறித்ததில் அவன் கத்தக்கூட வழியில்லாமல் செத்துப்போனான்.

கதவை உடைத்து உள்ளே புகுந்த சத்தம் கேட்டு, தனது கைத்துப்பாக்கியுடன் எழுந்து ஓடிவந்தான் பொலிஸ் அதிகாரி.

அதற்குள் மான்சிங் முந்திக் கொண்டான்.

'டுமீல் டுமீல்'

கைத்துப்பாக்கி அவன் கையில் இருந்து உதிர்ந்தது. அவன் உடல் தரையில் மல்லாந்து சரிந்தது. ஆனால் இன்னமும் உயிர் இருந்தது.

பொலிஸ் அதிகாரியின் மனைவியும், இரண்டு பிள்ளைகளும் கூக்குரலிட்டுக் கொண்டு அவன் உடல்மேல் புரண்டு அழுதனர்.

பொலிஸ் அதிகாரியின் கண்களுக்குள் மரணத்தின் நிழல் தெரிந்தது. தன் முகம் எதிரே குனிந்து பார்க்கும் பூலானை, அந்தக் கடைசி நொடியிலும் அடையாளம் காண அவன் கண்கள் விரும்பின போன்று தெரிந்தது.

'அவனை அணு அணுவாகச் சித்திரவதை செய்து கொல்ல வேண்டும், நிர்வாணமாக்கி, கதறவைத்து ஓட, ஓட விரட்டிக்கொல்ல வேண்டும்'

என்றுதான் பூலான் நினைத்துக்கொண்டு வந்தாள்.

அதற்க சந்தர்ப்பம் கிட்டவில்லை.

எங்கே அவன் முந்திக் கொள்வானோ என நினைத்து, மான்சிங் சுட்டுவிட்டான்.

தன்னை யார், என்று தெரியாமல் அவன் செத்துப்போகக் கூடாது என்று பூலான் விரும்பினாள்.

"என்னைத் தெரிகிறதா? நான் தான்டா பூலான்தேவி. உன்னால் பொலிஸ் நிலையத்தில் நார்நாராகக் கிழிக்கப்பட்ட பூலான்டா! இப்போது புலியாக வந்திருக்கிறேன்...!"

அவன் கண்கள் அகலவிரிந்தன. அச்சமா, ஆச்சரியமா, அதிர்ச்சியா என்று தெரியவில்லை.

அவன் உதடுகள் ஏதோ சொல்லத் துடித்தன. மன்னிப்புக் கேட்டு மன்றாட நினைத்தானா? தன்னைக் காப் பாற்றுமாறு கடைசி நேர உயிர் ஆசை உந்தித்தள்ளியதா? என்று புரியவில்லை.

ஆனால், இனியும் அவன் உடலில் தாமதிக்க முடியாத நிலையில், காக்கி உடைக்குள் இருந்த அந்த மிருகத்தை விட்டு உயிர் வெளியேறியது.



அவன் மனைவியின் கதறல் அந்த வீட்டையே அதிர வைத்தது.

"ஏன் இந்தக் கொடுமையைச் செய்தீர்கள்?" என்று அவன் மனைவி பூலானைப் பார்த்துப் புலம்பினாள்.

பூலானுக்கு அவளைப் பார்த்த போது சிறிது இரக்கம் ஏற்பட்டது.

ஒன்றுமே புரியாமல் மலங்க மலங்க விழித்துக்கொண்டிருந்த இரண்டு பிள்ளைகளையும் பார்த்த போது இரக்கம் மேலும் அதிகமானது.

இரண்டு பேரில் ஒன்று பெண் பிள்ளை. அதன் அருகே சென்று, அதன் கையைப் பிடித்துக் கொண்டு பூலான் பேசினாள்:

"இது உன் பிள்ளைதானே? இவளை கொடுமைப்படுத்தினால், நாசப்படுத்தினால் என்னாகும்? என் ஆட்களிடம் சொல்லிவிடவா?"

"ஐ...ய்..யோ... வேண்டாம் அம்மா... என் பிள்ளையை ஒன்றும் பண்ணாதீங்கம்மா!" பொலிஸ் அதிகாரியின் மனைவி பூலானின் பாதங்களைக் கண்ணீரால் கழுவினாள்.

"உன்னை மாதிரித்தான் என் அம்மாவும், அப்பாவும் கத்தினார்கள், மன்றாடினார்கள். யார் கேட்டார்கள்? எந்த நாயின் காதிலும் கேட்கவில்லையே! உன் புருசன் மனுசனேயல்ல. சதை தின்னும் நாய். அவனை இந்தளவில் விட்டதே பெரிது. அங்கம் அங்கமாய் வெட்டிக் கொன்றிருக்க வேண்டும் தூ..."

உடல் மீது காறி உமிழ்ந்துவிட்டு பூலான் வெளியேறினாள்.

பொலிஸ் அதிகாரியின் மனைவி சட்டென்று அழுகையை நிறுத்தினாள்.

தன் பிள்ளைகளை அணைத்துக் கொண்டாள்.

அவளுக்கு இப்போது பூலானின் எவ்வித கோபமும் இல்லை. வாய் பிளந்தபடி செத்துக் கிடக்கும் புருசன்மேல்தான் கோபம் கோபமாக வந்தது.

"சிறை அதிகாரி படுகொலை! பொலிஸ் அதிகாரி கொலை!"

"கொள்ளை ராணி பூலான்தேவியின் இராஜாங்கம் விரிகிறது!"

"ஒரு பெண்ணைக் கண்டு பொலிசார் ஓடுகிறார்கள். ஒடி ஒழிகிறார்கள்!"

"பழிவாங்கும் புலியாக பூலான்தேவி பழி தீர்த்து வருகிறாள்!"

பத்திரிகைகள் எல்லாம் பூலான் புராணம் பாடின.

பொலிஸ்காரர்களுக்கு பெரும் அவமானமாகிவிட்டது.

பூலானைப் பிடித்தே தீருவது என்று சபதம் எடுத்தபோது, கொள்ளைக் கோஷ்டிகளுக்கு எதிரான தேடுதல் வேட்டைகளை முன்னெப்போதும் இல்லாதளவுக்கு முடுக்கிவிட்டனர்.

"ஒரு மாதத்திற்குள் பூலானை உயிருடனோ அல்லது பிணமாகவோ சம்பல் பள்ளத்தாக்கில் இருந்து வெளியே கொண்டு வருவோம்!" என்று பொலிஸ் அதிகரி ஒருவர் பேட்டி கொடுத்தார்.

உண்மையில் பொலிசார் தீவிரவேட்டைதான் நடத்தத் தொடங்கினர்.

பூலான் கோஷ்டியை தேடும் பொலிசாரின் வேட்டையில் ஏனைய கொள்ளைக் கோஷ்டிகளைச் சேர்ந்த பலர் சிக்கினார்கள்.

பூலானுக்கு விரித்த வலையில் சிறு கொள்ளைக் குழுத் தலைவர்கள் பலர் விழுந்தனர்.

அதனால் கொள்ளைக் கோஷ்டிகள் பலவற்றுக்குப் பூலான்தேவிமீதும், அவள் ஆட்கள் மீதும் கோபம் ஏற்பட்டது.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் நேரடிப் பணிப்பின் பிரகாரம் பல ஆயிரம் பொலிசார் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர்.

திருப்பங்கள் தொடரும்...

மருத்துவம்

# தினமும் உணவில் கீரையை எடுத்துக்கொள்ளுங்கள்!



கீரையில் இருக்கும் சத்துக்கள் அனைத்தும் வீணாகாமல் அப்படியே, முழுமையாக கிடைக்க, முதலில் கீரைகளை நீண்டநேரம் சமைப்பதை தவிர்க்கவேண்டும். அதிகநேரம் சமைப்பதினால் கீரையில் இருக்கும் முக்கிய சத்துபொருளான கரோட்டின் சிதைந்துவிடும். கரோட்டின் பார்வைத்திறனுக்கு உதவும் சத்துப்பொருள் என்பது குறிப்பிடத்தக்கது.

கீரைகளை சமைப்பதற்கு பயன்படுத்தும் தண்ணீரை வீணாக கீழே கொட்டிவிடக்கூடாது. மேலும் கீரைகளை சமைக்கும் பாத்திரங்களை சமைக்கும்போது திறந்து வைக்காமல் மூடி வைக்கவேண்டும். கீரைகளை வெயிலில் உலர்த்தக்கூடாது. அப்படி உலர்த்தினால் அவற்றில் இருக்கும் கரோட்டீன்கள் வீணாகிவிடும்.

சிறுகீரை: புரதம், கலோரி, பொஸ்பரஸ் குறைவான அளவில் உண்டு. ஓரளவுக்கு கல்சியமும் உண்டு. இரும்புச்சத்து அதிகளவில் இருக்கிறது. பீட்டா கரோட்டின், நார்ச்சத்துகளும் உண்டு. சிறு பருப்புடன் சிறு கீரை சேர்த்துச் செய்த சமையலை எல்லா வயதினரும் சாப்பிடலாம்.

பாலக்கீரை: கால்சியம், பொஸ்பரஸ் மற்றும் இரும்புச்சத்து குறைந்த அளவே இருந்தாலும் அல்லது போலிக் அசிட் மற்றும் விற்றமின் சி மிக அதிகம். மேலும் இதில் அக்ஸாலிக அசிட் மற்றும் யூரிக் அசிட் அதிகமாக இருப்பதால் சிறுநீரகத்தில் கல் இருப்பவர்கள் தவிர்க்கவேண்டும். தைமின், ரிபோ.ப்ளோமின் மற்றும் நார்ச்சத்து ஓரளவுக்கு இருக்கிறது. பீட்டா கரோட்டின் நிறைந்து இருக்கிறது.

முருங்கைக்கீரை: கல்சியம், நார்ச்சத்து, விற்றமின் சி, பீட்டா கரோட்டின் ஆகியவை அதிகமாக இருக்கின்றன. கண்களுக்கு மிகவும் நல்லது. மலச்சிக்கலைத் தீர்க்கும். தாது உப்புக்களான பொட்டாஷியம், தாமிரம், மெக்னீஷியம், குரோமியம், துத்தநாகம் மற்றும் குளோரைட் ஆகியவை ஓரளவு இருப்பதால், உடலுக்கு நல்ல நோய் எதிர்ப்பு சக்தியைத் தரும். எலும்புகள் உறுதிபெறும். கூட்டு செய்து சாப்பிட ஏற்றது.

# பருமனா? நீரிழிவு நிச்சயம்!



பிறந்த குழந்தை முதல் முதியோர் வரை வயது வித்தியாசமின்றி எல்லோரிடமும் பருமனைப் பார்க்க முடிகிறது. உயிரையே பறிக்கிற அளவுக்கு அது படுபயங்கர பிரச்சினை என்பது பலருக்கும் தெரிவதில்லை.

பருமனுக்கும் நீரிழிவுக்குமான நெருங்கிய தொடர்பையும் அதைக்கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

"பி.எம்.ஐ (பொடி மாஸ் இன்டக்ஸ்) என்று சொல்கிற கணக்கை ஒவ்வொருத்தரும் சுயமாக செய்து பார்க்கலாம். BMI = weight (kg) / [height (m)]2 இது 24க்குக் கீழ் இருந்தால் சாதாரணம். 24 - 28... அதிக எடை. 28 - 32 ஆரம்பக்கட்ட பருமன். 32 - 35 - நடுத்தர பருமன். 35 - 38... தீவிர பருமன். 38க்கும் மேல்... ஆபத்தான பருமன்.

24 வரை மட்டுமே இருக்க வேண்டிய பி.எம்.ஐ. அதிகமானால், உடலில் கொழுப்புச்சத்து கூடும். அதன்விளைவாக கணையத்தில் சுரக்கும் இன்சுலின் வேலை செய்கிற தன்மை பாதிக்கப்படும். மெல்ல மெல்ல நீரிழிவை நோக்கி நம்மை இட்டுச்செல்லும். குண்டாக இருக்கிற எல்லோருக்கும் நீரிழிவு இருக்கிறதா எனக் கேட்கலாம். ஆனால் காலப்போக்கில் அவர்களுக்கு கட்டாயம் நீரிழிவு தாக்கும்.

ஏற்கனவே நீரிழிவு பாதிக்கப்பட்டு, அதற்காக மருத்துவம் எடுத்துக் கொள்கிறவர்களுக்கும், சீனியின் அளவு மட்டும் கட்டுக்குள் வராமலே இருக்கும். காரணம், பருமன்தான். அதிகப்படி எடையை சில கிலோ குறைத்தாலே, சீனியின் அளவு தானாக கட்டுக்குள் வருவதை உணர்வார்கள்.


பருமனை அலட்சியம் செய்கிறவர்களுக்கு இன்சுலின் சுரப்புக்கு எதிரான சில சுரப்பிகள் வேலை செய்யத் தொடங்கும்.

இன்சுலின் என்பது சீனியின் அளவைக் கட்டுப்படுத்துகிறது என்பதை மீறி அது ஒரு பாதுகாப்புக் கவசம் போன்றது. பருமன் குறைக்கப்படாத பட்சத்தில் இன்சுலின் தன் வேலையை சரியாகச் செய்யாது. அதன்விளைவாக பரம்பரைத் தன்மை இல்லாதவர்களுக்கும் நீரிழிவுவரும். அடுத்தகட்டமாக இரத்தக்கொதிப்பும் கொழுப்பும் அதிகமாகும். மலட்டுத்தன்மை ஏற்படும். நீரிழிவுக்கான சோதனையை மேற்கொண்டு பாருங்கள். உணவுக்கு முன்பான சோதனையில் சீனியின் அளவு 100க்கும் கீழ் இருந்தால் மட்டுமே அது சாதாரணம். 101 முதல் 125 இருந்தால், அது நீரிழிவுக்கான முந்தைய கட்டம். 126 என்றால் நிச்சய நீரிழிவு. சாப்பாட்டுக்கு 2 மணி நேரத்துக்குப் பிறகான சோதனையில், 140க்கும் கீழ் என்றால் சாதாரணம் இருக்கிறது.

141 - 200 இருந்தால் நீரிழிவுக்கு முந்தைய கட்டம். 200க்கும் மேல் என்றால் நிச்சய நீரிழிவு. நீரிழிவிலிருந்து விலகி வாழவிரும்புவோர், முதற்கட்டமாக உடல்பருமனைக் கண்காணித்து, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவாருங்கள்.



கேடி பில்லா கில்லாடி ரங்கா



நேற்று இன்று

# கோழியை பிழத்தார் அமலாபால்

சில இலட்சங்கள் சம்பளத்தில் வீரசேகரன், 'சிந்து சமவெளி, மைனா படங்களில் நடித்த அமலாபால் தற்பாது ரூ.1 கோடி சம்பளம் கேட்கிறாராம். விக்ரம், ஆர்யா, சித்தார்த் போன்றோருடன் தமிழ் படங்களில் நடித்துள்ள அமலாபால், தற்போது தலைவா படத்தில் விஜய் ஜோடியாக நடிக்கும் அளவு உயர்ந்து விட்டார். தெலுங்கில் ராம் சரணுடன் 'நாயக்' படத்தில் நடித்த பிறகு அங்கும் பிரபலமானார். மேலும் படவாய்ப்புகள் குவிகின்றன. இதனால் சம்பளத்தை ரூ.1 கோடிக்கு உயர்த்தி உள்ளார்.



# நம்பிக்கையுடன் உழைக்கிறார் நமீதா

எங்கள் அண்ணா, ஏய் போன்ற படங்களில் நடித்த நமீதா, நீண்ட இடைவேளைக்கு பின்பு, நாயகியாக நடிக்க தனது எடையைக் குறைத்துவருகிறார்.

கடைசியாக தமிழில் இளைஞன் என்ற படத்தில் நமீதா நடித்தார். இப்படம் கடந்த 2011ம் ஆண்டில் வந்தது. எனினும் புது நடிகைகளின் வரவு அவரை ஓரம் கட்டிவிட்டது. தற்போது ஜவுளி கடைகள் திறப்பு போன்ற தனியார் நிகழ்ச்சிகளில் பங்கேற்றுவரும் நமீதா ரியல் எஸ்டேட் தொழிலிலும் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில் படங்களில் நடிக்க முடிவுசெய்து உடல் எடையை குறைக்க தீவிர உடற்பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். தினமும் பலமணி நேரம் ஜிம்மிலேயே இருக்கிறார். உணவு கட்டுப்பாட்டுடன் இருக்கிறார்.

இது குறித்து நமீதா கூறுகையில், எனக்கு திறமையும் வயதும் இருக்கிறது. எனவே கதாநாயகியாக மீண்டும் நடிப்பேன். உடற்பயிற்சி மூலம் உடல் எடையை குறைத்துவருகிறேன். கதாநாயகன் யாராக இருந்தாலும் பரவாயில்லை. புதுமுகம், வயதில் மூத்த நடிகர்கள் என்றெல்லாம் பார்க்காமல் ஜோடியாக நடிப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

# கருவை சுமக்கிறார் ஜெனிலியா

சச்சின், சந்தோஷ் சுப்ரமணியம், உத்தமபுத்திரன், வேலாயுதம் ஆகிய படங்களில் நடித்த ஜெனிலியா கர்ப்பமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜெனிலியாவுக்கும் இந்தி நடிகர் ரிதேஷ் தேஷ்முக்குக்கும் காதல் மலர்ந்தது. இருவருக்கும் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் திருமணம் நடந்தது. திருமணத்துக்கு பின்பு படங்களில் நடிப்பதை குறைத்துக் கொண்டார். இந்த நிலையில்தான் ஜெனிலியா கர்ப்பமாக இருப்பதாகவும் வீட்டில் தற்போது ஓய்வு எடுத்துவருவதாகவும் கூறப்படுகிறது.

ரிதேஷ் தேஷ்முக்கும் கணவர் குடும்பத்தினரும் ஜெனிலியாவை நன்றாக கவனித்துக் கொள்கின்றார்களாம். மேலும் அடிக்கடி மருத்துவமனைக்கு சென்று மருத்துவரிடம் ஆலோசனை பெறுவதாக இந்தி பட உலகினர் கிசுகிசுக்கின்றனர். ஆனால் ஜெனிலியா தரப்பில் இதை உறுதிபடுத்தவில்லை.

# காஜலைப் பார்த்து அசந்தார் ராஜேஷ்

'சிவா மனசுல சக்தி, "பாஸ் என்ற பாஸ்கரன்", "ஒரு கல் ஒரு கண்ணாடி" ஆகிய வெற்றிப் படங்களை இயக்கியவர் இயக்குனர் ராஜேஷ்.

தற்போது இவர் இயக்கி வரும் புதிய படம் 'ஆல் இன் ஆல் அழகு ராஜா' இப்படத்தில் கார்த்தி கதாநாயகனாகவும், காஜல் அகர்வால் கதாநாயகியாகவும் நடிக்கின்றனர். தன்னுடைய எல்லா படங்களிலும் கொமெடிக்கு துணையாக நிற்கும் சந்தானம் இப்படத்திலும் கொமெடியில் கலக்க இருக்கிறார். இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு பொள்ளாச்சி, கும்பகோணம் பகுதியில் நடந்து முடிந்துள்ளது.

இந்நிலையில் இப்படம் குறித்து ராஜேஷ் கூறுகையில், 'ஆல் இன் ஆல் அழகுராஜா' குடும்பம் சம்பந்தமான படம். கார்த்தி ஏற்கெனவே குடும்ப கதைகளில் நடித்துள்ளதால் இந்த படத்திலும் அவர் அற்புதமாக நடித்துவருகிறார். கார்த்தியுடன் பணியாற்றியது நல்ல அனுபவம். இப்படத்தின் நாயகி காஜல் அகர்வாலின் நடிப்பைப் பார்த்து நானே அசந்து போனேன். அவரிடம் ஒரு டயலாக் சொல்லிவிட்டால், அதை அப்படியே உள்வாங்கி அருமையாக நடித்து கொடுத்துவிடுவார் என்றும் நடிப்பில் அவர் காட்டும் அக்கறைதான் அவருக்கு பல வெற்றிகளை கொடுத்துள்ளன எனவும் கூறினார்.

# இசைக்கு வசமாகும் ஹன்சிகா

இயற்கையாகவே அதிக இசை ஆர்வம் கொண்ட நாயகி ஹன்சிகா, படிக்கும் காலத்தில் சினிமா பாடல் என்றால் மிகவும் பிடிக்குமாம். தனக்கு, விருப்பப்பட்ட பாடல்களை பள்ளி விழாக்களில் பாடி பரிசுகள் கூட வாங்கியுள்ளார். அதனால், தான் நடிக்கும் படங்களில் பாடல் காட்சிகளை படமாக்குகின்றனர் என்றால், அந்த பாடல்களை நிஜத்தில் மனப்பாடம் செய்து பாடி நடிக்கிறாராம் ஹன்சிகா.

கேடி பில்லா
படத்தில் நடித்த
தான் தனது ஆ
பெருமிதம் கொ
இரண்டு கதாநா
நடித்தாலே, பிர
கொண்டு படப்பி
பக்கமாக, முகத்
அமர்ந்திருப்பர்.
கில்லாடி ரங்கா
பிந்துமாதவி, ரெ
வித சர்ச்சையை
ரொம்ப சகஜமா
இவர்க
இருக்கிற இடம்

வரைய



எதிர்நீச்சல



சேட்டை



படம் பேசும்



## நட்புக்கு இலக்கணம்

. கில்லாடி ரங்கா போன்ற
ரெஜினா, பிந்து மாதவி
ருயிர் தோழி என்று
ள்கிறார். பொதுவாக
பகிகள், ஒரே படத்தில்
சினைகளை உருவாக்கிக்
டிப்பில் ஆளுக்கொரு
தை திருப்பிக் கொண்டு
ஆனால், கேடி பில்லா
படத்தில் நடித்த
ஜினா இருவரும் எந்த
யும் உருவாக்காமல்
க பழகினார்களாம்.
ள் இருவரும் படப்பிடிப்பில்
அப்படியொரு

கலகலப்பாக காட்சியளித்ததாம். இதுகுறித்து ரெஜினா கூறுகையில், பிந்து மாதவி என்னைவிட பெரிய நடிகை. தெலுங்கில் அதிக படங்களில் நடித்தவர்.

இப்போது தமிழிலும், பரபரப்பாக நடித்து வருகிறார் என்றபோதும், யாருடைய வாய்ப்பையும் தட்டிப் பறிக்க வேண்டும் என்றோ, சக நடிகைகளை போட்டியாகவோ நினைக்காதவர். என்னிடம் மிகவும் அன்பாகப் பழகினார். அதனால் நல்ல தோழிகளாகிவிட்டோம். அடிக்கடி போனில் பேசிக் கொள்வதோடு, நேரம் கிடைக்கும்போதும் நேரில் சந்தித்து கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## தலைவா உருவான கதை

விஜய், இயக்குனர் ஏ.எல்.விஜய் முதன் முறையாக இணைந்திருக்கும் திரைப்படம் படம் 'தலைவா'. விஜய்க்கு ஜோடியாக அமலாபால் நடிக்கும் இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார். தற்போது இந்தப் படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு அவுஸ்திரேலியாவில் நடந்து வருகிறது.

இந்நிலையில் 'தலைவா' கூட்டணி உருவான விதம் குறித்து இயக்குனர் ஏ.எல். விஜய் கூறுகையில், மதராசப்பட்டினம் படத்தைப் பார்த்த விஜய் என்னை அழைத்து நாம இருவரும் இணைந்து ஒரு படம் பண்ணுவோம் என்று தெரிவித்தார். ஆனால் இத்திட்டம் திட்டமாகவே இருந்தது. அப்போதுதான் விஜய்யின் திகதி வைத்திருந்த தயாரிப்பாளர் சந்திரபிரகாஷ் ஜெயினை சந்தித்தேன்.

அதன்பின்னரே இத்திட்டம் செயல்வடிவம் பெற்று 'தலைவா'வாக உருவெடுத்தது. நான் கதை முழுவதையும் விஜய்யிடம் கூறியபோது, அதை அமைதியாக அமர்ந்துகேட்ட அவர் ஒரு 15 நிமிட நேரம் கழித்து சின்ன சிரிப்பு சிரித்து கையைக் குலுக்கினார். இதனையடுத்து படவேலைகளை துவக்கிவிட்டேன். 'தலைவா' படத்தில் ஸ்டைல், அக்ஷன், மாஸ், செண்டிமெண்ட் என அனைத்து அம்சங்களும் இருக்கும். ஒவ்வொரு காட்சியும் ஆர்.டி.எக்ஸ். போல கண்டிப்பாக அதிரும் என்று நம்பிக்கையுடன் கூறியுள்ளார் இயக்குனர் ஏ.எல். விஜய்.

## விருதைப் புறக்கணித்தார் ஜானகி

பல்வேறுதுறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கான பத்ம விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. அவற்றை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வழங்கினார். அதேவேளை திட்டமிட்டபடி விழாவைப் புறக்கணித்தார் பாடகி ஜானகி.

2013ஆம் ஆண்டுக்கான விருது பெறுவோர் பட்டியலை மத்திய அரசு கடந்த ஜனவரி மாதம் வெளியிட்டது. இதன்படி நடிகை ஸ்ரீதேவிக்கு பத்மஸ்ரீ விருதும், நடிகை சர்மிளா தாகூருக்கு பத்மபூஷன் விருதும் வழங்கப்பட்டது. பத்ம விருதுகள் வழங்கப்படுவதில் தென் இந்தியர்கள் புறக்கணிக்கப்படுவதாகக் கூறி, தனக்கு வழங்கப்பட்ட பத்மபூஷன் விருதை பிரபல பின்னணி பாடகி எஸ். ஜானகி புறக்கணித்துள்ளார்.

## ...றையை உடைக்கிறார் இனியா

தமிழ் சினிமா கதாநாயகிகளை பொறுத்தவரை, கதாநாயகி கதாபாத்திரம் தவிர, வேறு எந்த கதாபாத்திரத்திலும் நடிக்க மாட்டார்கள். அதையும் மீறி, யாராவது ஏதாவது சிறிய கதாபாத்திரங்களில் நடித்தால், அதன் பின்பு அந்த மாதிரி கதாபாத்திரங்களிலேயே நடிக்க அழைப்பர் என்ற அச்சம் தான் இதற்குக் காரணம்.

ஆனால், வாகை சூடவா நாயகி இனியாவுக்கு இதில நம்பிக்கை இல்லையாம். சில படங்களில், நாயகியாக நடிக்கும் அவர், நினைத்தது யாரோ, ரெண்டாவது படம் போன்ற படங்களில் சிறிய கதாபாத்திரங்களில் நடித்துவருகிறார். சிறிய வேடங்களில் நடித்தால், கதாநாயகி அந்தஸ்து போய்விடுமே என்று இனியாவிடம் கேட்டால், என்னை, கதாநாயகி என்று ஒருபோதும் நான் நினைத்துக் கொள்வதில்லை. கதையில், நானும் ஒரு கதாபாத்திரத்தில் நடிக்கிறேன். அவ்வளவுதான். மலையாளத்தில் எல்லாவிதமான கதாபாத்திரத்திலும் நடிகைகள் நடிப்பது வழக்கம். அந்த பாணியில் தான் தமிழில் நடித்துவருகிறேன் என்கிறார்.



## மீண்டும் வருகிறது காசேதான் கடவுளடா

தமிழில் 1972ம் ஆண்டில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிய 'காசேதான் கடவுளடா', கொமடி படம் தற்போது மீண்டும் ரீமேக் ஆகிறது. முத்துராமன், ஸ்ரீகாந்த், தேங்காய் சீனிவாசன், வெண்ணிற ஆடை மூர்த்தி, லட்சுமி, மனோரமா போன்றோர் நடித்து இருந்தனர். காசேதான் கடவுளப்பா அந்த கடவுளுக்கும் இது தெரியுமப்பா என்ற பாடலும் பிரபலம்.

எம்.ஜி.ஆர்., சிவாஜி கால கட்டத்தில் சிறிய நடிகர்கள் மற்றும் கொமடியர்களை வைத்து எடுக்கப்பட்ட இப்படம் வசூலில் பெரிய சாதனை படைத்தது. ஏவி.எம். நிறுவனம் தயாரித்தது. இந்த படம் மீண்டும் ரீமேக் ஆகிறது. இதற்கான உரிமையை விஸ்வாஸ் சுந்தர் வாங்கியுள்ளார். மேலும் தற்போது வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் ஒன்பதுல குரு படத்தை இயக்கிய பி.டி. செல்வகுமாரே இப்படத்தையும் இயக்குகிறார். நடிகர், நடிகைகள் தெரிவு நடக்கிறது. தேங்காய் சீனிவாசன் வேடத்தில் வடிவேலு அல்லது சந்தானத்தை நடிக்க வைக்க முயற்சி நடக்கிறது. வசனத்தை கிரேஸி மோகன் எழுதுகிறார்.



# தேன் கிண்ணம்

## சித்திரைப் புத்தாண்டே வருக!

வருக .... வருக...
சித்திரைத் தாயே வருக!
சிரித்த முகத்துடன்,
வண்ண வண்ண கோலங்கள்
வகை வகையாய்
வாசலிலே போட்டு,
மங்கள வாத்தியம்
வான் நோக்கி முழங்க...
வாழ்த்துக்கள் கூறியே
வாயெல்லாம் களைத்திட,
வரவேற்றுமே நிற்கின்றோம்....
வந்து விடு சித்திரைத் தாயே
எங்கள்
எல்லோர் வாழ்விலும்
வல்லமை தந்துவிட...
இனிய
சித்திரைப் புத்தாண்டே
நீ வருக....!!

து.திலக், யாழ்.உரும்பையூர்.



## புத்தாண்டுச் சித்திரைக்கு...

பாண்டியூர் பொன்.நவநீதன்.

எங்கள் சிற்றிடையாள்
இல்லமதில் நிதம் நிதங்
கவலையுற்று நித்திரையில்
கிடக்கின்றாள் புத்தாண்டுச்
சித்திரையாள் அவளைப்
புரிந்து வந்து பிறப்பதாக.

அந்த அன்பு
மனக் கிளியை
மணம் முடிக்க
பணக் கிளியைக்
கேட்டு நிற்கும்
ஆடவன் மனம் மாறி
வலிய - அவள்
வீடு வந்து நேயமுறப்
பேசி நெஞ்சாரத்
தழுவி காசுக்
கலியின்றிக் கல்யாணஞ்
சம்மதிக்க புத்தாண்டுச்
சித்திரையாள் இத்தரையில்
பிறப்பதாக...



## எல்லோர்க்கும் எல்லாமும்..!

சூரியனை அணைக்கத்தான் முடியுமா?
நிலவினை மறைக்கத்தான் முடியுமா?
நட்சத்திரங்களை ஒழிக்கத்தான் முடியுமா?
அதுபோல் தான் தமிழ்ப்பெண்ணே
உன் பிறப்பை மாற்றத்தான் முடியுமா?
சித்திரை மாதத்தில் பிறக்கும் என்
பத்தரை மாற்றுத் தமிழ் தங்கமே...
உன் வரவை யார் தடுப்பார்..?
உலகத்து தமிழர்க்கெல்லாம்
திருநாளது... பெருநாளது... புதுநாளது...
எதுவெனில் எம்தமிழே
நீ பிறக்கும் தமிழ்ப்புத்தாண்டு நாளதுதான்..!
எல்லோர்க்கும் எல்லாமும் அருள்வாய் தாயே..!
எளியோர்க்கு வலிமைதனை வழங்குவாய் நீயே..!
தரணியிலே தமிழர்களை தழைக்கச் செய்தாயே..!
வறுமைதனை அடியோடு அகற்றிடுவாய் நீயே..!
உன்மடியில் எப்போதும் நான் பிறக்க வரமருள்வாயே..!



## தமிழ் (சித்திரை ) புத்தாண்டு வாழ்த்து !!!

*சித்திரை திருமகளே வருக வருக ! - நம்*
*நித்திரை கலைந்து புதுசக்தியை தருக !*
*பத்தரை மாற்று தங்கம் போல் - இன்று தமிழ்*
*பற்றுதல் தரும் புத்தாண்டாய் வருக! வருக !*
*கொன்றை மலரால் அழகு செய்து*
*குதூகலித்து துள்ளி துள்ளி*
*விளையாடி முக்கனி உண்ண வருவாயோ*
*நற்குணம் கொண்ட விஜய புத்தாண்டே...*

## பொற்காலம் புலர்ந்திட வேண்டும்

பொற்காலம் வந்திங்கே
புலர்ந்திட வேண்டும்
பொலிவுடன் புத்தாண்டு
பிறந்திட வேண்டும்
பொல்லாத துயரங்கள்
நீங்கிட வேண்டும்
போரில்லா சமாதானம்
மலர்ந்திட வேண்டும்
இல்லாமை நீங்கிட
நல்லாக்கம் வேண்டும்
இல்லங்கள் இனித்திட
லௌகீகம் வேண்டும்
ஊரும் உறவும்
ஒன்றிணைந்திட வேண்டும்
உலகினிலே அமைதி
நிலவிட வேண்டும்.

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.



## புதிய சபதம்!

வருடம் ஒன்று கழிகிறது,
வயது ஒன்று கூடுகிறது,
மரணம் ஒருவாறு நம்மை
நெருங்குகின்றது,
புது வருடம் ஒவ்வொன்றிலும்
சபதங்கள் பல
எடுத்த ஞாபகம் ..!
சபதம் எல்லாம் நிழலாய்,
ஞாபகம் மட்டுமே தடமாய்,
ஓடி முடிந்த
வருடங்கள் பல...!!!

நான் என்று கூறாமல்
நாம் என்று கூவுரைப்போம்..!!
எனது என்று பாராமல்
நமது என்று பார்த்திடுவோம்..!!
எனக்கு என்று கேக்காமல்
நமக்கு என்று கேட்டிடுவோம்..!!
நாட்டின் எல்லைகளை அழித்து
ஓர் உலகம், ஓர் நாடு
நம் மக்கள் என்று ஆக்கிடுவோம்..!!
மொழியால் தனித்தாலும்
மனதால் இணைந்திடுவோம்..!!
காற்றுக்கும் தண்ணீருக்கும் கூட
இட்டப்பட்ட வேலிகளை
அகற்றிடுவோம்..!!
மனிதனை மதித்திடுவோம்
அவன் மனதை போற்றிடுவோம்..!!
வஞ்சனை செய்பவனையும்
பிறரை தூற்றி ஏசுபவனையும்
வாழ்த்திடுவோம்..!!
மரணமில்லா சட்டம்செய்து
மன்னிப்பை மட்டும் தண்டனையாய்
வழங்கிடுவோம்..!!
இத்தனை கனவுகளையும்
இந்த புத்தாண்டில்
நம்முள் விதைத்திடுவோம் ..!!
இது வேரூன்றி
செழித்து எழ
அன்பு என்ற நீரூற்றி
வளர்த்திடுவோம்..!!

## ஈழத்து கவிஞர்கள்

### திமிலைத்துமிலன்



திமிலைத்துமிலன் (சின்னயா கிருஷ்ணபிள்ளை) ஈழத்துத் தமிழ் எழுத்தாளர். மூத்த கவிஞர். சிறந்த சிறுகதை. புதின எழுத்தாளர். ஓவியர். ஆய்வாளர். நாடகாசிரியர். இவர் மட்டக்களப்பு ஆசிரிய கலா சாலையில் பயிற்சி பெற்றுப் பட்டம் பெற்று அங்கேயே நீண்ட காலம் விரிவுரையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். இதுவரை 15 நூல்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் மட்டக்களப்பில் திமிலைத்தீவில் பிறந்தவர். இவர் காலஞ்சென்ற கவிஞர்களான திமிலை மகாலிங்கம். திமிலைக் கண்ணன் ஆகியோரின் சகோதரர். இவரும் இவரது சகோதரர்களும் 1960 களில் இலக்கிய உலகில் கொடிகட்டிப் பறந்தவர்கள்.

இவரது கவித்திறனுக்காக இவர் பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார். கவிமணி. கவியரசு. தமிழ் ஒளி. கவிதல பாஸ்கரன். கலாபூஷணம் ஆளுநர் விருது. கலைக்கழக விருது என்பன அவற்றுட் சிலவாகும். இவரது கவித்துறை ஆற்றலுக்காக 2009 மார்ச் 30ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. கனடியத் தமிழ் எழுத்தாளர ஒன்றியம் 2009 நவம்பர 9 ஆம் திகதி நிகழ்த்திய இவரது பவள விழாவிலே இவருக்கு செந்தமிழ்க் கவிமாமணி பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. இவர் சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றுள்ளார்.

ஆனந்த விகடன் நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றுள்ளார். இலங்கையில் நடை பெற்ற பல கவிதைப் போட்டிகளில் பல பரிசுகளைப் பெற்றுள்ளார்.

#### வெளிவந்த நூல்கள்

நீரர மகளிர். கொய்யாக்கனிகள். நெஞ்சம் மலராதோ?. அழகு முல்லை. மஞ்சுநீ மழைமுகில் அல்ல. எல்லம் எங்கள் தாயகம். முத்தொள்ளாயிரம். அணில் வால். யாப்பும் அணியும். தமிழ் இலக்கியம் கற்பித்தல். திமிலைத்து மிலன் கவிதைகள் - காதல். திமிலைத்துமிலன் கவிதைகள் - சமூகம். பாவலர் ஆகலாம். கருமணியிற் பாவாய். ஈழத்துக் கல்விமரபில் எண்ணெய்ச் சிந்து.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 15

33

# சிங்கை மைந்தன்

## அமரசிம்மன்



**கடல்** அன்னையின் மடியில் தவழ்ந்து கொண்டிருந்தன. கலங்கள் கலங்களிலிருந்தவர்கள் பெரும்பாலும் கடலின் தன்மையை நன்கு அறிந்தவர்களாதலால் மாலுமிகளை தவிர ஏனையோர் ஓய்வாகப் படுத்துக்கொண்டனர். அமரசிம்மன்கூட வீரர்களோடு ஒருவனாய் ஓர் திண்டில் சாய்ந்து விழிகளை மூடிக்கொண்டு மௌனமாயிருந்தான். கடல் காற்றின் குளிர்மையில் பழக்கப்பட்டவர்களாதலால் அது பற்றி எவரும் அலட்டிக்கொள்ளவில்லை. இடையில் விழிகளைத் திறந்து வானத்தைப் பார்த்தான் அமரசிம்மன். நீலவானில் மத்தாப்பு வெடித்து சிதறியது போன்று மினுங்கிக் கொண்டிருந்தன நட்சத்திரங்கள். இடைக்கிடையே வெண்பஞ்சுப் பொதிகள்போல வெண் முகிற்கூட்டம் நகர்ந்து கொண்டிருந்தன. இந்த இனிய சூழலில் மதுரவல்லியும் உடனிருந்தால்...? வேண்டாம் என்று அந்த நினைவை மனதிலிருந்து ஒதுக்கிவிட்டான். கலங்கள் புறப்பட்ட வேளையில் ஓடிவந்த ஒற்றனின் நினைவுடன் ஒன்றிவிட்டான்.

கலங்கள் புறப்படும் வேளையில் துறைமுக வாயிலில் நுழைந்த ஒற்றனைக் கண்டதும் அவனை கலத்துக்கு வருமாறு சைகை காட்டி அழைத்தான். அவன் கலத்துக்கு சமீபமாக வந்ததும் நுவேனி மூலம் தளத்துக்கு வந்து சேர்ந்தான். அமரசிம்மன் முன் அவனை அழைத்து வந்து நிறுத்தினான். தளபதிக்கு வணக்கம் செலுத்திவிட்டு இடுப்பில் மறைத்து செருகி வைத்திருந்த செய்திச் சுருளை அவனிடம் நீட்டினான். அதனை பெற்று மௌனமாகப் படித்தவன் "மாடா" என்றான்.

"பிரபு"

"ஒற்றனை அனுப்பிவை. நல்ல செய்தியே கொண்டு வந்துள்ளான்" என்று கூறியவன் "ஒற்றனே. நீ சென்று கலங்கள் புறப்பட்ட செய்தியை உபதளபதியிடம் தெரிவித்துவிடு" என்றான்.

அவன் சென்ற பின்பு வீரர்களின் தலைவர்களை அழைத்து அவர்களிடம் கூறினான்.

"ஒற்றன் கொண்டு வந்த செய்தியின்படி நீர்கொழும்பில் தான் எமது முதற்கட்ட போர் தொடங்கவேண்டியிருக்கும். அங்கேதான் அளகக்கோனார் ஒரு படைப்பிரிவை நிறுத்தி இருக்கின்றானாம். எமது கலங்களில் கரையோரமாகச் செல்லும் கலங்கள் நீர்கொழும்புத் துறைக்குச் செல்லும் பொழுது ஓரிரு கலங்களே முன்னுக்குச் செல்லட்டும்; அதி-கமானோர்; பின்நின்று அவர்கள் தாக்குதல் தொடங்கி ஓயும்வேளை ஒருமித்துச் சென்று தாக்குதல் நடத்தலாம். நான் கூறுவதன் அர்த்தம் புரிகின்றதா?"

"புரிகின்றது பிரபு. எம்மை தாக்கிய வெற்றிக்களிப்பில் அவர்கள் இறுமாந்திருக்கும் முன்பே எமது அடுத்தகட்டத் தாக்குதலை நடாத்தி அவர்களை திக்குமுக்காடி ஓடச் செய்ய வேண்டும்" என்றான் மாடன்.

"நாம் அதிரடியாக ஒரே முறையில் தூக்கமுடியுமானாலும் எதிரியின் பலம், யுக்தி, சூழ்ச்சி திறன் எதையும் குறைத்து மதிப்பிடக் கூடாது. இல்லையா?"

"உண்மைதான் பிரபு. அத்துடன் நமது படையணிக்கு சேதம் எதுவுமின்றி காப்பாற்றவும் இதுதான் சிறந்த வழி"

"நல்லது நங்கூரங்களை எடுக்க உத்தரவிடு. கலங்கள் புறப்படட்டும்" என்று கூறிவிட்டு எழுந்துநின்று கடல் அன்னையை வழிபட்டான்.

அதன் பின்பு வந்து திண்டில் சாய்ந்தவன்தான்.... மறுநாள் நடக்கப்போகும் போர் அதன் முடிவுகள், படைநகர்வுகள் பற்றி மனதில் ஓர் கற்பனைக் காட்சியைச் சிருஷ்டித்துக் கொண்டிருந்தான். எந்த நினைவுகள், செயற்பாடுகள் நிறைவுறும்வேளையில் மதுரவல்லியின் நினைவுவந்து புகுந்து கொள்வது வழக்கமாகிவிட்டது. அதை நினைத்து தனக்குள்தானே சிரித்துக்கொண்டான்.

வாழ்க்கை ஒரு விசித்திரமான வலைப்பின்னலாக இருப்பதை உணர்ந்தான். தனித்திருந்த வேளைகளில் எல்லாம் அரசியல் விடயங்களிலேயே அவனது நினைவுகள் சிலந்தி வலை பின்னுவதுபோல அலைந்து கொண்டிருந்தது என்று மதுரவல்லியுடன் இணைந்தானோ அன்று முதல் கடமையுணர்வுகளின் நிறைவில் அவளுடைய நினைவும் வந்து புகுந்துகொள்வதை நினைத்தால் ஓர் பெண் அவனுடைய வாழ்க்கையில் பின் நின்று இயங்கும் உந்துசக்தியாக விளங்குவதை உணர்ந்தான். அதுவரை உறங்கிப் போயிருந்த அவன் உணர்வுகளின் ஓர் புத்துணர்ச்சி பரந்து செறிந்தது. இருந்த இடத்தைவிட்டு எழுந்து கலத்தினுள் ஒவ்வோர் இடமாக சுற்றிவந்தான். அவன் நினைவுகளில் கேரளத்துப் பைங்கிளியும் ஓர் இனிய சுமையாக இணைந்து வந்தாள்.

அவனுடைய வருகை ஒவ்வோர் மாலுமியையும் சுறுசுறுப்படைய வைத்தது. அவனுக்குப் பின்னே காராளன் வந்து கொண்டிருந்தான். அவனை திரும்பிப் பாராமல் 'காராளா' என்றான்.

'பிரபு' என்று அவனுக்கு சமீபமாக வந்துநின்றான்.

"இரண்டாம் சாமம் முடியப் போகின்றது. இல்லையா?"

"ஆமாம்"

"பொழுது புலரும்வேளையில் நாம் துறைமுக வாயிலுக்குச் சென்றுவிடுவோமா?"

"காற்றின் வேகம் இருந்தால் போய்விடலாம். ஆனால் இன்று காற்றும் உறங்கிவிட்டதோ என்னவோ இந்த வேகம் போதாது பிரபு. துடுப்புப் போடுபவர்களை வேகமாகப் போடச் சொல்லலாமா?"

"வேண்டாம் ஆறுதலாகப் போவதும் நல்லதுதான்.எதிரி எதை எதிர்பார்க்கிறானோ நாம் அதை அவனுக்கு வாய்ப்பாக விடக்கூடாது. அவன் எம்மை எதிர்பார்த்து சலித்துப்போகும் வேளையில் எமது பிரசன்னம் அவனைத் திக்குமுக்காட வைத்துவிடும்."

"உண்மைதான் பிரபு"

"எமக்கு ஒற்றன் கொண்டு வந்த தகவலின்படி நீர்கொழும்புத்துறைக்கு எமது கலங்கள் நுழைந்தவுடன் எல்லோர் கவனமும் அங்கேதான் இருக்கும். அந்த வேளையில் சிரமமின்றி நாம் தரையிறங்கிவிடலாம்"

"மாடன் தலைமையில் சென்றவீர்கள் சிறந்த போர் வீரர்கள் யுத்தியாக எதையும் சாதிக்கக் கூடியவர்கள். நிச்சயம் எமக்கு முதல் வெற்றிச் செய்தியாக இப்போர் அமையும் பிரபு."

"நல்லது. சிறிதுநேரம் ஓய்வு எடுத்தால் காலையில் சுறுசுறுப்பாக செயற்படலாம்." என்று கூறிவிட்டு மீண்டும் அந்த திண்டில் சாய்ந்து கொண்டான் அமரசிம்மன்.

(தொடரும்...)


3 ஆவது ஆண்டில்...

தினமுரசு

நாளிதழ்

தினம்தோறும்
கல்விமுரசு
இணைப்பு

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

ரூ.10/=
மட்டுமே

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - 'பாமர் சங்கமம்", "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப்பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப்
பரிசில் மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள் - விடைகளுடன்
தினமும்
சனி, ஞாயிற்றுக்கிழமைகள்
க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான
அலகு ரீதியான குறிப்புகள்,
மாதிரி வினாக்களும்
விடைகளும் வெளியாகின்றன!

## லேடிஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.



# கருச்சிதைவு அறிகுறிகள்



**பெண்கள்** தன் வாழ்வின் பெரும் பாக்கியமாக நினைப்பது கர்ப்பமாகி குழந்தையை நல்லபடியாக பெற்றெடுப்பது தான். ஆனால் அத்தகைய பாக்கியம் சிலருக்குக் கிடைக்க நிறைய நாட்கள் ஆகின் றன. அதிலும் சிலர் என்னதான் கர்ப்பமாக இருந்தாலும், அவர்க ளுக்கு தெரியாமலேயே கருச்சிதைவு ஏற்பட்டுவிடும்.

இத்தகைய கருச்சிதைவு 20 வாரங்களில் நடைபெறும். ஆனால் ஒரு சிலருக்கு தொடர்ச்சியாக கருச்சிதைவு ஏற்படும். அதற்குக் காரணம், அவர்கள் பலவீனமாக இருப்பது, கவனக்குறைவுடன் நடந்துகொள்வது, கருமுட்டை சரியாக வளர்ச்சியடையாமல் இருப்பது போன்றவைகளே. இவை அனைத்தும் தேவையில்லாமல் நடப்பது அல்ல.

அனைத்தும் கருவுறும் பெண்கள் நடந்துகொள்வதிலேயே இருக்கின்றன. அதிலும் சில பெண்கள் ஒரு சிலவற்றை சாதாரணமாக விடுகின்றனர். ஆகவே அவ்வாறு கருச்சிதைவு ஏற்பட்டால் என்னென்ன அறிகுறிகள் ஏற்படும் என்பதை மருத்துவர்கள் கூறுகின்றனர்.

கர்ப்பமாக இருக்கும்போது அடிவயிற்றில் கடுமையான வலி ஏற்படும். அதிலும் ஒரு பக்கம் மட்டும் அதிகமான வலி ஏற்பட்டால், உடனே மருத்துவரை அணுகவேண்டும். அதுமட்டுமல்லாமல், சில நாட்கள் முதுகுவலியும் ஏற்படும். அதிலும் அந்த நேரத்தில் வரும் வயிற்று வலி, மாதந்தோறும் ஏற்படும் மாதவிடாயின்போது ஏற்படும் வயிற்றுவலி போல் இருக்கும். இந்த நேரத்தில் உடனே மருத்துவரை அணுகிவிட வேண்டும்.

இரத்தப்போக்கு அதிகமாகவோ, குறைவாகவோ, விட்டுவிட்டோ, முதல் மூன்று மாதங்களில் ஏற்படுமாயின், அதுவும் கர்ப்பம்கலைந்து விட்டது என்பதற்கான அறிகுறிகளே. இவ்வாறு அதிகளவு இரத்தப்போக்கு ஏற்படும்போது, உடனே மருத்துவரை அணுகி, கருப்பையை சுத்தம் செய்துவிடவேண்டும்.

இல்லையென்றால், கருப்பையில் இருந்து கருப்போல் உருவாகும் இரத்தக் கட்டிகள் முழுவதும் வெளியேறாமல், கருப்பையில் நோயை ஏற்படுத்தி பாதிப்பை ஏற்படுத்தும். பின் அது தாயின் உடலுக்கே ஆபத்தை ஏற்படுத்தும், மேலும் மற்றொரு முறை கர்ப்பமாகும் வாய்ப்பும் இல்லாமல்போகும்.

கர்ப்பத்தின்போது பெண்கள் தங்கள் வயிற்றில் குழந்தை இருப்பதை ஓரளவு உணரமுடியும். ஆனால் கர்ப்பம் கலைந்துவிட்டது என்றால், அந்த உணர்வு போய்விடுவதோடு, மார்பில் வலி மற்றும் அதிகப்படியான பசி போன்றவை ஏற்படும். அவை அனைத்து ஒவ்வொருவரின் உடல்நிலையைப் பொறுத்தது. ஆனால் இந்த மாதிரியான உணர்வு ஏற்பட்டாலும், உடனே மருத்துவரை அணுக வேண்டும். ஆகவே கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கு ஏதேனும் இதுபோன்ற எண்ணங்களோ அல்லது அறிகுறிகளோ ஏற்பட்டால், உடனே மருத்துவரை அணுகிவிட வேண்டும்.

## பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-363

**கேள்வி: கருச்சிதைவு ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-23.04.2013

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 363
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 361 இற்கான விடை :- மிரான்டா கிப்சன்

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- பு.வைஷ்ணவி, நெல்லியோடை, அல்வாய் வடக்கு, அல்வாய்

363

பெயர் :

முகவரி :

தே.அ. அட்டை இல :

விடை :

கையொப்பம் :

# பொது இடங்களில் பெண்கள் தவிர்க்க வேண்டியவை



**பெண்கள்** என்னதான் சுத்தமாக இருந்தாலும், அவர்களிடம் ஒருசில கெட்ட விஷயங்கள் உள்ளன. அத்தகைய நடத்தைகள் வீட்டிற்குள்ளேயே இருந்தால் பரவாயில்லை. ஆனால் பொது இடங்களில் செய்யக்கூடாத செயல்களையெல்லாம் செய்கின்றனர்.

உதாரணமாக, பொது இடங்களில் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பது. இது குழந்தையின் பசியைப் போக்கச் செய்யும் ஒரு நல்ல விஷயம்தான். இருப்பினும் இதனை பொது இடங்களில் முடிந்த அளவில் செய்யாமல் இருப்பது சற்று நன்றாக இருக்கும்.

இதுபோன்ற நிறைய செயல்களை பெண்கள் பொது இடங்களில் சிறிதும் நினைக்காமல் செய்வதால், அவை பொதுமக்களின் மனதில் பதிந்துவிடுவதோடு, பெண்களைப் பற்றிய கற்பனையான எண்ணமும் மனதில் ஏற்படுகிறது. எனவே அத்தகைய செயல்களை பெண்கள் தவிர்ப்பது நல்லது.

பொதுவாக பெண்கள் அழகிற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்று அனைவருக்குமே தெரியும். அதற்காக அவர்கள் எங்கு கண்ணாடியைப் பார்த்தாலும், உடனே தங்கள் அழகை பார்த்து ரசிப்பது, சரிசெய்வது என்று செய்வார்கள். இத்தகைய செயலை மற்றவர்கள் பார்க்கும்போது, அது சரியான நகைச்சுவையாகத்தான் இருக்கும்.

சில பெண்கள் உடுத்தும் உடைகளை வீட்டிலேயே சரியாக அணிந்துகொண்டு வராமல் இருப்பார்கள். இதனால் உள்ளாடையானது வெளியே அடிக்கடி தெரியும். அவ்வாறு தெரியுமாறு உடை உடுத்தியிருப்பதோடு, அதனை அடிக்கடி சரிசெய்வதால், அத்தகைய செயல் நிச்சயம் ஆண்களின் பார்வையை தூண்டி விளையாடும்.

மேலும் அவ்வாறு சரிசெய்யும் போது ஆண்கள் பார்த்துவிட்டால், உடனே கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்வார்கள். இதில் தவறு நிச்சயம் பெண்கள் மீதுதான். பெண்கள் ஒழுங்காக இருந்தால், நிச்சயம் ஆண்களும் ஒழுங்காக இருப்பார்கள்.

சில பெண்கள் சரும பராமரிப்பு என்று அடிக்கடி மேக்-கப் செய்வார்கள். அதற்காக ஒரு சிறிய மேக்-கப் ரூமையே கைகளில், ஹேண்ட் பேக் என்ற பெயரில் வைத்து சுற்றுவார்கள்.

மேலும் கொஞ்சம் வியர்த்துவிட்டாலும், பொது இடம் என்றும் பார்க்காமல், பொது இடத்திலேயே சிலர் மேக்-கப் செய்வார்கள். இதை மற்றவர்கள் பார்த்தால் எப்படியிருக்கும் என்று சற்று எண்ணிப் பாருங்கள்.

சில பெண்கள் சிறிய ஆடைகளை அணிவார்கள். அவ்வாறு உடுத்தியிருக்கும் ஆடை சிறியதாக, குட்டையாக இருக்கிறது என்று தெரிந்தும், சிலர் பொது இடங்களில் கால் மேல் கால்போட்டு உட்கார்ந்து கொள்கின்றனர்.

பொது இடங்களில் அளவுக்கு அதிகமான சத்தத்துடன் பேசுவது. பெண்கள் அமைதி, பொறுமை என்றுதான் தோன்றும். ஆனால், சில பெண்கள் வீதிகளில், பேருந்துகளில் சற்று உணர்ச்சவசப்பட்டால், யார் இருக்கிறார்கள் என்று சிறிதும்பராமல், பேசுகின்றனர்.

இத்தகைய செய்கையால் எல்லா பெண்களின் மீதும் தவறான எண்ணம் ஏற்படுகிறது. எனவே பெண்கள் இத்தகைய செய்கைகளை தவிர்ப்பது மிகவும் நல்லது. இதுவே பெண்களுக்கு பாதுகாப்பானதும்கூட.

# சிக்கன் டிக்கா

கோழி இறைச்சி – முக்கால் கிலோ
தயிர் – கால் கப், இஞ்சி விழுது – 2 மேசைக்கரண்டி
பூண்டு விழுது – 2 மேசைக்கரண்டி
மிளகுத்தூள் – அரை தேக்கரண்டி, சீரகத்தூள் – அரை தேக்கரண்டி
மிளகாய்த்தூள் – அரைத் தேக்கரண்டி
மஞ்சள்தூள் – அரைத் தேக்கரண்டி, எலுமிச்சை சாறு – 4 மேசைக்கரண்டி
கடலைமா – 2 மேசைக்கரண்டி, எண்ணெய் – 5 மேசைக்கரண்டி
வெண்ணெய் – சிறிது, ஜாதிக்காய் – சிறிது
ஏலக்காய் – 3, உப்பு – தேவைக்கேற்ப

**செய்முறை:**

எலும்புகளை நீக்கி பெரிய துண்டுகளாக வெட்டி செய்த இறைச்சியை சுத்தம்செய்து கொள்ளவும். தயிரினை நன்கு அடித்துக் கொண்டு அதனுடன் இஞ்சி, பூண்டு விழுது, மிளகுத்தூள், சீரகத்தூள், மிளகாய்த்தூள், மஞ்சள்தூள், எலுமிச்சை சாறு, தேவையான உப்பு, கடலை மா அனைத்தையும் சேர்த்து எண்ணெய்விட்டுக் கலந்துகொள்ளவும். ஏலக்காய், ஜாதிக்காய் அனைத்தையும் ஒன்றாய் சேர்த்து பொடியாக அரைத்து ஒரு தேக்கரண்டி அளவிற்கு எடுத்துக் கொள்ளவும்.

தயிருடன் அடித்து வைத்துள்ள இஞ்சி, பூண்டு விழுதினை சிக்கன் துண்டுகள் மீது தடவி சுமார் நான்கு மணி நேரம் நன்கு ஊறவிடவும். இறைச்சித் துண்டுகளை சொருகும் கம்பியில் நுழைத்து அவனில் வைத்து 10 நிமிடங்களுக்கு வேகவைத்து எடுக்கவும். 3 நிமிடங்களுக்கு ஒரு முறை எடுத்து வெண்ணெய் தடவி மீண்டும் வேகவிடவும். பின்னர் எடுத்துபரிமாறவும். மசாலா கலவையுடன் கொத்தமல்லி, புதினா அரைத்து சேர்த்து மற்றொரு வகை டிக்காவினையும் தயாரித்து பரிமாறலாம்.



# முகம் பளபளக்க பழ மசாஜ்

முதலில் கிளன்சிங் பிறகு மசாஜ், ஸ்கிரப், பேக் ஆகியவற்றை செய்து கொள்ள வேண்டும்.

கிளன்சிங்காக பாலை உபயோகப்படுத்தி முகம் முழுவதும் பூசி மெதுவாக இரண்டு நிமிடம் தேய்த்து பஞ்சைக் கொண்டு துடைக்கவேண்டும். இதனால் தோலினுள் படிந்திருக்கும் அழுக்கு நீங்கிவிடும். மசாஜ் செய்ய தயிரை உபயோகப்படுத்த வேண்டும். இது சூரியக்கதிர்களின் தாக்குதலால் ஏற்படும் சருமக் கறுப்பைப் போக்கும்.


பப்பாளி விழுதைச் சேர்த்து வறண்ட மற்றும் சாதாரண சருமத்தினர் மசாஜ் செய்ய உபயோகப்படுத்தலாம். தக்காளி, ஒரேஞ்சு, கொய்யா, வாழைப்பழம் கலவையைக் கொண்டு மசாஜ் செய்தால் முகம் மிகவும் பளபளப்புடன் இருக்கும்.

சருமத்தில் அதிக கறுப்பு – வெள்ளை இருந்தால் சீனியைப் பொடித்து அத்துடன் சிறிது பப்பாளி விழுதை சேர்த்து முகத்தில் அழுத்தி தடவவேண்டும். மசாஜ் முடிந்தவுடன் சிறிய டவலைக் கொண்டு வெந்நீரில் நனைத்து பொறுக்குமளவு சூட்டுடன் முகத்தின் மேல்போட்டு மூன்று நிமிடங்கள் கழித்து எடுக்க வேண்டும். இவ்வாறு இரண்டு அல்லது மூன்று முறை செய்யவேண்டும். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் சிறிய பாத்திரத்தில் நீரை கொதிக்க வைத்து ஆவி பிடிக்க வேண்டும். வேப்பிலைகள் சிறிது சேர்த்து ஆவி பிடித்தால் மிகவும் நல்லது.

பேக் போட கரட், அப்பிள், ஒரேஞ்சு, உருளைக்கிழங்கு, தேன், வெள்ளரி, பேரீச்சம் பழம், எலுமிச்சைச்சாறு சிறிதளவு இவற்றை அரைத்து பேக் போட்டு அரைமணி நேரம் கழித்து முகம் கழுவ வேண்டும்.

மேற்கூறியவற்றில் ஏதாவது இரண்டு அல்லது மூன்று சேர்த்து அரைத்தும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இந்த பேஷியல் செய்த உடனேயே கண்கள் குளிர்ச்சியடையும். முகம் பளபளப்பாகவும் அழகாகவும், பொலிவுடனும் மாறும்.






முன்னதாக, கொரியா தொழிலாளர்கள் கட்சிக் கூட்டத்தில் வடகொரிய அதிபர் கிம் ஜோங்-புன் பேசும்போது கூறியதாவது:

அமெரிக்கா வடகொரியாவை ஆயுத போட்டிகளில் ஈடுபட வைத்து நமது பொருளாதார வளர்ச்சியில் தடை ஏற்படுத்த நினைக்கிறது.

உறுதியான அணு பலத்தை அடிப்படையாகக் கொண்டே அமைதியும் வளர்ச்சியும் அமைய முடியும். அப்போதுதான் மக்களிடம் மகிழ்ச்சி இருக்கும். எந்த அளவுக்கு அணு ஆயுதத் திறன் இருக்கிறதோ, அந்த அளவுக்கு படையெடுப்புகளை தடுத்து நிறுத்த முடியும். நமது அணு ஆயுத பலம், போர்களை எதிர்க்கும் திறனுடன் இருக்கிறது. அது நமது இறையாண்மையைப் பாதுகாக்கும் எனத் தெரிவித்தார்.

## அணு ஆலை வசதிகள்

யொங்பியான் அணு உலை வளாகம், அணுக்குண்டை தயாரிப்பதற்கு இரண்டு வழிகளில் உதவும். அதில் ஒன்று அங்குள்ள யுரேனிய செறிவாக்கல் வசதிகள்.

அடுத்தது, அந்த அணு உலையில் பயன்படுத்தப்படும் எரிபொருள், புளுட்டோனியமாக மாற்றப்பட முடியும்.

இதனை மீள ஆரம்பிப்பதன் மூலம் வடகொரியாவுக்குப் பல துருப்புச் சீட்டுக்கள் கிடைக்கும். அதனை வைத்து பல விளையாட்டுக்களை அது காண்பிக்க முடியும்.

தனது அணுத்திட்டத்துக்கு அது மேலும் மூலப்பொருளை பெறமுடியும். அத்துடன், அதனை எப்படி திரும்பவும் மூடச் செய்வது என்பது தொடர்பில் உலகின் முழுக் கவனத்தை அது மீண்டும் வடகொரியாவின் பக்கம் திருப்பிவிடும்.

2007 ஆம் ஆண்டில் இந்த அணு உலைகளை நிறுத்துவதற்கு பதிலாக அமெரிக்காவும், ஏனைய சில நாடுகளும், வடகொரியாவுக்கு ஊக்க உதவிகளை வழங்க முன்வந்தன.

அணு உலையை மீண்டும் ஆரம்பிப்பதாகக் கூறி அதற்குப் பதிலாக உதவிகளை பெற்றுக்கொள்ளலாம் என்ற வடகொரியாவின் யுக்திக்கு மீண்டும் இடம்கொடுப்பதில்லை என்று அமெரிக்கா உறுதியாக இருக்கலாம்.

ஆனல், கடந்த காலத்தில் யொங்பியான் அணு உலை வடகொரியாவுக்கு ஒரு ...கமான பலனைத்தான் தந்திருக்கிறது. ...கவே திரும்பவும் அப்படியே நடக்கும் என்று வடகொரியா எதிர்பார்க்கலாம்.

## வடக்கு அமெரிக்காவின் கடும் எச்சரிக்கை!

ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானப்படி அனைத்து வகையான அணு ஆயுத நடவடிக்கையில் இருந்தும் வடகொரியா விலக வேண்டும்...இதையும் மீறி ஏவுகணை சோதனைகளை நடத்தினால் நிச்சயமாக வருத்தப்பட வேண்டியிருக்கும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இந்நிலையில் ஏப்ரல் 10 ஆம் தேதிக்குப் பிறகு வெளிநாட்டு தூதரகங்களுக்கு தங்களால் எந்த பாதுகாப்பும் அளிக்க முடியாது என்று வடகொரியா அறிவித்தது. இது தொடர்பாக வெளிநாட்டு தூதர்கள் கூட்டத்தை கூட்டிய வடகொரியா, பாதுகாப்பாக வெளியேற தற்போது உதவுகிறோம் என்றும் கூறியிருக்கிறது.

ஆனால் இது தொடர்பாக கருத்து தெரிவித்திருக்கும் இங்கிலாந்து வெளியுறவுத் துறை அமைச்சகம், வடகொரியா நிலைமைகள் தொடர்பாக சர்வதேச கூட்டு நாடுகளுடன் ஆலோசித்து வருகிறோம். வடகொரியாவில் இருந்து தூதரகத்தை உடனே விலக்கிக் கொள்ள முடிவு செய்யப்படவில்லை என்றார்.

சுவீடன் வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரிகள், தூதரகத்தை காலி செய்யுமாறு வடகொரியா கூறவில்லை. ஆனால் வெளியேறுவதற்காக பாதுகாப்பு உதவிகளை செய்வதாக வடகொரியா தெரிவித்துள்ளது என்றார். பிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சகமும், வடகொரியா நிலைமை மிகவும் கவலையளிக்கிறது என்று கூறியுள்ளது,

மேலும் வட கொரியா தாக்குதல் நடத்த 2 ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்திருக்கிறது. இவை 3 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் முதல் 4 ஆயிரம் கிலோமீட்டர் தூரம் வரை பாய்ந்து சென்று இலக்கைத் தாக்கக் கூறியது என்று கூறப்படுகிறது. அதாவது தென் கொரியா மற்றும் ஜப்பானின் எந்த இலக்கையும் தாக்க முடியும். மேலும் பசுபிக் தீவுகளில் ஒன்றான அமெரிக்காவுக்குச் சொந்தமான குவாம் தீவையும் வடகொரியாவினால் தாக்க முடியும். குவாம் தீவுதான் வடகொரியாவின் முதல் இலக்காக இருக்கக் கூடும் என்றும் கருதப்படுகிறது.

இந்நிலையில் சர்வதேச விதிகளை மீறி அணு ஆயுத நடவடிக்கையில் ஈடுபடுவதில் இருந்து வடகொரியா விலகி இருக்க வேண்டும். இதை மீறி எந்த ஒரு ஏவுகணை சோதனை நடத்தினாலும் அது ஆத்திரமூட்டும் நடவடிக்கையாகவே கருதப்படும். அதற்காக வடகொரியா வருத்தப்பட வேண்டியதாக இருக்கும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருக்கிறது. மேலும் வடகொரியா ஏவுகணைத் தாக்குதல் நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

## காஸ்ட்ரோ எச்சரித்துள்ளார்

இதனிடையே வடகொரிய அரசு சுய கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என வடகொரியாவின் நெடுநாள் நட்பு நாடான கியூபாவின் முன்னாள் அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ கருத்து தெரிவித்திருக்கிறார். கியூபா நாட்டின் பத்திரிகை ஒன்றில் வட-கொரியாவில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை குறித்து அவர் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:- தங்களுடைய தொழில்நுட்ப முன்னேற்றம் அறிவியல் முன்னேற்றம் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக் காண்பித்திருக்கின்ற வட கொரியர்கள், இனி சற்று பொறுமை காக்க வேண்டும். தற்போது கொரிய வளைகுடாவில் நிலவும் சூழ்நிலை நம்ப முடியாததாகவும் அபத்தமானதாகவும் இருக்கிறது. வடகொரியா கியூபாவுடன் எப்போதும் நட்பாகவே இருந்துள்ளது. கியூபாவும் அதனுடன் நட்பை தொடரவே விரும்புகிறது. வடகொரியா அதன் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை உலகிற்கு காண்பித்துவிட்டது. இப்போது வடகொரியா தனது நட்பு நாடுகளுக்கு செய்ய வேண்டிய கடமை பற்றி அதற்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மேலும் இது போன்ற போர்கள் உலகின் 70 சதவீத மக்களை மிக மோசமாக பாதிக்கும் வாய்ப்புகள் உள்ளது என்பதை வடகொரியா மறந்து விடக்கூடாது. மேலும் அணு ஆயுத யுத்தம் ஒன்று வெடிக்குமானால் சரித்திரத்தில் மிகவும் அபாயகரமான அமெரிக்க அரசாங்கமாக அதிபர் ஒபாமாவின் அரசாங்கம் அவப்பெயருக்கு உள்ளாகும் என்றும் காஸ்ட்ரோ எச்சரித்துள்ளார்.

## வடகொரிய நிலமை கட்டு மீறிவிட்டது ரஷ்யா எச்சரிக்கை

வடகொரியாவில் நிலமை கட்டுமீறிப் போய்விட்டதாக ரஸ்ய வெளிநாட்டு அமைச்சர் சேர்ஜி லாரேவ் எச்சரிக்கை கலந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

இரு தரப்பும் நடக்கும் நடத்தை பிழையான பாதையில் நச்சுச்சுழற்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் கட்டுப்படுத்த முடியாத இடத்திற்குள் சூறாவளி புகுந்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் சில தினங்களுக்கு முன்னர் தென்கொரிய வட்டகையில் அமெரிக்காவின் குண்டு வீச்சு விமானங்கள் பறந்ததையும் மறைமுகமாக கண்டித்த அவர், சமகாலத்தில் வடகொரியாவின் போர்ச் சன்னதத்தையும் குறை கூறியுள்ளார்.

வடகொரியா, தான் போரிலேயே இப்போது இருப்பதாக தெரிவித்து, தென் கொரியாவுடனான போர்க்கால பிரகடனத்தையும் செய்துள்ளது.

தென்கொரியாவுடனான சுதந்திர வர்த்தக வலய வர்த்தகம், இணையத் தொடர்பு உட்பட அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்து போர்ப் பிரகடனம் முழங்கியுள்ளது.

மறுபுறம் வட கொரியா எத்தனை மிரட்டலை விடுத்தாலும் அமெரிக்காவுடனான தமது கூட்டுப்பயிற்சி தொடரும் என்று தென்கொரியா முன்னர் அறிவித்தது.

## குரைக்கிற நாய் கடிக்குமா? கடிக்காதா?

மேலும் குரைக்கிற நாய் கடிக்காது. அது பயத்திலேயே இப்படிக் குரைக்கிறது என்று வடகொரியாவுக்கான டேனிஸ் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவும், தென்கொரியாவும் இணைந்து வடகொரிய தலைமையை அழித்து அங்கு ஜனநாயகத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சம் வட கொரிய தலைவர் கிம் யொங் உங்கிற்கு இருக்கிறது.

போர் தொடங்கினால் வடகொரியா வெற்றி கொள்வது இயலாத காரியமாகும், காரணம் அமெரிக்காவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் எங்கிருக்கின்றன எவ்வாறு தாக்கும் என்பதெல்லாம் மர்மமாகவே இருக்கிறது.

மேலும் மிகமிக துல்லியமாக தாக்கும் அதி நவீன ஏவுகணைகளை அமெரிக்கா மறைத்து வைத்துள்ளது, கொரியாவிற்குள் அது அறிமுகமாகலாம் என்ற அச்சமும் உள்ளது.

சமீபத்தய செய்திகளின்படி சுமார் 300 மீட்டர் நிலத்தைத் துளையிட்டு சென்று நிலத்தடியில் இருக்கும் அணு ஆயுதங்களை அழிக்கும் வல்லமை கொண்ட ஏவுகணைகளை அமெரிக்கா உருவாக்கியிருப்பதாக தெரிகிறது.

அமெரிக்க தலைவர்கள் தமது நாட்டு பொருளாதார நெருக்கடி பற்றி ஊடகங்களில் சூடு பறக்க பேசினாலும் கூட சீனாவைவிட பல மடங்கு அதிக பணத்தை இந்த ஆண்டு அமெரிக்கா தனது இராணுவத்திற்கே ஒதுக்கியுள்ளமை கவனிக்கத்தக்கது.

தனது முதன்மையை அமெரிக்கா இப்போதைக்கு இலகுவில் இழக்கும் என்று கருத முடியவில்லை, ஆகவேதான் வட கொரியாவுக்கு இரட்டிப்பு அச்சம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் கொரிய குடா ஒரு குளவிக்கூடு போன்றது. அதில் கல்லெறிந்தால் குளவிகள் சிதறி சீனாவை சீரழிக்கும் என்ற குறி இருப்பதால் வடகொரியா மிரட்டலோடு நின்றுவிடும் என்பது மேலைத்தேய பார்வையாக இருக்கிறது.

## வடகொரியா, தென்கொரியா ஆயுதங்கள் ஒப்பீடு

வடகொரியாவிற்கும் தென்கொரியாவிற்கும் எந்த நேரத்திலும் போர் வெடிக்கலாம் என்ற நிலை நீடிக்கிறது. அப்படி போர் மூண்டால் தென்கொரியாவிற்கு ஆதரவாக அமெரிக்கா களம் இறங்கும் நிலையும் இருக்கிறது.

இந்நிலையில் இவ்விரு நாடுகளின் ராணுவ வலிமை என்ன? என்பதை பார்ப்போம். கம்யூனிஸ்டு நாடான வடகொரியாவின் வருடாந்த தற்காப்பு செலவீனம் 820 கோடி டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. அந்நாட்டின் உள்நாட்டு உற்பத்தி அளவில் அது சுமார் 24 மடங்காகும்.

அதே வேளையில் கடந்தாண்டுக்கான தென்கொரியாவின் வருடாந்த தற்காப்பு செலவீனம் 3200 கோடி டாலர். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 27 மடங்காகும்.

கடந்த பெப்ரவரி மாதம் வடகொரியா மூன்றாவது முறையாக அணுவெடி சோதனை செய்து தனது அணு ஆயுத வலிமையை புலப்படுத்தி உள்ளது.

ஆனால் தென்கொரியாவை அணுஆயுத தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் முழு பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக் கொண்டுள்ளது.

வடகொரியாவிடம் 12 லட்சம் ராணுவ வீரர்கள் உள்ளனர். அவர்களை தவிர்த்து 70 லட்சம் துணை இராணுவத்தினரும் உள்ளனர்.

அதே வேளையில் தென்கொரியாவிடம் 6.55 லட்சம் ராணுவ வீரர்கள் மட்டுமே உள்ளனர். தென்கொரியாவிடம் 30லட்சம் துணை ராணுவ வீரர்கள் உள்ளனர்.

தென்கொரியாவிற்கு பக்க பலமாக 28,000அமெரிக்க வீரர்களும் தென் கொரியாவில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

வடகொரியாவிடம் 4,200 போர்டாங்கிகளும், தென்கொரியாவிடம் 2,450 போர்டாங்கிகளும் உள்ளன.

வடகொரியாவிடம் 2,500 கவச வாகனங்களும், தென்கொரியாவிடம் 2,600 கவச வாகனங்களும் உள்ளன. அமெரிக்காவின் 110 கவச வாகனங்களும் தென்கொரியாவில் உள்ளன.

வடகொரியாவிடம் 8,500 பீரங்கிகளும், தென்கொரியாவிடம் 5,200 பீரங்கிகளும் உள்ளன.

வடகொரியாவின் விமானப்படையில் 820 போர் விமானங்களும், 300 ஹெலிகொப்ரர்களும் உள்ளன. தென்கொரியாவிடம் 460 விமானங்களும், 680 ஹெலிகளும் உள்ளன.

வடகொரியாவின் கடற்படையில் மூன்று பிரதான போர் கப்பல்களும், 383 ரோந்து கப்பல்களும், 70 நீர் மூழ்கிகளும், 135 ஹோவார் கிராப்ட் கப்பல்களும் உள்ளன.

தென்கொரியாவின் கடற்படையில் 19 பிரதான போர்க்கப்பல்களும், 111 ரோந்து கப்பல்களும், 23 நீர் மூழ்கிகளும், ஐந்து ஹோவார் கிராப்ட் கப்பல்களும் உள்ளன.

கடந்த டிசம்பர் மாதம் தொலை தூர ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியது.

இந்த ஏவுகணை சில ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் சென்று தாக்கும் திறன் கொண்டது. கடந்த மாதம் மூன்றாவது அணுஆயுத சோதனையை நடத்தியதும் நினைவிருக்கலாம்.

வடகொரியா 1986 இல் புளுட்டோனியம்அணு உலையை தொடங்கியது. அணுஆயுத பரவல் தடை விவாதத்தின் காரணமாக 2007 இல் இந்த அணு ஆலை மூடப்பட்டது.

தற்போது போர் சூழல் உருவாக்கி உள்ள நிலையில் இந்த மையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. அதே போல் யுரேனியம் செறிவூட்டும் நிலையத்தையும் வடகொரியா மீண்டும் திறந்துள்ளது.

இதனால் அணு குண்டு தயாரிப்பதற்குரிய சூழலை வடகொரியா ஏற்படுத்தி உள்ளதாக அச்சம் தெரிவித்துள்ளது அமெரிக்கா. வட கொரியாவின் நட்பு நாடுகளும் இதற்கு வருத்தம் தெரிவித்துள்ளன.

**பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் என்பது யுத்தத்தின் பின்னர் பெருந்தொகையில் அதிகரித்திருந்தது. இவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக அனைத்துத் தரப்பினரும் பாடுபட வேண்டும் என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்கு அவர் களின் தேவைகளும், பிரச்சினைகளும் அதிகரித்திருந்தன என்பது மற்றொரு கதை.**

**இந்த நிலையில், தற்போது பெண் முயற் சியாளர்களின் எண்ணிக்கை, செயற்பாடுகள், வருமானமீட்டல்கள் அதிகரித்திருக்கின்றன என்பதற்கு பல்வேறு உதாரணங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. அந்த வகையில், மட்டக் களப்பு மாவட்டத்தில் முதன்முறையாக பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி கண்காட்சி மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்று முடிந்திருக் கின்றது.**

**இவ் அக்கண்காட்சி இதன் முக்கியத் துவம், மற்றும் பலவேறு விடயங்கள் குறித்து அராயவுள்ளோம்.**

# பெண் முயற்சியாளர்களுக்கு கைகொடுக்கும் கண்காட்சி

**- பிரகஸ்பதி -**

மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் 3 நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில், பிரதம அதிதியாக ஊக்குவிப்பு உற்பத்தி திறன் விருத்தி அமைச்சர் பசீர் சேகுதாவூத், சிறப்பு அதிதியாக மீளகுடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட 231 படை கட்டளை தளபதி பிரிக்கேடியர் சுகத்த திலகரட்ன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பெண் தொழில் முயற்சியாளர்களின் இந்தக் கண்காட்சியை பெண்கள் முன்னேற்ற நடவடிக்கையில் முக்கிய பங்கு வகித்துவரும், காவியா பெண்கள் அமைப்பினால் மட்டக்களப்பில் முதல் தடவையாக இந்த கண்காட்சி நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தவும் அவர்களது வியாபார நடவடிக்கைகளை ஊக்குவிக்வும் என மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத் தொழில் விவசாய சம்மேளனத்தின் உதவியுடன் சர்வதேச தொழிலாளர் ஸ்த்தாபனத்தின் அனுசரணையுடன் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த கண்காட்சியில் பெண் தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திப்பொருட்களை காட்சிப்படுத்தியதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் பெண் சுயதொழில் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்கள் பங்குபற்றியுள்ளனர்.

பெண்களின் வாழ்வதாரம் மற்றும் அபிவிருத் திக்கு இந்த கண்காட்சி ஊக்குவிக்கும் வகையிலான சுயதொழில் முயற்சி தொடர்பிலான கருத்தரங்குகளும் கண்காட்சி தினங்களில் நடைபெற்றமை சிறப்பான விடயமாக இருந்தது.

பெண்முயற்சியாளர்களின் இந்த உற்பத்தி கண்காட்சி மற்றும் வியாபார சந்தை திறப்பு நிகழ்வில், விசேட அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மட்டக்களப்பு மாவட்டத்தில் விதவைகளாக 24 ஆயிரம் பேரும் , பெற்றோரினால் கைவிடப்பட்ட மற்றும் மாற்றுத்திறனுடைய பிள்ளைகள் 16001 பேரும் உள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மத்திய வங்கியானது விவசாயிகளுக்கு வழங்கும் கடனுக்குரிய 14 வீத வட்டி வீதத்தில் அரசு 8 வீதத்தையும் பயனாளி 6 வீதத்தையும் வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. வட மாகாணத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதார வசதிகளை ஐ.எல்.ஓ. நிறுவனம் வழங்கியுள்ளது.

சர்வதேச உல்லாசப்பயணிகள் உள்ளூரில் பனம் மற்றும் தும்புப் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்வதில் அதிக நாட்டம் செலுத்துகின்றனர் ஏனெனில் செயற்கைப் பொருளான பிளாஸ்டிக்கினால் உற்பத்தி செய்யப்படும் பாவனைப் பொருட்கள் உக்கி அழிவதற்கு சுமார் 200 வருடங்கள் செல்லுகின்றன; என்று தெரிவித்திருந்தார்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் முன்னேற்றம், மேம்பாடு, வாழ்க்கைத்தர உயர்ச்சி போன்ற பல வேறு விடயங்களை நோக்காகக் கொண்டு மட்டக்களப்பில் இயங்கும் காவியா பெண்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்து இக் கண்காட்சி மற்றும் விற்பனை மாவட்டத்தின் முன்னேற்ற நிலையைக் காண்பிப்பதுடன், ஏனைய மாவட்டங்களிலும் உள்ள பெண்களின் முன்னேற்றத்தினையும் வெளிக் கொணர்வதாக அமைந்திருக்கிறது. அதேநேரம், மாவட்டத்தில் உள்ள கணவனை இழந்த பெண்கள், மற்றும் மாகாணத்திலுள்ள இவ்வாறான பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் முன்னேற்றத் திற்கும் ஒரு முதல் படியானதாக இருக்கிறது.

பெண்கள் சுயதொழில் முயற்சியாளர்களாக மாறி பொருளாதாரத்தில் வளம் சேர்க்கும் செயற்பாட்டினை மேற்கொண்டு வருவதானது சிறப்பானதொரு முன் நோக்கச் செயற்பாடாகும். இது ஒரு மட்டக்களப்பின் உற்பத்தித் திறனுக்குச் சாட்சியான விடயமாகவும் இருக்கிறது.

உற்பத்தித் துறையில் ஏற்படுகின்ற மேமம்பாடே ஒரு நாட்டின் வளர்ச்சியில் மிக முக்கிய பங்காற்றுகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அந்தவகையில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்ட பெண்களின் உற்பத்தித் துறையில் வளர்ந்துவரும் நிலையை மட்டக்களப்பில் நடத்தப்பட்ட வர்த்தகக் கண்காட்சி முக்கிய இடம் பெறுகிறது.

இதே போன்று ஐக்கிய நாடுகளின் கைத் தொழில் அபிவிருத்திக்கான நிறுவனத்தின் (UNIDO) அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தினரால் (BDCCIA) கிழக்கு மாகாணத்தில் முதன்மைப்படுத்தப்படும் வகையிலான கண்காட்சி ஒன்று 2011ஆம் ஆண்டு இரண்டு கண்காட்சிகள் நடத்தப்பட்டிருந்தது, அதே போல் 2012ஆம் ஆண்டு அனைத்து உற்பத்தித் துறைகளும் பங்கு பெறும் வகையிலான கண் காட்சி ஒன்று சிவானந்தா தேசியப்பாடசாலை மைதானத்தில் நடைபெற்றிருந்தது.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் பிரமாண்ட வர்த்தகக் கண்காட்சியும் சந்தையும் கடந்த 08ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெற்றது. மட். மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலய மாணவிகளின் கரகம் மற்றும் கன்னங்குடா மகாவித்தியாலய மாணவர்களின் வசந்தன் நடனங்களுடன் அதிதிகள் வரவேற்று அழைத்து வரப்பட்டு கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது.

யுத்தத்துக்கும், சுனாமிக்கும் பின்னர் முதல் முதலாக நடாத்தப்பட்ட வர்த்தகக் கண்காட்சி என்ற வகையில் பல கம்பனிகள், ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் எனப் பலரும் வர்த்தக நிலையங்களை அமைத்திருந்தன என்பதுடன் கிராமியக் கைத்தோழில் அமைப்புக்கள் பலவற்றின் கைப்பணிப் பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கடந்த 30 வருடத்துக்கும் மேலாக யுத்தத்தை எதிர் கொண்டு பல அழிவுகளைச் சந்தித்த மட்டக்களப்பு மாவட்டமானது இயற்கை அழிவுக்கு அடிக்கடி முகம் கொடுக்கும் மாவட்டமாக இருந்து வருகிறது. அந்த வகையில் மீள்வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களினால் பல்வேறு உதவிகள் மேற்கொள்ளப்பட்டாலும் உற்பத்தி, கைத்தொழில் துறையின் வளர்ச்சி முக்கியமானதாகும்.

தற்போதைய நிலையில் மிக முக்கியமாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை மீளமைக்கும் பொருட்டு சுயதொழில் முயற்சியாளர்களை அதிகளவிலம் மேம்படுத்துவதற்காக மாவட்டத்தின் மிகப் பிரதான தொழிலாக கொண்டுள்ள விவசாயம், மீன்பிடி, பால் உற்பத்தி என்பவற்றுடன் சுற்றுலாத்துறையினை மையமாகக்கொண்டு பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வகையில் இது போன்ற கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றமையானது, மக்களின் பல வேறு வகையான தேவைகளை வெளிக் கொணர்வதாகவும், முன்னேற்றங்கள் வெளிக் கொணரப்படுகின்றமையானது, மேலும் மேலும் உற்பத்தித்துறையை ஊக்குவிப்பதாக அமையும்.

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் தகுந்த காலத்தில் இவ்வாறான செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அதன் பிரயோசனங்களைச் முழுமையாக அனுபவிக்க முடியாது என்பது உண்மையாகும். இவ்வாறான கைத்தொழில் வளர்ச்சி சார்ந்த வேலைத்திட்டங்கள் பயிற்சிகள் வெளிப்படுத்தல்கள் மூலம் வேலையற்றோர் பிரச்சினையினைத் தீர்க்கின்ற களமாக சுய தொழில் உற்பத்தித்துறை அமையும்.

மட்டக்களப்பில் கடந்த வாரத்தில் நடைபெற்ற கண்காட்சியில், பெண் முயற்சியாளர் களின் உற்பத்திப் பொருள்களான பாய், செருப்பு வகைகள், மட்டக்களப்பு பலகார வகைகள், அரிசி, அரிசி மா, அழகு சாதனப் பொருள்கள், எனப் பல பொருள்களும் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டருந்தன.

உற்பத்தித் திறன் விருத்திகளால் மக்கள் மத்தியில் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், பொருளாதார மேம்பாடும் ஏற்படுகிறது. இதனால் நல்லதொரு அபிவிருத்தி ஏற்படும் என்பதே நம்பிக்கையாகும்.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியினை அதன் உற்பத்தியலும் வருமானத்திலும் கண்டு கொள்ளலாம் என்பதற்கு ஆரம்பப்படியாக மட்டக்களப்பில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய கைத்தொழில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்ற விசயத்தினை இந்த இடத்தில் சொல்லியாகவேண்டும்.

அந்த வகையில், கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெண் உற்பத்தியாளர்களின் பங்கை வெளிக் காட்டும் வகையில் காவியா பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற கண்காட்சி பறைசாற்றி நிற்கின்றது என்பது இந்த இடத்தில் வெளிப்படையானதாகும்.

இந்த இடத்தில், மட்டக்களப்பில் நடைபெற்று வரும் கைத்தொழில் முயற்சிகளுக்கு உதவிகளை வழங்குவது சிறப்பாக இருக்கும் இதுவே எதிர் கால சந்ததியினக்கும் பெரும் உதவிகளைச் செய்யும் என்பதே ஏற்பாட்டாளர்களது வேண்டு கோளாக இருந்தது. இந்த வேண்டு கோள்கள் நிறைவேற்றப்படுவது அனைவரது கைகளுக்கும் பரிமாறப்படுவதே சிறப்பாகும். ()

# தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உடன்படிக்கையும் மாகாணசபைத் தேர்தலும்

**அமலன்**

**இலங்கையின்** தொழில் துறையில் வித்தியாசமான முறையில் நோக்கப்படும் பெருந்தோட்ட தொழிலாளர்கள். மீண்டும் ஒருமுறை புறக்கணிக்கப்பட உள்ளாார்கள்.

ஆமாம். பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வுகள் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சீரமைக்கப் படுகின்றன.

இந்தவகையில் கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த. தொழிலாளர்களின் சம்பள உயர்வு உடன்படிக்கை மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அடிப்படை நாள் சம்பளம் 450 என்று நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

மொத்த சம்பளம். அதாவது 21 நாட்களுக்கு அதிகமாக மாதத்தில் வேலை செய்தால். நாள் ஒன்றுக்கு 140 ரூபாவும் மேலதிக கொழுந்து கிலோ ஒன்றுக்கு 30 ரூபா என்றும் நிர்ணயிக்கப்பட்டு 620 ரூபா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாள் சம்பளம் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னுள்ளமையை காட்டிலும் 70 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதாவது இது 15 வீத அதிகரிப்பு என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனினும் நாட்டில் பொருட்களின் விலையுயர்வு. மற்றும் வாழ்க்கை செலவுப்புள்ளி என்ற அடிப்படையில் தொழிற்சங்கங்கள், 50 வீத சம்பள அதிகரிப்பை கோரியிருந்தன. எனவே வழங்கப் பட்டுள்ள சம்பள அதிகரிப்பு



போதுமானதல்ல. வெறும் புறக்கணிப்பே என்று தொழிலாளர்களுக்கான சம்பள கூட்டு உடன் படிக்கையில் கைச் சாத்திடாத தொழிற்சங்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் கூட்டு உடன் படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். ஐக்கிய தேசியக்கட்சியின் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் மற்றும் கூட்டு உடன்படிக்கை வேளையில் மாத்திரம் பேசப்படும் ராமநாதன் என்பவரின் தொழிலாளர் கூட்டு என்பன இந்த சம்பள உயர்வு வெற்றியென்று குறிப்பிடுகின்றன.

அத்துடன் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இரண்டு மாத இழுத்தடிப்பின் பின்னர் மேற் கொள்ளப்படும் தொழிலாளர்களுக்கான கூட்டு உடன்படிக்கை இந்த முறை ஒரே வாரத்துக்குள் செய்துமுடிக்கப்பட்டதாக இந்த தொழிற்சங்கங்கள் கூறுகின்றன.

இருப்பினும் தொடர் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டிருக்குமானால். தொழிலாளர்களின் சம்பளத்தை மேலும் அதிகரித்திருக்கலாம் என்று மாற்று தொழிற் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன

எனவே வழமையான முறையிலேயே பெருந்தோட்ட தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக ஜன நாயக மக்கள் முன்னணியின் மனோ கணேசன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் அரசியல் துறை தலைவர் வீ ராதாகிருஸ்ணன் போன்றோர் குறிப்பிடுகின்றனர்

இந்தநிலையில் கூட்டு உடன் படிக்கையை எதிர்த்து எதிர் வரும் 21 மற்றும் 22 திகதிகளில் துக்கத்தினத்தை அனுஸ்டிப்பது என்று இந்த தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

எனினும் தோட்ட தொழிலாளர்களின் சார்பில் செய்துக்கொள்ளப் பட்ட கூட்டு உடன்படிக்கையானது. முடிந்த முடிபு என்ற அடிப்படையில் அதனை மீண்டும் திருத்துவது அல்லது. எதிர்ப்பது என்பது வெறும் அரசியல் காய்நகர்தலாகவே இருக்கும்

அத்துடன். இந்த உடன் படிக்கை எதிர்வரும் மத்திய மாகாணசபைத்தேர்ததலுக்கான முக்கிய காரணியாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனைக்கருத்திற்கொண்டு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழுவினர் உடன்படிக்கையை அவசரமாக செய்துமுடித்தனர் என்றும் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

# இயலாமையை இயலுமையால் வெற்றிகொள்வோம்

**நாம்** யாருக்காக வாழ்கிறோம்? ஆம். நாம் ஒவ்வொருவரும் நம்மை கேட்க வேண்டிய கேள்விதான். இக்கேள்விக்கு மூன்று விடைகளைக் கூறலாம். நாம் எமக்காக வாழ்கிறோம், நாம் பிறருக்காக வாழ்கிறோம், எமக்காகவும் பிறருக்காகவும் நாம் வாழ்கிறோம் என்பனவே அம்மூன்று விடைகளும் ஆகும்.

இறைவனின் படைப்புக்களில் இயலாமையுடையோரை இறைவன் படைக்கவில்லை. அனைவரையும் சமமாகத்தான் படைத்துள்ளான் என்பதில் எவ்வித ஐயமில்லை. ஆனால் மனிதன் தன்னை இயலாதவனாக்கிக் கொள்கின்றான். அதாவது கை, கால் அற்ற ஊனமுற்றவனே! வேறு குறை பாடு உடையவனாகவே இருந்தால் தன்னால் சாதிக்க இயலாது என்று கூறுகின்றனர். யார் சொன்னது உங்களால் சாதிக்கமுடியாது என்று. கை, கால் ஒழுங்காக இருந்தும் சிலர் தம் வாழ்நாளை வீணாக கழிக்கின்றனர். அவர்கள் மத்தியில் உள்ள இயலாமையை இயலுமாக்க முயற்சி செய்தால் நீங்கள் அவர்களைவிட பன்மடங்கு மேலானவர்கள்.

உங்களைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கும் மதிப்பீட்டின் அடிப்படையிலேயே உங்கள் முன்னேற்றம் அமையும் மானிடர் அனைவரும் தம்மைப் பற்றித் தாமே மதிப்பீடு செய்வதுண்டு. சிலர் தம்மைப் பற்றி, தமது திறமை பற்றி, சாதனை பற்றி, சிறப்புக்கள் பற்றி உயர்வாக மதிப்பீடு செய்வார்கள். சிந்தை மகிழும் வண்ணம் சிறப்பாக எண்ணுவார்கள். உள்ளம் உயரும் வண்ணம் உயர்வாக மதிப்பீடு செய்வார்கள்.

சிலரோ தம்மைப் பற்றி, தமது திறமைகள் பற்றி தாழ்வாகவும் குறைவாகவும் மதிப்பீடு செய்வார்கள். உங்களைப் பற்றி தாழ்வாக எண்ணினால் சிந்திய கண்ணீருடனும் சிறப்பற்ற வாழ்வுடனேயே வாழ நேரிடும். தாழ்வான சுயமன மதிப்பீடு தாழ்வினை நல்கிடும்.

உங்கள் வாழ்வை உருவாக்கும் அரும் பெரும் கருவி உங்கள் மனதில் ஏற்படும் சுயமான எண்ணங்கள். உங்களைப் பற்றி நீங்கள் போடும் மதிப்பீட்டைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கை அமையும். உங்களைப் பற்றி நீங்கள் ஏற்றிடும் சுயமதிப்பீடே உங்களது எதிர்காலத்தை தீர்மானிக்கின்றது. உங்கள் வெற்றியும் தோல்வியும் உங்களிடம் தோன்றும் தன்னம்பிக்கையிலேயே தங்கியுள்ளது.

உங்கள் நெஞ்சத்தில் உதித்து, உள்ளத்தில் உறையும் எண்ணங்கள் எதுவோ, அதுவே உங்கள் வாழ்வும் வளமும் வெற்றியும், தோல்வியும் நன்மையும் தீமையும்.

செயல் முனைப்பு, செயல் நம்பிக்கையைப் பொறுத்ததே. 'என்னால் சாதிக்க முடியும்.' 'நான் சாதனையாளன்' என்ற வலுவான சுயமதிப்பீடும், தன்னம்பிக்கையுமே வெற்றியை ஈட்டித் தரும் வித்துக்கள்.

ஐயமும், அச்சமும் 'எனக்குத் தகுதியில்லை' என்னால் சாதிக்கமுடியாது என்ற தாழ்வான எண்ணங்கள் தாழ்வினைத் தந்துவிடும். தீதும் நன்றும், வெற்றியும் தோல்வியும், சாதனையும் வேதனையும் பிறர் தர வருவதில்லை. உங்கள் உள்ளத்தில் உதித்த மனப்படக் காட்சிகளின் பெறுபேறுகளே அவை.

"நெஞ்சில் கவலைதனை நிதமும் பயிராக்கி அஞ்சி வாழ்தல் அறியாமை" என்று பாரதியார் கூறியுள்ளார். அச்சம் என்பது மடமை! அஞ்சாமை என்பது உடைமை!

நீங்கள் உங்களைப் பற்றி என்ன மதிப்பீடு செய்கின்றீர்களோ, அதுபோலவே உங்கள் வாழ்க்கை சேவையும் அமையும். நல்லவற்றையே எண்ணல் வேண்டும் அவற்றை உயர்ந்ததாக எண்ணல் வேண்டும். இதனையே வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

**"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்**
**மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து"**

**"வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு"**

நீரின் உயர்மட்டம் எவ்வளவுக்கு, உயருகின்றதோ, அந்தளவிற்கு தாமரை உயர்ந்து நிற்கும். அதுபோல ஒருவரின் எண்ணங்கள், சிந்தனைகள் எந்த அளவிற்கு உயர்ந்ததாக, சிறந்ததாக இருக்கின்றதோ அதுபோலவே அவரது வாழ்க்கையின் உயர்வு அமைகிறது. தண்ணீரின் உயரமே தாமரையின் உயரம் எண்ணங்களின் உயரமே வாழ்க்கையின் முன்னேற்றம். நம்பிக்கையே வாழ்க்கையாக மலருகின்றது. ஆகவே எண்ணங்களை மேம்படுத்துவதன்மூலம் வாழ்வினை, சேவையினை மேம்படுத்தலாம்.

**நான் தினம் தினம் முன்னேறி, முன்னேறி வருகின்றேன்.**

**நான் தினம், தினம் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்கின்றேன்.**

**நான் தினம் தினம் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக வளர்ந்து வளர்ந்துவருகின்றேன்.**

என்று திரும்பத் திரும்பத் தினமும் கூறச் சொன்னார். எமிலி கூ என்ற




பிரெஞ்சு மனோதத்துவ நிபுணர் இதே முறையைக் கையாண்டு பல இயலாமையுடைய நோயாளிகளைக் குணம் ஆக்கினார்.

ஒருவர் எவ்வாறு தம்மைப் பற்றித் தாழ்வாக எண்ணி எண்ணி, அஞ்சி அஞ்சி வாழ்கின்றாரோ, அத்தகைய தாழ்வினையும் வீழ்ச்சியினையும் அவர் அடைந்துவிடுவார். "நான் ஒரு நோயாளி" என்னும் எண்ணம் உங்களை எப்பொழுதும் வாட்டி வதைக்கின்றதா? அவ்வாறாயின் இன்றிலிருந்து அவ்வாறு எண்ணாதீர்கள். நான் ஒரு நோயாளி என்ற தாழ்வான எண்ணமே நோயை விடக் கொடியது.

கொடியது, கொடியது என்னால் இயலாது என்ற தாழ்வான எண்ணங்கள், அதனிலும் கொடியதுதானே. தன்னைப் பற்றிக் குறைகூறுவது மிகமிகக் கொடியது. 'நான் ஒரு நோயாளி' என்று நினைப்பது 'நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத் திறனுமின்றி அஞ்சி அஞ்சி வாழ்வது அறியாமை'

இவ்வாறான நிலை கெட்ட – மதி கெட்ட மனிதரை நினைக்கும்பொழுது நெஞ்சு பொறுக்குதில்லையே, நெஞ்சு பொறுக்குதில்லையே' என்று புலம்புகிறார் பாரதியார்.

இயலாமையிலிருந்து தம்மை விடுவிக்கும் மனோநிலையை ஏற்படுத்த வேண்டும். தைரியத்தினையும், துணிவினையும் கைக்கொள்ள வேண்டும். மனங்கலங்கக்கூடாது. மனதில் துணிவும் செயலில் உற்சாகமும் விடாமுயற்சியும் இருக்கவேண்டும். தன்னம்பிக்கை, திறமை, என்பவற்றை வளர்க்கவேண்டும்.

தாழ்வுணர்ச்சி வேண்டாம். அனைத்தையும் வெல்ல முடியும். வெற்றியைப் பற்றிய சிந்தனையுடன் செயற்படுங்கள். தோல்வி, வெறுப்பு, அவமதிப்பு, அவநம்பிக்கை ஆகியவற்றை அகற்றுங்கள். முன்னேறும் சந்தர்ப்பங்கள் தானாகவே வருவதில்லை. நீங்களே உங்கள் உயர் எண்ணங்கள் மூலம் உருவாக்க வேண்டும்.

நீங்கள் 'நல்லதே நடக்கும்' என்று நம்பிக்கையுடன் சிந்தித்து உங்கள் தினசரிக் கடமைகளை ஆற்றிவந்தால் உங்களுக்குத் தேவையான உதவிகள் கிடைத்துவரும். இது மாயமந்திரமல்ல. உங்கள் நல்ல எண்ணங்கள் அதிர்வுகளாக அனுப்பப்பட்டு, உங்களைப் போல நல்ல சிறப்பான, உயர்வான, உன்னதமான எண்ணங்கள் உடையவர்களை உங்கள் எண்ண அதிர்வு ஈர்த்து விடுகிறது. இதனால் உதவியும் வெற்றியும், மகிழ்ச்சியும் தொடர்ந்துவரும்.

வெற்றி எண்ணங்களை எண்ணிடல் வேண்டும். வெற்றி எண்ணங்கள் வளர வளர உள்ளத்தில் வலுவான சக்திகள் உருவாகும். திடமான மனதுடன் நல்லெண்ணங்களுடனும் வாழ்ந்தால் உயர்வான வாழ்க்கையில் என்றென்றும் வெற்றியே. மனத் திரையில் ஏற்படும் நம்பிக்கையே உள் மனதில் பதிந்து உங்கள் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டியாகின்றன.

செல்வந்தர் செல்வ வளம், பொன், பொருள் ஆகியவற்றையே எண்ணுகிறான். ஆகவே பணக்காரர்கள் மீண்டும் பணக்காரர்கள் ஆகின்றார்கள். செழிப்பையும், செல்வத்தையும் பற்றியே நினைக்கும் மக்கள் மேலும்மேலும் செல்வந்தர்களாக ஆகின்றார்கள்.

ஏழைகள் தங்களைச் சுற்றியுள்ள வறுமையையே எண்ணி எண்ணி ஏங்குகிறார்கள். இல்லாமையைப் பற்றிய நினைவு வறுமையைத் தருகிறது. ஆகவே ஏழைகள் மீண்டும் ஏழைகள் ஆகிறார்கள். இதற்கு மாறாக ஏழைகள் ஏழ்மையைப் பற்றி கருத்துக்களை மாற்றி வெற்றியைப் பற்றிச் சிந்திக்கவேண்டும்.

(தொடரும்...)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 516

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | | 10 | 11 | 12 |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| | 20 | | 22 | 23 | |
| 25 | 26 | 27 | 28 | 29 | |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **24.04.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 516
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 514- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மி | 2 சா | 3 வோ | 4 ஒ | 5 கா | 6 வா |
| 7 கா | 8 ர | 9 ம் | 10 பு | 11 சி | 12 ஞ் |
| ■ | 14 சி | 15 த | 16 ப் | ■ | 18 சை |
| 19 ச | ■ | 21 ரு | 22 வி | 23 து | ■ |
| 25 டை | 26 ந | ■ | ■ | 29 ள | ■ |
| ■ | 32 பி | 33 ரா | 34 ன் | 35 சி | 36 ஸ் |

**இடமிருந்து வலம்**

01. ஓர் நிலவளவுப் பிரமாணம்.
07. ஒன்றின் 1/8 அங்குல அளவை.
10. தருதல் அல்லது ஈதல். (திரும்பியுள்ளது)
15. விவாகத்திற்கு வரவேற்கும் பத்திரம். (குழம்பியுள்ளது)
22. முற்றாக அல்லது முடிவாக. (திரும்பியுள்ளது)
25. ஒரு விளையாட்டுப் பொருள் அல்லது அடக்கமற்ற தன்மை. (குழம்பியுள்ளது)
31. இரும்புத்துகள் அல்லது ஒரு தமிழ் சினிமா நடிகர். (குழம்பியுள்ளது)
35. காடு அல்லது வாய்க்கால்.

**மேலிருந்து கீழ்**

01. சொல்லுரை.
02. கோதுமையின் குருநொய்.
04. தென்னை மரம்.
06. புளோவர் என்ற சிறிய பறவைதான் இந்த விலங்கின் பற்களைச் சுத்தம் செய்யுமாம்.
11. இவர்தான் கோச்சடையான்.
20. கயிறு அல்லது ஊஞ்சல்.
25. அக்கினி அல்லது வறுமை.
27. கிரகம் அல்லது விண்மீன்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.514 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

கு.யசோதா, பட்டாணிச்சூர், வவுனியா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. அ.மாளவிகா, மாதகல் தெற்கு, மாதகல்
02. து.வந்தனா, கோவில் வீதி, அளவெட்டி.
03. எம்.அஸீஸ், ஆரையம்பதி, மட்டக்களப்பு.
04. வ.கணேசமூர்த்தி, செம்பியன்பற்று, தாளையடி.
05. சா.வேந்தன், எட்டியாந்தோட்டை.
06. இ.சாரங்கன், பிரதான வீதி, சாவகச்சேரி.
07. பா.மல்லிகா, நெத்தலியாறு, விசுவமடு.
08. சீ.சரனிகா, துன்னாலை தெற்கு, துன்னாலை.
09. எஸ்.மாதுமி, இரத்மலானை.
10. சீ.அன்புராஜா, குருநகர், யாழ்ப்பாணம்.



**இராமசாமி ரமேஷ், அளம்பில்**

**ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.**

# வலிகளின் சன்மானம்

"அடடா!! சந்தோசம்டாப்பா.." இவனின் கரங்களுக்குள் சிக்குண்டிருந்த கோவையை வாங்கிமேலோட்டமாய் தட்டிப் பார்த்தார். நேர்த்தியான கையெழுத்துக்களே. ஒவ்வொரு கதை கூறுவதுபோல!" அதுக்கென்ன? என்னால முடிஞ்சளவு கெல்ப் பண்ணுவன் தம்பி..." புன்முறுவலுடன் முல்லைச்செல்வனிடமிருந்து பதில்வர, மகிழ்ச்சி வானில் சிட்டாகினான் நட்சத்திரன்.

நிலாவுக்குத் திருமணம் சிறப்பாக அரங்கேற ஆயத்தம்! நாளை நடக்கப்போகும் காரியங்களில் இன்றே முனைப் போடு செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள் உறவுகள். பந்தல்பிடித்து காணியின் நடுவே அழகாய் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வீடு நிறப்பூச்சுக்களால் நிறைந்திருக்கிறது. சொந்தங்கள், நண்பர்கள் என்று பலரும் வந்த சேர்ந்துவிட்டார்கள். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு வேலைகளில் மூழ்கிவிட்டார்கள், நிலாவும்தான்!



தன் சேலைகள், நகைகளை சரிபார்த்துக் கொண்டிருந்தாள். மாலையில் வரவேற்புக்காக இளநீல வேலைப்பாடுகள்நிறைந்த புடைவையினை தழுவியபோது, சட்டென நட்சத்திரனின் ஞாபகம்வந்து ஒட்டிக்கொண்டது. அவனுக்கு இளநீல வர்ணத்தில் அதீத பிடிப்பு. நிலாவிடம் ஏற்கனவே தனக்குப் பிடித்தவை பற்றி சொல்லும் போது, இவனின் விருப்பங்களில் இளநீலமும் ஒன்றாய்! தன்னையறியாமல் "என்னசெய் கிறாரோ.." நினைத்துக் கொண்டது மனம்! "வேண்டாம்! என்னை வேண்டாமென்று உதவிய உறவு... இனி வேண்டவே வேண்டாம். நாம் விரும்பும் உறவுகள் நமக்கில்லை என்றாலும், நம்மை விரும்பும் உயிர்கள் நமக்காய் இருக்கின்றனவே..." இதுவேபோதும்.." கோபம், ஆற்றாமை இவளுக்குள் சேர்ந்து கொண்டன. "நாளைக்கு ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டப்போகிறவளுக்கு... இன்று இன்னொருவனின் நினைவு இருக்கக்கூடாது! உண்மையாக ஒருத்தனுக்கு மட்டும் உடலும் சரி, உள்ளமும் சரி கொடுக்கப்படவேண்டும்..." தன் எண்ணப் பறவைக்கு கட்டாயமாய் கடிவாளமிட்டாள்.

இத்தனை நாட்களாய் துவண்டிருந்த சோர்வுகள் உடலைவிட்டு நீங்கி, உற்சாகம் தொற்றியிருந்தது. ரகுவும் திருமணத்துக்காக கொஞ்சமாய் மாறிப்போயிருக்கிறான். நிலாவோடு வந்துபேசிவிட்டுத்தான் போனான் காலையும்!

ஆரம்பத்தில் நிர்ப்பந்தத்தில் அவனைக்கட்டிக் கொள்ள முடிவெடுத்திருந்தாலும், இன்றுகளில் ரகுவை இதயத்துக்குள் பதுக்கி வைத்திருக்கிறாள் நிலா!

நல்லவனாய் நடித்து, நம்ப வைப்பவர்களைவிட நிஜமாய் வாழ்ந்து விட்டுப்போகும் ரகு போன்றவர்கள் மேன்மையானவர்கள் என்பது நிலாவின் நினைவு! பாவம் நட்சத்திரன்! அவனது போராட்டங்கள் இவளுக்குப் புரியவாய்ப்பில்லை!! காதலில் உரிமைகள், தனிப்பட்ட ரீதியான விருப்பு வெறுப்புக்கள் என்பன இருந்தாலும், பலரிடம் புரிதல்தான் இல்லாமல் போய்விடுகின்றது. இவர்களது விடயத்திலும் புரிந்துணர்வெனும் பெரிய பாலம் இல்லாததுதான் பிரிவுக்குக் கால்வாய் தோன்றக் காரணம்.

"நிலாம்மா...!! உன்ர ப்ரண்ட்ஸ் வந்திருக்காங்க..." யாரோ உறவுக்கார பெண்மணியின் அழைப்புக் கேட்டு வெளியே வந்தாள் நிலா! அங்கே அவளின் தோழிகள் வந்திருந்தார்கள். சரி! அரட்டைக்கு ஆட்கள் வந்தாயிற்று... ஐவரும் ஐக்கியமானார்கள் பேச்சோடு!!

"வலிகளின் சன்மானத்துக்கு... மொத்தமாய் ஐம்பதாயிரம் ரூபாவாவது வேணும் நட்சத்திரன்.

"நான் எனக்குத் தெரிந்த பிரஸ்ஸில கொடுத்து புத்தக வேலைகளைச் செய்யிறன். நீங்க காசுக்கு ஏற்பாடு செய்யுங்க... சரியா... கவலைப்படாத... இனி உமக்கு நல்ல காலம்தான் தம்பி!" முல்லைச்செல்வன் பெரிய துணையாக உதவிக்கரம் நீட்டினார். ஏழைகளை ஏறெடுத்துப் பார்க்கவும் தயங்கும் இன்றைய சமூகத்தின்முன், முல்லைச்செல்வனின் உயர்ந்த உள்ளம், நட்சத்திரனின் உள்ளத்தில் அவருக்கு சிம்மாசனம் இட்டது.

"ஒரு கதவு அடைக்கப்பட்டாலும், இன்னொரு கதவு திறக்கப்படும் என்பது உண்மையாகிவிட்டது. இத்தனை நாள் என் எண்ணங்களுக்குள் கருக்கட்டிக்கிடந்த ஆசைகள், கனவுகள், கற்பனைகள் அனைத்துமே... பிரசவிக்கப்படப்போகும் நாள்... வலிகளின் சன்மானம் வெளியிடப் படும் அந்த நாள்தான்.." ஆனாலும்... ஐம்பதாயிரம் திரட்டவேண்டுமே... சின்னதாய் ஒரு நெருடல் இவனிடத்தில் தீண்டியது!!

(வலிகள் தொடரும்...)

# சோம்பலால் விளைந்த கேடு

**என்.எப்.நஹ்ரீதா, ரத்மல்யாய.**



**பச்சைப்** பசேலென எழில்மிகுந்த ஊர் சோனபுரி. அங்கே பல இன மக்களும் ஒற்றுமையாகவும், அந்நியோந்நியமாகவும் வாழ்ந்து வந்தனர். அங்கே கமலன் என்பவன் வாழ்ந்து வந்தான். இவன் மிகவும் சோம்பேறியாகக் காணப்பட்டான். ஒவ்வொருநாளும் 10, 11 மணியளவில்தான் எழும்புவான். பிறகு ஒவ்வொரு வீடாகவும் ஒவ்வொரு கடையாகவும் பிச்சை கேட்பது போல் உணவு கேட்டுத் திரிவான். சாப்பிட்டு மிகுதியாகக் இருப்பதை கொடுத்து அனுப்புவார்கள். இவனும் வெட்கமில்லாமல் அதை கைநீட்டி வாங்கி உண்டு மகிழ்வான். "இவனுக்கு வேற வேலையே இல்லை" இவன் இருந்தும் ஒருவருக்கும் பிரயோசனம் இல்லை" இவனை ஊரைவிட்டு துரத்த வேண்டும் என்று முடிவு செய்தனர்.

பின்பு ஊர் பஞ்சாயத்தாரிடம் ஊர்மக்கள் இவனையும் அழைத்துக்கொண்டு சென்றனர். நடந்ததை எல்லாம் பஞ்சாயத்தரிடம் கூறினார். அவர் கமலனைப் பற்றி அனைத்து விடயங்களை தெரிந்துகொண்டார். உடனே அவனை அழைத்து "உனக்கு வெட்கமில்லையா? உழைக்கத் தெரியாதா? எனக் கேட்டார்" இல்லை... என தலையை மட்டும் ஆட்டினான். உடனே பஞ்சாயத்தார் அவனிடம் நீ இனிமேல் இவ்வூரில் இருக்கக்கூடாது. இங்கிருந்து நாளையாவதற்குள் சென்று விடு" என்று ஆணையிட்டார்.

அனைத்து மக்களும் சந்தோசமடைந்தனர். அதில் வளம்பூரி ஊரைச் சேர்ந்த ஒரு பெரியவர். இவனை நான் என்னோடு கூட்டிச் சென்று நாட்டின் நற்பிரஜையாக ஆக்குகிறேன் என்று கூறினார். இதற்கிடையில் மக்களில் ஒருவர் முன்வந்து இவன் ஒரு அநாதை. இவனைக் கேட்பார் எவருமில்லை. அதிலும் இவன் மகாபடு சோம்பேறியாகக் காணப்படுகின்றான். நீங்கள் இவனை அழைத்துச் செல்வதைவிட வேறு ஊரிற்குப் போகச் சொன்னால்தான் உருப்படுவான் என்று கூறினார்.

இதைக் கேட்ட பெரியவர் நான் இவனை அழைத்துச் செல்வதாக முடிவெடுத்து உள்ளேன். என்றுகூற, பஞ்சாயத்தார் கமலனிடம் உனக்கு சம்மதமா? எனக் கேட்டார். இதற்கு அவன் "ஆம்" என்று தலையாட்டினான். பிறகு அப்பெரியவரோடு வளம்பூரிக்குச் சென்றான். இவர் அவனுக்கு பல்வகையான உணவுகளைக் கொடுத்தார்.

இவனும் வேண்டாம் என்றுசொல்லாமல் கிடைப்பதையெல்லாம் சாப்பிட்டுகொண்டிருந்தான். உனக்கு எத்தனை வயது என பெரியவர் கேட்டபோது எனக்குத் தெரியாது எனக் கூறினான். பரவாயில்லை விடு என்று அப்பெரியவர் கூறினார். சிலவாரம் கழிந்து கமலனுக்கு இரண்டு சக்கர வண்டியை வாங்கிக்கொடுத்தது சில வகையான பழங்களையும் கொடுத்து விற்றுவிட்டு மிகுதியை சாப்பிட்டுவிட்டான். வீட்டுக்கு வரும் வழியில் கால் இடறி கல்லில் முட்டுப்பட்டு விழுந்துவிட்டான். பல காயங்களுடன் வீட்டிற்குள் சென்றான்.

பெரியவர் இவனைக் கண்டதும் ஆச்சரியம் அடைந்து இவனை வைத்தியசாலையில் அனுமதித்தார். கமலனை அங்கேயே தங்க வைத்தனர். பெரியவரிடம் 8000ரூபா பணம் கட்டுமாறு கூறினர். பெரியவரும் பணத்தை கட்டிவிட்டு கமலனின் அறையை வந்தடைந்தார்.

பிறகு கமலனைப் பார்ப்பதற்கு கதவைத் திறந்தபோது கமலனைக் காணவில்லை. கவலையடைந்தார். நான் இவனைப் பெற்ற மகன் போல் கவனித்தேனே. ஆனால் அவனோ என்னை விட்டுவிட்டு பிரிந்துவிட்டான் என்று நினைத்து நெஞ்சு வழியால் துடிதுடித்தார். வைத்தியசாலையிலே அவரும் தங்கினார்.

பிறகு "கமலன்... கமலன்" என்று புலம்பிக் கொண்டே இருப்பார். வைத்தியசாலையில் உள்ளவர்கள் இவர் நம் முன்பு தங்கவைத்த நபரைத் தேடுகிறார். எனவே பொலிஸிடம் அறிவியுங்கள் என்று கூறினார்கள்.

சிலநாட்களின் பின் அவனை( கமலனை) தேடிக்கண்டுபிடித்து அபபெரியவரின் முன்னால் நிறுத்தினர். அப்பெரியவர் கண்ணீர் மல்க கமலனைப் பார்த்து, நீதான் என் சொத்துக்களுக்கு வாரிசு எனக்கூறினார். அதைக் கேட்ட கமலன் என் அருமை "தந்தையே" என்னை மன்னித்துவிடுங்கள் என்று கூறி பெரியவர் மனம் குளிர்ந்து சந்தோசத்துடன் "மகனே" என்று கூப்பிட்டு முடிவதற்குள் இறந்துவிட்டார். அவரின் நெஞ்சின்மேல் கண்ணீர் துளிகள்! கமலன சிந்தினான். இப்போது மகன் அல்லவா இவன்! இறந்ததற்குக் காரணம் நான்தான். இது சோம்பலால் விளைந்த கேடு என மனதிற்குள் புறுபுறுத்துக் கொண்டு மனம் திருந்தி தந்தையை அடக்கம் செய்யும் கருமங்களை எல்லாம் செய்து முடித்தான். சிலநாட்களின் பின் அவன் ஒரு தோட்டத்தை விலைக்கு வாங்கினான். அதை உழுதான். பயனடைந்தான். அவ்வூரிலேயே பரம்பரை பணக்காரனானான். தந்தையின் பெயரால் ஒரு அநாதை இல்லமும் கட்டி அகமகிழ்ந்தான்.

## சிரிப்பதற்கு...



**நோயாளி:** டாக்டர் என் உடம்புக்கு என்ன பண்ணன்னே சொல்லத் தெரியலை...

**டாக்டர்:** டோன்ட் வெர்ரி ... எனக்குக் கூட எப்படி ஒப்பரேஷன் செய்யப் போறேன்னு சொல்லத் தெரியலை... நான் பயப்படுறேனா...



இரகசியமும்
தெரிந்திருக்கிறது!"
என்றாள் இளம்
மயிலாள்.

"உலகை வெல்வதைவிட
கடினமானது என்ன
தெரியுமா? "என்ன?"
என்றாள். "உன் போன்ற
அழகியின் இதயத்தை
வெல்வது!" "ஓஹோ!"
"வெஞ்சமர் களத்திலே
வெற்றிக் கனி பறிப்பது
கொஞ்சமும் கடினமல்ல!"
வேறென்ன கடினம்?"

"உன் கண் சமர்
மத்தியில்
காதல் கனி பறிப்பது!"
"அடடே புரவலர் எப்போது
புலவர் ஆனீர்கள்?"

"புவியை ஆளும்போது
புரவலன்! பூவை
ஆளும்போது புலவன்!"
"கற்பனை மழையெனப்
பெய்கிறதே!"

"மோகம் முட்டுகிறது ஏக்கம்
கொட்டுகிறது!"
"பூமிக்குத்தான்
அச்சமாக இருக்கிறது!"

"வெட்டும் மின்னலும்
கொட்டும் இடியும்
பொழியும் மழையும்
பூமிக்கு மகிழ்ச்சிதானே!"

"இடியால் பூமி அதிரும்!"
"அதிரும்போது பூமி
அதையும் ரசிக்கும்!"

மழையால் பூமி நனையும்!"
"நனைந்தால்தானே
பூமி செழிக்கும்.
"இரவு ஆடையை மின்னல்
விலக்கும்!"
"அப்போது மட்டும் தான்
பூமி வெட்கிச் சிவக்கும்"
போதும் உங்கள் விளக்கம்

"மன்னனுக்கு ரசனை
அதிகம்
மங்கையருடன்
சரசமும் அதிகம்!

" முகில் தழுவும் மலைகள்
என்போம். அதுபோல
துகில் தழுவும் மலைகள்
இரண்டு கண் நேரே?"

கண் சிமிட்டினான்
கட்டழகியைச்
சீண்டினான்!

"வாரத்தில் ஒரு நாள் தான்
செவ்வாய் உண்டு - உன்
வதனத்தில் தினமும் தான்
செவ்வாய் உண்டு!

நாள்களிலே செவ்வாயும்
சிறந்த நாள்தான்!
நாள் தோறும் உன்
செவ்வாய் சிறந்த
தேன்தான்!"

செவ்வாயில் புன்னகை
வழிந்தது!
"நாடாளும் வேந்தருக்கு
நங்கையை ஆளும்



# தப்புக்கள் இரண்டு

என்றாள்.

"பொருதும் களம் இனி
திறக்கும்!" என்றான்.
வசந்த விழாவின்
வாயிலை மன்னன் தட்டத்
தொடங்க வாயில் கதவு
தட்டப்பட்டது!

"எட்டிய கனியை
தட்டிப் பறித்தது போல
இந்த நேரத்தில்
கதவு தட்டப்பட்டது!

"எட்டிய கனியை
தட்டிப் பறிப்பது போல
இந்த நேரத்தில்
கதவைத் தட்டுவது யாரடா?

மன்னா! ஆபத்துக் காலடியில்!"
"என்ன பாம்போ

படையெடுத்திருக்கிறது?"
இகழ்ச்சியாகக் கேட்டான்!
பாம்பல்ல மன்னா
படைதான் வந்திருக்கிறது!
மக்கள் படை!"

என்ன கேட்கிறார்கள்?
வழக்கம் போல
வாக்குறுதிகளை வழங்கு!
எலும்புத்துண்டுகளை
எடுத்துவீசு!"

மன்னிக்க வேண்டும்
மன்னா, இம்முறை
எங்கள் எலும்புகளையே
எண்ணிவிடுவார்கள்
போலிருக்கிறது!"

"பணிந்துவாழப்
பழகியவர்கள் எப்படி
துணிந்து வந்தார்கள்?"

மன்னனின் கோபம்
மீசையில் துடித்தது!
கட்டிலில் விருந்து

கொட்டிக் கிடக்கிறது!
பள்ளி கொள்ளும் நேரத்தில்
கொள்ளி போடுகிறார்களே!

சந்தன மேனியில்
சாய்கின்ற நேரத்தில்
சுந்தரப் பொய்கையில்
தோய்கின்ற நேரத்தில்
நந்தியாய் வந்தனரே
மந்திகளாம் மக்கள்!

"எரிச்சலோடு எட்டிநடந்தான்!
என்ன வேண்டும் ஏன்
வந்தீர்கள்?"
உண்ண வேண்டும்
உறங்கவேண்டும் - அதற்கு
தொழில் வேண்டும்!

கொட்டிய மழையால் வீசிய
புயலால் மூழ்கிய எங்கள்
வாழ்க்கைக்கு நிவாரணம்
வேண்டும்!

மன்னனின் மூக்கில் கோபம்
மன்னனின் உதட்டில்
சுடுசொல். மந்தைபோல்
வந்தீர் என்றால்
தந்தைபோல் சுருண்டோ
போவேன்?

நிர்வாணமாய் நின்றால்
கூட நிவாரணம் இல்லைப்
போங்கள்!"

மன்னின் பேச்சுக் கேட்டு
மக்களோ துடித்துப் போயினர்.

"இரும்புதான் நெஞ்சோ
உனக்கு! ஒழிந்துபோ மன்னா
உன்னை ஏன் எமக்கு?

மக்களை வதைக்கும் மன்னன்
மக்களைப் பகைக்கும்
மன்னன் ஆண்டென்ன.
அழிந்தால் என்ன?"

"மக்களின் குரல்கள் உயர

மன்னனின் குரலும்
உயர்ந்தது. வீசுங்கள்
தூக்கி வெளியே!
மந்தைகள் கூட்டம்
சாய வீசுங்கள் வாளை
அங்கே"
உத்தரவிட்டான் மன்னன்.
அசையாமல் நின்றனர்
வீரர்!

செவிகள் என்ன செவிடோ
சொன்னதைச் செய்க"
முழங்கினான் மன்னன்.

வீரரில் ஒருத்தன்
சொன்னான்.
செவி பழுது உமக்குத்தான்
விழி பழுது உமக்குத்தான்!"

மன்னன் திகைத்து நிற்க
மக்கள் படை பாய்ந்தது.
அரண்மனை தகர்ந்தது.
மன்னன் நிறுத்தப்பட்டான்
மக்கள் மன்றத்தில்!

இரும்பாக நின்றாய்
முன்னர் இன்று
தேய்ந்தாயே ஏன் என்று
கேள்!
சுடுசொல்லும்
கொடும் சட்டமும்
இரும்பான வலிமையை
அரம்போல மாறி
தேய்த்தன காண்!

முறை தவறிய
ஆட்சியாளர் நிறை
தவறுவர் மக்கள் போடும்
எடையில்!"

மன்னனுக்கு சொன்ன
நீதி திருக்குறளிலும்
உள்ளது பாரீர்.

"சுடு மொழியும் கையிகந்த
தண்டமும்
வேந்தன் அடு முரண் தேய்க்கும்
அரம்"
அதிகாரம் : 57 - குறள்:567

---

# சிந்தியா பதில்

**சிந்தியா! முள்ளியவளையில் முஸ்லிம்களின் ஆர்ப்பாட்டம் குறித்து உங்களது அபிப்பிராயம் என்ன?**

ஆ.உவிப்பிரியா, முல்லைத்தீவு.

அரசியல்வாதிகள். தமது வாக்கு வங்கியை மனதில் வைத்துக் கொண்டு. மக்களை. பகடைக்காய்களாக. ஆட்டுவிக்கிறார்கள்.

நடக்கின்ற மக்கள் ஆர்ப்பாட்டங்களைப் பார்க்கின்றபோது. அவற்றில் உண்மைத்தன்மை இல்லை. கூலிக்கு ஒப்பாரி வைப்பதற்கு ஒப்பாகவே சமகால நடவடிக்கைகள் இருக்கின்றன.

ஆகையால்தான், அந்தப் போராட்டங்கள் வெற்றியளிக்காமலே. முடிவுக்கும் வந்துவிடுகின்றன.

**சிந்தியா! தனித்தமிழ் ஈழமே தமிழக மாணவர்களின் கனவாக இருக்கின்றதே...?**

கு.செளமிகா, அன்னாலை.

அது நடைமுறைச் சாத்தியம் அற்றது என்பதால் புலிப் பினாமிகளுக்கும், கலைஞருக்கும் இப்போது. மாணவர்களுக்கும், கனவாகவே இருக்கும். நிஜம் வேறு; கனவு வேறு என்பதை காலம் உணர்த்தும்.

**சிந்தியா! காவி உடை தரித்தால் எதையும் செய்துவிடலாம் என்ற அசிங்கமான கலாசாரம் இருப்பதாக ரவூவ் ஹக்கீம் தெரிவித்துள்ளாரே?**

எம்.காமினி, நயினாதீவு.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவர் தெரிவித்திருக்கும் துணிச்சலான கருத்து இது. அவரிடமிருந்து இன்னும் துணிச்சலான செயற்பாடுகளை முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். நீதி அமைச்சர் என்பதால் சரியையும், பிழையையும் புரிந்து அமைச்சர் ஹக்கீம் முடிவுகளை எடுப்பது நல்லது.

**சிந்தியா! அமெரிக்காவின் முக்கிய ஆவணங்களை வெளியிடப்போவதாக ஜூலியன் அசெஞ் அறிவித்துள்ளாரே..?**

ம.சாலகவி, பூவரசங்குளம்.

அவர் விக்கிலீக்ஸ் செய்திச் சேவையை நடத்துவது அமெரிக்காவை அம்பலப்படுத்துவதற்கா, மக்களுக்கு இரகசியங்களை அம்பலப்படுத்துவதற்கா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இரகசியங்களில் சிலவற்றில் சுவாரசியங்களும் இருக்கலாம். பலவற்றால் ஆபத்துக்கள்தான். எது தெரியவேண்டும் எது தெரியக்கூடாது. அதனாலான விளைவுகள் என்ன? என்பதை தெரிந்து கொண்டே விளையாடுகின்ற அசெஞ்சின் விளையாட்டு ஆபத்தானது.

**சிந்தியா! நடிகைகள் தங்களது நடிப்பைவிட கோடி கோடியாக சம்பாதிக்கின்றனரே?**

அ.ரொபின்சன், புத்தளம்.

பணம் சம்பாதிப்பதற்கு அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதையும், எங்கே விழுந்து, எங்கே எழுவது என்ற திசை தெரியாமல் விதி எழுதும் கோட்டில் விளையாடும் வாழ்க்கை அது.

பணம் மட்டுமே மிச்சமாய் இருக்க. வாழ்க்கையைத் தொலைத்து விட்டோம் என்று பல நடிகைகள் புலம்பியதைப் பார்த்திருக்கிறோம். ஆகவே நடிகைகளை பணம் சம்பாதிக்கும் இயந்திரங்களாகப் பார்க்காதீர்கள்.



**சிந்தியா! சர்ச்சைகளைக் கடந்து ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் இலங்கை வீரர்களின் ஆட்டம் குறித்து..?**

க.அஷாங்கன், காலி.

சென்னையில் நடைபெறுகின்ற போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்குகொள்ளவில்லை. இலங்கை வீரர்கள் பௌத்த பிக்குகள் தாக்கப்பட்ட பின்னரும் சென்னையில் விளையாட சம்மதித்தது அவர்களின் பெருந்தன்மையைக் காட்டுகின்றது.

ஆனால் அரசியல் காரணங்களைக் காட்டி இலங்கை வீரர்களைத் தடை விதித்தது ஜெயலலிதா அரசின் ஆளுமைக் குறைவையே காட்டுகின்றது.

**சிந்தியா! பணம் வாழ்க்கைக்கு முக்கியமா?**

மு.கார்த்திகேயன், மானிப்பாய்.

முக்கியம்தான்! ஆனால் பணம் மட்டும் வாழ்க்கை அல்ல!

" பணம் எங்களுக்கு முக்கியமில்லை. மற்றவர்களுக்குத்தான் பணத்தாசை" என்று சொல்லும் ஆசாமிகள் இருக்கிறார்கள் பாருங்கள்! அவர்களிடம்தான் பணத்தாசை அதிகம் இருக்கும்!

பணம் தொடர்பான ஒரு அனுபவப் பழமொழி: "பணத்தின் மதிப்புத் தெரிய வேண்டுமானால் அதைக் கொஞ்சம் கடனாகக் கேட்டுப் பார்!."


ஸ்ரீ ராம ஜெயம்

## மலையாள மாந்திரிக சக்தி



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508




# மோதிர விரல்



**சச்சின்** டெண்டுல்கர் மிகச் சிறந்ததொரு காரியம் செய்திருக்கிறார். அதாவது எவ்வித முதல்தர கிரிக்கெட் அனுபவங்களும் இல்லாத ஒரு இளைஞனை, மும்பை இந்தியன்ஸ் அணிக்குள் கொண்டு வந்திருக் கிறார். அவுஸ்திரேலியாவிற்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டிக்கு முன்னதான வலைப் பயிற்சியின்போது, அப்பயிற்சிக்கான பந்துவீச்சாளராக செயற்பட்டவர் ஜாவிட்கான்.

இவர் உத்தர பிரதேச கஜ்ருவாலா கிராமத்தைச் சேர்ந்தவர். இருபதே வயதயான இவர் அறியப்பட்ட வீரரும் அல்ல. ஆனால் வலைப்பயிற்சியின் போது இவரது வேகத்தையும், நுட்பங்களையும் அவதானித்த சச்சின் ஆறாவது ஐ.பி.எல். மும்பாய் இந்தியன்ஸ் அணியில் இணைக்கத் தீர்மானம் கொண்டார். இதனால் இவரை மும்பாய்க்கு வரும்படி கூறிய சச்சின், அணித் தலைவர் ரிக்கி பொன்ரிங், பயிற்சியாளர் ஜோண் ரைட் ஆகிய இருவரிடமும் இவரை அறிமுகப்படுத்தியுள்ளார். அவர்களும் சச்சின் கூறியதில் இருந்த உண்மைகளைப் புரிந்துகொண்டு அணியில் சேர்க்க இணங்கியுள்ளனர்.

எனவே 140 கிலோமீற்றர் வேகத்தில் அநாயசமாகப் பந்துவீசும் ஜாவிட் கான் இந்திய ரூபாய்கள் பத்து இலட்சத்துக்கு மும்பாய் இந்தியன்ஸ் அணியால் வாங்கப்பட்டுள்ளார். முதல்தர கிரிக்கெட் ஆட்ட அனுபவம் இல்லாத உள்ளூர் கிரிக்கெட் வீரர்களுக்குக் கொடுக்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட தொகையே ரூபா பத்து லட்சம் ஆகும். மிகுந்த மகிழ்ச்சியில் இருக்கும் ஜாவிட்கான், தான் தோல் பந்துவீச்சை தனது பதினெட்டு வயதிலேயே தொடங்கியதாகவும், அதற்குமுன் ரென்னிஸ் பந்துவீச்சுத்தான் தெரியும் என்றும் கூறியுள்ளார். இந்திய அணிக்குத் தேவை சிறந்த வேகப் பந்துவீச்சாளர்கள் என்று குரல்கள் எழுப்பப்படும் வேளையில், அதன்பின்னர் நிறைய வேகங்கள் வந்தும், ஜாம்பவான் ஜாஹீர்கானைத் தொட இயலவில்லை.

ஆனால் காலம் சச்சின் என்ற தெரிவாளரின் கண்ணில் ஜாவிட்கான் எனும் கிராமத்துப் பையனைக் காண்பித்திருக்கிறது. எல்லோரையும் விஞ்சி ஜாவிட்கான் முத்திரை பதிக்கப் போகிறாரா? சச்சின் தொட்டதெல்லாம் பொன். எனவே ஜாவிட்டும் பொன்தான். பொன் கொழிக்கும் ஐ.பி.எல் சச்சின் ஊடாக ஜாவிட்டுக்கு பொற்காலத்தைக் கொடுக்கட்டும்.

# இனி மாத்தியோசி



**தென் ஆபிரிக்கா,** இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் கடந்த மாதங்களில் மோதிக் கொண்டபோது இங்கிலாந்தின் ஸ்ரீபன் பின் (Steven Finn) பந்துவீச்சின்போது அவரின் பக்கத்தில் உள்ள விக்கெட்டுக்களைத் தட்டிவிட்ட சந்தர்ப்பங்கள் சர்ச்சைகளைக் கிளப்பியிருந்தது. அது ஏன் எப்படி நடைபெறுகின்றதென்று யாருக்கும் புரியவில்லை. அதோடு அது தற்செயல் செயற்பாடு என்றாலும் கூட தவறானதென்றும் அவருக்குப் புரியவில்லை. இப்படியான சந்தர்ப்பங்கள் எப்போதாவது ஒரு முறைதான் நடப்பதுண்டு. ஆனால் இவருக்கு எப்போதுமே நடந்து கொண்டிருந்தது.

ஒரு சந்தர்ப்பத்தில் தென்னாபிரிக்க அணித்தலைவர் கிரேம் ஸ்மித் இவரது பந்துவீச்சில் விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். ஆனால் அந்தக் குறிப்பிட்ட பந்தை வீசும்போது இவர் விக்கெட்டை தட்டி விட்டிருந்தார். அதனால் ஆட்ட இழப்புக் கொடுக்கப்படவில்லை.

இதுபோன்ற சர்ச்சைகளுக்கு இப்போது ஐ.சி.சி ஒரு முடிவு கண்டுள்ளது. அதாவது இனிமேல் இப்படி நடந்தால் அது No Ball என்று கருதப்படும் என்றும் இந்த நடைமுறை ஏப்ரல் 30 முதல் அமுல்படுத்தப்படுகிறது என்றும் சிம்பாவே எதிர் வங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி மே 30 ஆம் திகதி புலவாயோ நகரில் நடைபெறும்போது செயற்பாடு நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

எனவே இனிமேல் FINN போன்ற வேகப் பந்துவீச்சாளர்கள் சற்று அவதானமாக அடக்க மாக இருப்பார்கள் என்று நம்பலாம். No Ball என்று அறிவித்தது மட்டுமன்றி அதற்கு Free hit உம் கொடுத்தால் இன்னும் அவதானம் அதிகரிக்கும். ஆனால் அது பற்றித் தெரியவில்லை.

என்றாலும் இப்படியான தவறுகள் இனி வருங்காலத்தில் நடைபெறும் போது இந்த No Ball ஐ Finn Ball என்று அடித்தால் இன்னும் கனதியாக இருக்கும்.

# திறமைக்குச் சவால்



**2013 -2014** காலத்துக்கான அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களின் ஒப்பந்த நிகழ்ச்சி நிரலில் ஒரு ஆச்சரியம் நடைபெற்றுள்ளது. அதாவது கடந்த வருடம் ஒப்பந்தப் பட்டியலில் கீழ்நிலைப் பட்டியல் வீரர்களில் ஒருவராக இருந்தவர் மிட்சல் ஸ்டாக். அப்பொழுது அவரது ஊதியம் 230,000 டொலர்கள் மட்டுமே. ஆனால் 2012-2013 பருவ காலத்தில் இவர் மூன்றுவிதமான கிரிக்கெட் போட்டிகளிலும் அதி திறமையைக் காட்டியதில் முதல் வகை ஒப்பந்த வீரர்கள் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளார். அதாவது ஒப்பந்தப் பட்டியலின் முதல் ஐந்து பேரில் இவரும் ஒருவர்.

அணித்தலைவர் மைக்கல் கிளார்க், உபதலைவர் ஷேன் வெட்சன் ஆகியோருடன் அதியுயர் இடத்தைப் பகிர்ந்து கொள்கிறார் ஸ்டாக். எனவே ஆறு இலக்க வருமானம், தற்போது சடுதியாக ஏழு இலக்க வருமானமாக மாறியுள்ளது. அதாவது பத்து இலட்சம் டொலர்களைக் கடந்த வருமானம் பெறும் வீரராக மாறியுள்ளார். எனவேதான் மிட்சல் ஸ்டாக்கின் திடீரென்ற உயர்ச்சி அவுஸ்திரேலிய கிரிக்கெட் வட்டாரத்தில் மிகப் பெரிய ஆச்சரியத்தை உருவாக்கியுள்ளது. ஆனால் வரவேற்கப்பட்டும் உள்ளது. வரும் ஜூலை மாதம் ஆஷஸ் தொடரில் இங்கிலாந்துக்கு எதிராக இவர் பந்துவீசுவதை எல்லோரும் எதிர்பார்க்கவும் தொடங்கி விட்டார்கள். மேலும் சரியான கணிப்புகள் கிடைக்கும்போது யாருக்கும் திறமை பீறிட்டுப் பாயும். மிட்சல் ஸ்டாக்கிடமும் அதனை எதிர்பார்க்கலாம்.

# கரிபியனில் பண மழை



**நியூசிலாந்து** கிரிக்கெட் வீரர் றொஸ் ரெய்லர் அணித் தலைமையில் இருந்து நீக்கப்பட்டது நியாயமற்றது என்று முன்னாள் அணித் தலைவர்கள் அமைப்பால் மீண்டும் விடயம் கிளறப் பட்டுள்ள நிலையில், மே தொடக்கம் ஜூன் வரையான கால இடைவெளியில் இங்கிலாந்தில் விளையாடவுள்ள அணிக்கு பிரெண்டன் மெக்கலமே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை றொஸ் ரெய்லர் அணியில் ஒரு வீரராக இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை கரிபியன் பிறீமியர் லீக் போட்டிகளில் விளையாட றொஸ் ரெய்லர் அழைக்கப் பட்டுள்ளமை தனக்கு மிகவும் ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதாக றொஸ் ரெய்லர் கூறியுள்ளார். இதுவரையில் கரிபியன் பிறீமியர் லீக் சுற்றுப்போட்டிகள் வெளிநாட்டு வீரர்களாகக் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளவர்கள் ரிக்கி பொன்ரிங், மற்றும் கில்கிறிஸ்ட் இருவர் மட்டுமே.

முதன்முதலாக கரிபியன் தீவுகளில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் ஜூன் 29 முதல் ஒகஸ்ட் 26 வரை நடைபெறவுள்ளன. றொஸ் ரெய்லர் முன்னதாக இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர், ராஜஸ்தான் றோயல்ஸ், டெல்கி டெயார் டெசில்ஸ் அணிகளுக் காக விளையாடியவர். புனேவாரியர்ஸ் அணிக்காக விளையாடிக் கொண்டிருக்கிறார். கரிபியன் பிறீமியர் லீக்கை பொறுத்தவரை ஆறு நாடுகள் அணிகளாகக் களம் இறங்குகின்றன.

அன்ரீகுவா மற்றும் பார்புடா, பார்படோஸ், கயானா, ஜமெய்க்கா, சென்ட்லூசியா மற்றும் டிரினிடாட் அன்ட்டுபாகோ, இந்த அமைப்பின் நிபந்தனைகளின்படி பதினைந்து வீரர்கள் ஆட்டத்துக்குத் தெரிவு செய்யப்படவேண்டும். இதில் நான்கு பேர் மட்டுமே வெளி நாட்டு வீரர்களாக இருக்கமுடியும். அத்துடன் நான்கு பேர் இருபத்தி மூன்று வயதுக்கு உட்பட்டவர்களா கவும் இருக்கவேண்டும். இப்பொழுதுதான் வெளிநாட்டு வீரர் களின் ஒப்பந்த வேலைகள் ஆரம்பமாகியுள்ள தால் இலங்கை வீரர்கள் பலரையும் கூட கரியியன் தீவுகளில் காணமுடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

# காதிலை பூ

### கந்தசாமி




**வணக்கமுங்கோ. நாட்டில புதிய புதிய குழுக்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. பொதுபல சேனா, ராவய சேனா, ஆதிதிராவிட சேனா, ராவண பலய, இந்தப் பெயர்களைப் பார்க்கும்போது நாட்டில் பலபேருக்கு இப்பதானுங்கோ ஆண்மை ஞாபகத்துக்கு வந்திருக்குதுங்கோ.**

உந்தக் கடுப்பில வாத்தி திரியிறாருங்கோ. என்ன வாத்தி முன்னம் மாதிரி உங்களை கோயில் பக்கம் காணமுடியுதில்லை எண்டு கேட்டதுக்கு. வாத்தி சொன்ன பதிலை கேட்டு மலைச்சுப் போயிட்டேனுங்கோ.

வாத்தி சொன்ன பதில் இதுதானுங்கோ.

புலிகள் இருந்தவரைக்கும் ஒரு பிரச்சனையாக இருந்தது. இப்போது பல பிரச்சனையாக மாறியிருக்குதுங்கோ. உதில ஹைலைட் என்ன தெரியுமோ சிலபேர் நாங்கள்தான் இந்த நாட்டில காக்கிச் சட்டை போடாத பொலிஸ்காரர்கள் எண்டு சொன்னதுதானுங்கோ.

அப்படிச் சொன்னதைக் கேட்டு பொலிஸூம் ஒண்டும் செய்யவில்லை. பொலிஸூக்கு உத்தரவு போடுறவையும் கண்டு கொள்ளவில்லையுங்கோ. பிறகு பெப்பிலியானவில வர்த்தக கட்டடம் தாக்கப்பட்டதில தங்களுக்கு தொடர்பு இல்லை எண்டும். குற்றவாளிகளை பொலிஸார்தான் கண்டுபிடிக்க வேணு மெண்டும் சொல்லிச்சினமுங்கோ. இவை காக்கிச்சட்டை போடாத பொலிஸ் எண்டால் இவையெல்லோ குற்றவாளிகளை கண்டுபிடிக்க வேணும் எண்டு திருப்பிச் சொல்லவும் ஒரு பயலுக்கும் வாயில்லாமல் போயிட்டுதுங்கோ.

பிறகு பெப்பிலியான சம்பவத்தில சம்மந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நபர்களின்ர விடுதலைக்கு வர்த்தக உரிமையாளரின்ர விட்டுக்கொடுப்புத்தான் காரணம் எண்டு விட்டாங்கள். அடுத்த நாள் நம்முடைய நீதி அமைச்சர் சொல்லுறார். அது விட்டுக்கொடுப்புக்கு காரணம் அழுத்தம்தான் எண்டு சொல்லுறார். அப்புடியெண்டால் உள்ளுக்குள்ள என்ன நடக்குதெண்டு எனக்கு ஒண்டும் விளங்குதில்லையுங்கோ.

கிளிநொச்சியில குடும்பச் சண்டை நடந்தாலே வீட்டுக்கதவைத் தட்டி ஏய் என்ன சத்தம்? சத்தம் போடாம படுங்க எண்டு மாத்தையாமார் சொல்லுற சூழலில அரசியல் கட்சி அலுவலகத்தை தாக்கினவையையும். பத்திரிகை அலுவலகத்தை தாக்கினவையையும் இன்னும் யாரெண்டு கண்டுபிடிக்க முடியல்லை யாமுங்கோ. அதில ஒரு பகிடி தெரியுமோ? அரசியல் அலுவலகத்தின் மீது கற்களை வீசியவர்கள் கற்களை வீசுவதும் பிறகு ஓடிப்போய் மரங்களுக்குப் பின்னால் தற்காப்பு நிலை எடுப்பதுமாக பதுங்கியதையும் பார்க்கேக்க சிரிப்புத்தானுங்கோ வந்திச்சுதுங்கோ. அவையின்ர நினைப்பு ஏதோ கைக்குண்டை எறிஞ்சு போட்டு திருப்பி வரக்கூடிய துப்பாக்கித் தாக்குதலுக்கு பதுங்குவதுபோலவும் இருந்திச்சுதுங்கோ. அப்புடியெண்டால் உந்த வித்தை யாருக்குங்கோ தெரியும்? உது சனத்துக்கே தெரியுமே. ஆனால் அம்மா சத்தியமாகச் சொல்லுறேனுங்கோ எனக்கெண்டாலுங்கோ ஒண்டுமே தெரியுதில்லையுங்கோ.

எல்லாம் ஒரே மாயாஜாலமாக இருக்குதுங்கோ. தமிழ்நாட்டுக் குழப்பங்களாலை இந்திய மத்திய அரசு பெட்டிப்பாம்பாக அடங்கிப் போயிருக்கும் இந்த கெப்பில சீனாவின் பொருளாதார நிபுணர்களும். பாதுகாப்பு பிரதிச் செயலாளரும் வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து மக்களைச் சந்திக்காமல் வேறு வேறு முக்கியமான வேலைகள் தொடர்பில் ஆராய்ந்துவிட்டுப் போயிருக்கினமுங்கோ. சீனாவின்ர விளையாட்டுத் தெரியும்தானே. சும்மா விளையாட்டு மாதிரித்தானுங்கோ இருக்கும் திடீரெண்டு தானுங்கோ பூகம்பமாக வெடிக்கும். பிறகு ஐயோ சீனா அப்புடிச் செய்திட்டானே. இப்புடிச் செய்திட்டானே எண்டு கத்துவினம்.

அது எப்படி இருக்கும் தெரியுமோ. முப்பது வருசமாக இலங்கையில சனம் செத்தபோது சும்மா இருந்து சினிமா கட்டவுட்டுகளுக்கு பால் ஊத்தி கூத்தாடிக் கொண்டிருந்தவை. இறுதிப் போர் நடைபெற்றபோது காயும் பிஞ்சுமாக ஒரு இனம் துடிக்க துடிக்க சிதறி பலியாகியபோது அங்க தீக்குளிச்சவனைப்பார்த்து தீண்டாதவையைப் போல் தள்ளியிருந்து பார்த்தவை இப்ப எல்லா அநியாயமும் நடந்து மூண்டு வருசமும் முழுசா முடிஞ்சு. நாலாவது வருஷமும் வந்து உதிக்கப்போகுது. இப்ப போய் ஐய்யையோ தமிழ் மக்களை கொன்னுபோட்டாங்களே. பன்னிரெண்டு வயசு பாலகனை படுகொலை செய்துபோட்டாங்களே. எண்டு கத்துறதும். போராடுறதையும் பார்த்தால் எங்களுக்காக போராடுறதாகச் சொல்லுற அவையளுக்காக மனசு ஒத்துப்போகுதே இல்லையுங்கோ. இந்த இலட்சணத்தில தமிழ் நாட்டுப் போராட்டங்கள் எதைச்சாதிக்கும் எண்டு கேட்டுப் போடாதிங்கோ. எனக்கெண்டாலுங்கோ உதுகளைப் பற்றி ஒண்டுமே தெரியுதில்லையுங்கோ.

உப்பிடி ஒண்டுமே தெரியாத குழப்பத்தில கோயிலுக்குப் போனால் சாமிக்குக் கூட பிடிக்காதுங்கோ. அதாலைதான் நான் அந்தப் பக்கம் போறதை கொஞ்சம் குறைச்சுக் கொண்டேனுங்கோ. பார்ப்போமுங்கோ உந்தக் குழப்பங்கள் கொஞ்சம் குறைஞ்சாப் பிறகு மீண்டும் கோயிலில சந்திப்போமுங்கோ

எண்டு சொல்லிப்போட்டு வானத்தைப் பார்த்து ஏதோ சொல்லிக் கொண்டு போனாருங்கோ. அவர் போனதைப் பார்க்கேக்க கிட்டடியில அவருக்கு தட்டிடுமோ எண்டு பயமாக இருந்திச்சுதுங்கோ.

**யாவும் கலப்படமற்ற பொய்**




**முரடனும்,** மூர்க்கத்தன்மான முசோலினியை. அவரது தாயார் சேர்ஜ் பள்ளிக்கு அனுப்பினார். கத்தோலிக்கப் பாதிரியார்கள். தன் தறுதலை மகனின் தரங்கெட்ட குணத்தை மாற்றி. நல்வழிப் படுத்துவார்கள் என்ற நம்பிக்கையில். ஆனால் சிறுவனான முசோலினி. சேர்ஜ் சபள்ளியில் ஒரு மாணவனின் முதுகில். கத்தியினால் குத்திப் படுகாயம் விளைவித்தான். நாற்பது ஆண்டுகளுக்குப் பின் இதே போல பிரான்ஸ் நாட்டின் முதுகில் குத்தி. இரத்த வெள்ளத்தில் மிதக்கும்படி செய்ததை சரித்திரம் கூறுகிறது. சர்ச் பள்ளியின்பாதிரிய ஆசிரியர்கள். பெனிடோ முசோலினியைப் பள்ளியிலிருந்து வெளியேற்றினார்கள். 'உன் ஆன்மா நரகத்தைப் போல கறுப்பானது' என்ற கூறி. தன் தோல்விகளுக்கு - சங்கடங்களுக்குத்தானே காரணம் என்று முசோலினி எப்போதாவது நினைத்ததுண்டா? இல்லை. இல்லவே இல்லை. தன்னைத் தவிர மற்றவர்களைத்தான் குற்றம் சாட்டினார். 'நான் குழந்தையாக இருக்கும்போது யாருமே என்னிடம் பரிவு காட்டவில்லை. ஏழ்மையில் வளர்ந்தேன். என் வாழ்வு எனக்குக் கசப்பையே கற்றுத் தந்தது. இந்நிலையில் நான் எங்கிருந்து இரக்கக் குணத்தைப் பெறமுடியும்? முடியாது. அது எனக்குக் கிடைக்கவே இல்லை. அப்படி இருக்க நான் முரடனாகவும் இரக்கமற்றவனாகவும் இருப்பதாக மக்கள் ஆச்சரியப்படுவானேன்?' என்று முசோலினியே பின்னாளில் தன்னை பற்றிச் சுயவிமர்சனம் செய்துள்ளார்.

முசோலினி எங்கு சென்றாலும் வெறுப்பையும் வன்முறையையும் வெளிப்படுத்துவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருசமயம் ஸூரிச் நகரில் ஒரு விடுதியின் பணிப்பெண், ஒரு ஷில்லிங் கூடுதலாக பில், போட்டுவிட்டாள்.

**(தொடரும்...)**

# இந்தவாரம் உங்கள் பலன்

**(11.04.2013 தொடக்கம் 17.04.2013 வரை)**

## மேடம்

திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்து வருவதற்கான மயங்சிகளில் ஈடுபடுவீர்கள். தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் உண்டாகுவதோடு மருத்துவச் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பண உதவிகள் உறவினர்களால் கிடைக்கும். நீண்ட காலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்து சேரும் காலமாகும். தீராத நாட்பட்ட நோய்களுக்கு விடை காணுவீர்கள். பிள்ளைகளால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைய வாய்ப்புகள் உள்ளது.

## இடபம்

வெளிநாடு செல்லுதல் போன்ற புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். விபரீதமான எண்ணங்களை விட்டொழித்து காரியத்தில் கவனமாய் இருங்கள். சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயத்தில் சாதகமான நல்ல முடிவுகளை எதிர்பார்க்கலாம். உடம்பில் முதுகு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். உற்றார் மற்றும் உறவினர்களின் எதிர்பாராத திடீர் வரவு-களால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். தேவையற்ற நண்பர்களின் தொடர்புகளால் பிரச்சினைகள் வர இருப்பதால் கவனமுடன் பழகுதல் நல்லதாகும்.

## மிதுனம்

உடம்பில் தோல் மற்றும் இரத்த சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகும். விட்டுப் போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. கண்களில் கவனமுடன் இருப்பது நல்லது. பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டாலும் மிகுந்த பிரயாசையின் பேரில் சமாளித்துக் கொள்வீர்கள். நெடுநாட்களாகப் பிரச்சினையில் இருந்த குடும்பச் சொத்துக்கள் கைக்கு வந்துசேரக் கூடிய காலமாகும். அரசு வழக்குகளில் சாதகமான நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம்.

## கடகம்

பொருளாதாரத்தில் இதுநாள் வரையில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காணப்படும். எதிர்பாராத நீண்டதூரப் பயணங்களின் மூலம் மனம்நிறைவடைய வாய்ப்பு உள்ளது. விளையாட்டுத் துறைகளைச் சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுகள் கிடைக்கும் புதிய பெரிய மனிதர்களையும் அரசியல்வாதிகளையும் சந்திக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்கும் அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் காரணமற்ற பிரச்சினைகள்வர இருப்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் பேசிப்பழகுதல் நல்லதாகும்.

## சிங்கம்

கணவன், மனைவி உறவுகளில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்த சுமூகமான உறவுகள் ஏறபடும். நண்பர்களால் வீண் விவாதங்களும் தொல்லைகளும் வந்துபோகும். உடம்பில் மூளை நரம்பு எலும்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். சூதாட்டம் போன்ற காரியங்களில் தலையிட்டு பொருள் இழப்பு ஏற்பட இருப்பதால் சூதாட்டங்களைத் தவிர்த்தல் நல்லதாகும். வீடுகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக பணச்செலவுகள் வந்துசேரும். பூர்வீக இடங்களை விட்டு மாறிச் செல்லத் திட்டம் போடுவீர்கள். நல்லது.

## கன்னி

நண்பர்களால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம். குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். உடல்நிலையில் கண், காதுகளில் மிகவும் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். விட்டுப்போன கணவன், மனைவி உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. தந்தை, மகன் உறவுகளில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். பல காலமாக தீராத நோய்களுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய் நீங்கும்.

## துலாம்

குலதெய்வ ஆலயங்களைத் திருத்தி கட்டப்போட்ட திட்டங்களில் சிறிய தடைகளின் பேரில் வெற்றி அடைவீர்கள். வெளிநாடு சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களால் சில ஆதாயங்கள் வந்து சேருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. சம்பந்தம் இல்லாத அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு மனக் கவலை அடையாதீர்கள். மற்றவர்களுக்காக ஜாமீன் போடுவதை தவிர்க்கவும். குல தெய்வ வழிபாடு செய்துவருதலால் கிரக தோசங்கள் நீங்க வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.

## விருச்சிகம்

தந்தை, மகன் உறவில் சிறிய கருத்து வேறுபாடுகள் வந்துநீங்கும். உடம்பில் வாயு மற்றும் ,வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. குடும்பச் சொத்துக்கள் போன்ற விசயத்தில் நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். உடம்பில் உஷ்ணம், காய்ச்சல் போன்ற உபாதைகள் வந்துபோகும். வங்கிகளால் எதிர்பார்த்து இருந்த கடன் தொகைகள் கிடைக்கும். கொடுக்க வேண்டிய பழைய கடன்களை கொடுத்து புதிய கடன்களை வாங்கத் திட்டம் போடுவீர்கள்.

## தனுசு

குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. உத்தியோகத் துறையினருக்கு பணி இடமாற்றமும் பதவி உயர்வுகளும் வரக்கூடும். குலதெய்வ ஆலயங்களைப் புதுப்பித்தலுக்கான முயற்சிகளில் நற்பெயர் பெறுவீர்கள். நாட்பட்ட பழைய கடன்கள் மீண்டும் தொல்லைதர வாய்ப்பு உள்ளது. நீண்ட காலமாக புதிய கட்டடம் கட்டப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். குல தெய்வ வழிபாட்டிற்காக தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள நேரும்.

## மகரம்

உற்றார், உறவினர்களின் வருகையால் பொருட்செலவுகள் உண்டாகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் செய்யாத குற்றங்களுக்காக காரணமற்ற வீண் பிரச்சினைகள் வந்துசேரும் என்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். சம்பந்தம் இல்லாத நபர்களால் எதிர்பாராத தனவரவுகள் உண்டாகும். வீட்டைத் திருத்திக் கட்டுவதில் மிகுந்த அக்கறையுடன் திட்டம் போடுவீர்கள். கணவன், மனைவி உறவுகளில் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கி சுமூகமான சூழல் உருவாகும்.

## கும்பம்

உறவினர்களின் வரவால் பொருள் வரவும் மனச்சந்தோசமும் உண்டாகும். உடல்நிலையில் இருந்து வந்த நாட்பட்ட நோய்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும். நண்பர்களால் ஆதாயம் இல்லை. பெண்கள் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நன்று. புதிய கடன் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். நீண்ட நாட்களாக தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்களில் வெற்றி அடைவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மீனம்

மற்றவர்களை நம்பிப் பணம் பொருள் கடன் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். அநாதைகளுக்கு உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். வெகுகாலமாக நினைத்துக்கொண்டு இருந்த கூட்டுத்தொழில் முயற்சிகளைத் தொடங்கினால் மிகவும் நல்ல பலன்கள் கிடைக்கும். பொருளாதாரத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். பிள்ளைகளுக்கு எதிர்பார்த்து வந்த வேலைவாய்ப்புகள் கிடைக்கும். கணவன், மனைவி உறவில் விரிசல்களும் வீண் மனக்குழப்பங்களும் வந்து போகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)








## கோடீஸ்வரியின் அண்ணா

சகோதர, சகோதரிகளில் ஒருவர் கார், பங்களா என்று வாழ்வதும் உடன்பிறந்த மற்றவர்களை அவர்கள் கண்டுகொள்ளாமல் இருப்பதும் உலகம் முழுக்க நடக்கிறது. வீட்டுக்கு வீடு வாசற்படி. பொப் பாடகி மடோனா வீட்டிலும் அதே வாசற்படி. சூடம் ஏற்றி சத்தியம் செய்தால்கூட யாரும் நம்பமாட்டார்கள்... உலக இசை டூர், அல்பம் வெளியீடு என்று இன்னமும் பரபரப்பாக இருக்கிறார். லேட்டஸ்ட் நிலவரப்படி, அவரது சொத்து மதிப்பு ரூ.5,500 கோடியை தாண்டிவிட்டது.

இந்நிலையில், அவரது அண்ணன் அன்டனி சிசோன் (56) சாப்பிடக்கூட வழியின்றி ரோட்டில் அலைகிறார் என்று அமெரிக்க பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன. அவர் கூறுகையில், பொப் புயல் என்று உலகமே புகழும் மடோனா என் தங்கை. ஆனால், என் நினைப்புக்கூட அவளுக்கு கிடையாது. நான் இருக்கேனா, செத்தேனா என்றுகூட தெரியாது. அவள் கோடீஸ்வரி என்பதில் எனக்கு எந்த பயனும் இல்லை, அதில் எந்த பெருமையும் இல்லை. அவள் மீது எனக்கும் பாசமோ, அன்போ கிடையாது. கடந்த 3 ஆண்டுகளாக இந்த பாலத்தின் அடியில்தான் வசிக்கிறேன். உடல் விறைத்துப் போகும் அளவுக்கு குளிர் வீசுகிறது. நான் எப்படி எல்லாமோ இருக்கவேண்டும் என்று அப்பா ஆசைப்பட்டார். அதன்படி நான் இல்லை. குடிகாரன் என்று முத்திரை குத்தி குடும்பமே என்னைத் துரத்திவிட்டது. யாராவது உதவி செய்தால் என் வாழ்க்கையும் நல்லபடியாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.


## முதல் ஈஸ்டரை மிகவும் கோலாகலமாக கொண்டாடிய போப்












பெரிய வியாழன் அன்று ரோம் நகரில் உள்ள கசல்டெல் மர்மோ என்ற சிறார்கள் சீர்திருத்தப் பள்ளி சிறையில் இளம் கைதிகளின் கல்களைக் கழுவி முத்தமிட்போது....



## பாம்பும் மயங்கும்...

"பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது அந்தக்காலம்." பெண் என்றால் பாம்பும் மயங்கும் என்பது இந்தக்காலம் என்று பழமொழியை மாற்றும் அளவுக்கு பாம்புக்கும் பெண்களுக்குமுள்ள உறவு வலுப்பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

இங்கே மலைப்பாம்புடன் கடற்கரையிலே உல்லாசமாக போஸ் கொடுப்பவர் வேறு யாருமல்ல. நம்நாட்டு நங்கையான பிரியங்கா என்ற மொடல் அழகி தான்.

பேருவளை கடற்கரையில் உள்ளூர் புகைப்படப் பிடிப்பாளர் ஒருவரின் கெமராவில் கிளிக் செய்யப்பட்டவைதான் இந்த மங்கையும் மலைப்பாம்பும்.

வெளிநாடுகளில் வெயில் குளியல் செய்வதுபோன்று நம்ம மொடல், கடற்கரையில் பாம்புக் குளியல் செய்து எல்லோரையும் அசரவைத்துவிட்டாராம்.





## தானம்

தலைமுடியை தானமாக வழங்கிய சிறுவன் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு செயற்கை முடி(விக்) தயாரிப்பதற்காக லண்டனை சேர்ந்த சிறுவன் ஒருவன் தனது மூன்றாண்டு தலைமுடியை தானமாக வழங்கியுள்ளார். புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலைமுடி வெகுசீக்கிரத்தில் கொட்டிவிடும். இவர்களுக்கு விக்கு தயாரிப்பதற்காக தலைமுடியை தானமாக வழங்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் 3 வயது சிறுவன் ஒருவன் தான் சிறுவயதிலிருந்து ஆசையாக வளர்த்து வந்து நீண்ட கூந்தலை புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக தானமாக வழங்கியுள்ளான்.



## வித்தை

நமது நாட்டில் பாமபாட்டம் மற்றும் குரங்கை வைத்து வித்தை காட்டுவதுண்டு. ஆனால் சீனாவில் வீதியில் வித்தை காட்டும் இந்நபர் கொடிய பாம்புகளை தனது மூக்கினுள் நுழைத்து வாய்வழியாக எடுத்து பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

சீனாவில் பாம்பு வித்தை என்பது பலரையும் திகில் அடைய வைக்கிறது. காரணம் சீனர்களுக்கும் பாம்புகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ட்ராகன் எனப்படும் பாம்புகள் பற்றி சீன புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## வெட்கம்...

பிரிட்டன் இளவரசர் வில் லியம்ஸ் அவர் மனைவி மிடில்டனுடன் ஸ்கொட்லாந்துக்கு இரண்டு நாள் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளார். அதில், கிளாஸ் கோவில் அமைந்துள்ள எமிரேட்ஸ் அரினா விளையாட்டு அரங்கை சுற்றிப் பார்த்தனர். பின்னர் அங்கு கூடியிருந்த மக்களுடன் உரையாற்றியுள்ளனர். அப்போது சோனா ரிட்சி என்ற 4 வயது சிறுமி வில்லியம்சிடம் முத்தம் கேட்டுள்ளாள். அதற்கு ஒப்புக் கொண்டு கன்னத்தில் முத்தமிட குனியும்பொழுது அந்தக் குழந்தை வெட்கப்பட்டு முத்தத்தை ஏற்காமல் விலகிவிட்டது. இதனை சற்றும் எதிர்பாராத இளவரசர் உட்பட அங்கு கூடியிருந்தோர் அனைவரும் சிரித்துவிட்டனர்.